
www.padippakam.com

நவம்பர் 2002 ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



உலக வங்கி
கைக்கூலியின்
வாக்குமூலம்



கொலைக்
கருவிகளான
துப்பாக்கிகள்,
வீச்சரிவாள்,
பட்டாக் கத்திகளுக்கு
''ஆயுத பூசை''
நடத்துகிறார்கள்
ஆர்.எஸ்.எஸ்.
இந்து மதவெறியர்கள்.
''தேச பக்த'' வேடம்
போட்டுத் திரியும்....

# இந்து மதவெறியர்கள்தாம் பயங்கரவாதிகள்

www.padippakam.com

காவிரி:

# ரஜினியின் உண்ணாவிரதம் ஒரு கபட நாடகமே!


காவிரியில் தமிழகத்தின் உரிமைக்காக நெய்வேலியில் கண்டனப் பேரணியை நடத்தப் போவதாக அறிவித்தது நடிகர் சங்கம். முதலில் போராட்டத்தில் ஈடுபட வேண்டாமென்றும், பின்னர் தானும் கலந்து கொள்வதாக அறிவித்தும், அதன் பின்னர் தான் தனியாக உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும் அறிவித்து, கருங்காலிதனத்தில் இறங்கினார் காரியக் கிறுக்கன் ரஜினி.

''காவிரி கர்நாடகத்துக்குச் சொந்தம். தமிழகத்துக்கு அதில் உரிமை இல்லை. கொடுக்கிற தண்ணீரை வாங்கிக் கொண்டு போக வேண்டும்'' என்பதுதான் கர்நாடக அரசின் கருத்து. ரஜினியின் கருத்தும் அதுதான். எனவேதான் உச்சநீதி மன்றத் தீர்ப்பை காலில் போட்டு மிதிக்கும் கிருஷ்ணாவையோ, ரவுடித்தனம் செய்யும் ராஜ்குமாரையோ கண்டிக்காமல், ''நெய்வேலியிலிருந்து மின்சாரம் தராதே'' என்று நடிகர் சங்கம் போராடினால் கர்நாடகாவில் இருந்து தமிழர்களின் இரத்தம்தான் வரும் என்று எச்சரித்தார்.

செப்டம்பர் – 13 ஆம் தேதி ரஜினி உண்ணாவிரதம் இருப்பதாக அறிவித்ததும் பா.ஜ.க.வும், காங்கிரசும் அதை ஆதரிப்பதாகக் கூறி ஒட்டிக் கொண்டன. தி.மு.க., புதிய தமிழகம், விடுதலைச் சிறுத்தைகள் முதலான கட்சிகளும் உண்ணாவிரதத்தை ஆதரித்து, தமது பிழைப்புவாதத்தையும், சந்தர்ப்பவாதத்தையும் வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொண்டன.

இந்நிலையில், ''ரஜினியே! நீ முதலில் இந்தியன் என்றால் உண்ணாவிரதத்தை பெங்களூரில் நடத்தத் தயாரா?'' என்று கேள்வியெழுப்பி ஆயிரக்கணக்கில் துண்டறிக்கைகளை விநியோகம் செய்தன மக்கள் கலை இலக்கியக் கழகமும், புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியும்.

காலை பதினோரு மணியளவில் ரஜினி உண்ணாவிரதம் இருந்த மேடையிலிருந்து சில நூறு மீட்டர் தூரத்தில், சென்னையின் முக்கியப் பகுதியில் அண்ணா சிலையின் கீழ் கர்நாடக முதல்வர் கிருஷ்ணா மற்றும் கல்லுளி மங்கன் வாஜ்பாயின் உருவப் பொம்மைகளைத் தீயிட்டுக் கொளுத்தினர்.



ரசிகர்கள் என்ற பெயரில் அணி திரண்ட நூற்றுக்கணக்கான காலிகளின் கூட்டத்தைக் கிழித்துக் கொண்டு செஞ்சட்டையுடன் கம்பீரமாக முழக்கமிட்டபடியே தோழர்கள் மறியலில் ஈடுபட முயன்றனர். உடன் பதினான்கு தோழர்கள் கைது செய்யப்பட்டு, விசாரணைக்குப் பின் நள்ளிரவில் விடுவிக்கப் பட்டனர்.

கோமாளி ரஜினியின் கபடத்தனத்தை அம்பலப்படுத்தியும் தமிழகத்தின் உரிமையை வலியுறுத்தியும் நடைபெற்ற இப்போராட்டம், கூடி நின்ற மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.

தகவல்:
பு.ஜ.தொ.மு., சென்னை.

# சீர்காழியில் வி.வி.மு. பேரணி — ஆர்ப்பாட்டம்

''காவிரி நதி நீரில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டுவோம்! காவிரியில் தமிழகத்தின் உரிமையை மறுக்கும் கர்நாடக அரசின் அடாவடித்தனத்துக்குத் துணை போகும் மத்திய அரசின் ஆணை, அதிகாரங்களை ஏற்க மறுப்போம்!'' என்ற முழக்கங்களின் கீழ் சீர்காழி வட்ட விவசாயிகள் விடுதலை முன்னணி 10.10.2002 அன்று பேரணி மற்றும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியது.

தோழர் ந. அம்பிகாபதி தலைமையில் மதியம் 12.30 மணிக்கு சீர்காழி தொடர் வண்டி நிலையத்திலிருந்து பேரணி புறப்பட்டது. நகரின் முக்கிய வீதிகளின் வழியே முழக்க அட்டைகளை ஏந்திக் கொண்டு, விண்ணதிர முழக்கமிட்டுச் சென்ற தோழர்கள், வட்டாட்சியர் அலுவலகம் முன் கூடி கண்டன அர்பாட்டம் நடத்தினர்.

காவிரி பிரச்சனையில் ஓட்டுக்கட்சிகளின் துரோகத்தையும், உச்சநீதி மன்றம், மைய அரசின் வஞ்சகத்தையும், தமிழர்களின் உரிமைக்காகப் போராடுவதாகக் காட்டிக் கொண்டே, தமிழக உழைக்கும் மக்களின் மேல் பொருளாதாரத் தாக்குதல்களைத் தொடுத்துவரும் பாசிச ஜெயாவையும் அம்பலப்படுத்தும் விதமாக தோழர்களின் முழக்கமும், உரையும் அமைந்திருந்தன.



ஓட்டுக் கட்சிகளும், போலி கம்யூனிஸ்டுகளும் திகைத்து நிற்கும் விதமாக திரளான பொதுமக்கள் இப்பேரணி கண்டன ஆர்பாட்டத்தில் கலந்து கொண்டு, இனி புரட்சிகர அரசியல் பாதைதான் தங்களின் ஒரே நம்பிக்கையாக இருப்பதை அனைவருக்கும் உணர்த்தினர்.

தகவல்:
வி.வி.மு.,
சீர்காழி வட்டம்


படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 18

**இதழ் 1**

நவம்பர் 2002

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 10

மின் அஞ்சல் முகவரி:
puthiyajananayagam@hotmail.com

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அஞ்சல் பெட்டி எண். 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.


**கொலைக் கருவிகளான துப்பாக்கிகள், வீச்சரிவாள், பட்டாக் கத்திகளுக்கு ''ஆயுத பூசை'' நடத்துகிறார்கள் ஆர்.எஸ்.எஸ். இந்து மதவெறியர்கள். ''தேச பக்த'' வேடம் போட்டுத் திரியும்....**

# இந்து மதவெறியர்கள்தாம் பயங்கரவாதிகள்

''செய்யும் தொழிலே தெய்வம்'' என்கிற நம்பிக்கை அடிப்படையில் தொழிற் கருவிகளை வைத்து வழிபடுவதை, ''ஆயுத பூசை'' என நாம் அறிவோம். ஆனால், கொலைக் கருவிகளான வீச்சரிவாள், பட்டாக்கத்தி, துப்பாக்கி, தோட்டாக்களை வைத்து ஆயுதபூசை நடத்துபவர்களை என்ன செய்வது?

கசாப்புக் கடைக்காரன் பட்டாக்கத்தியை வைத்து செய்வதைக் கூட புரிந்து கொள்ள முடியும். அது, அவனது தொழில். ஆனால், இந்திய தேசியம், இந்தியக் கலாச்சாரம் ஆகியவற்றின் காப்பாளர்கள் என்கிற அடிப்படையில், நாட்டின் பிரதமர், துணைப் பிரதமர், அமைச்சர்கள், பல மாநில ஆளுநர்கள் போன்றவர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ள - சமூக பண்பாடு சேவை நிறுவனம் என்று கூறிக் கொள்ளும் ஆர்.எஸ்.எஸ். கொலைக் கருவிகளை வைத்துப் பொட்டிட்டு, பூவிட்டுப் பூசை நடத்தியிருக்கிறது.

ஆர்.எஸ்.எஸ்.-இன் நிறுவன நாளான விஜயதசமி அன்று, போபால் நகரில் இந்தச் சிறப்பு வழிபாட்டை நடத்தியிருக்கிறது, அவ்வமைப்பு. இதன் மூலம், அந்த அமைப்பின் தொழில் - அதன் சமூக - பண்பாட்டு சேவை என்பதே கொலைத் தொழில்தான் என்பதைப் பகிரங்கமாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

பயங்கரவாதம், பயங்கரவாதிகள், வகுப்புவாதம், மதவெறியர்கள் என்றாலே இசுலாமியர்களைத்தான் குறிக்கும் என்கிற கருத்தை இந்து மதவெறியர்களும் அவர்களின் ஆதரவாளர்களான பத்திரிக்கை, வானொளி முதலிய செய்தி ஊடகங்களும் ஏற்படுத்தியிருக்கின்றன. இன்னும் ஒருபடி மேலே போய், இசுலாமியர்கள் அனைவருமே வகுப்புவாதிகள், மதவெறியர்கள், பயங்கரவாத ஆதரவாளர்கள் என்கிற தோற்றத்தை ஏற்படுத்துகின்றன. இதற்கு மாறாக, ஆர்.எஸ்.எஸ்., விசுவ இந்து பரிசத், பஜ்ரங் தள் போன்ற சங்கப் பரிவாரங்கள் எனப்படும் அமைப்புகள் சமூக சேவகர்கள், தேச பக்தர்கள் என்றும் சித்தரிக்கப்படுகிறார்கள்.

ஆனால், இந்த அமைப்புகள், தாம் உண்மையில் பாசிச பயங்கரவாதிகள் என்பதைத் திரும்பத் திரும்ப நிரூபித்து வருகிறார்கள். கொலைக் கருவிகளை வைத்து சிறப்புப் பூசை நடத்தியும் அறிவித்திருக்கிறார்கள். இது தவிர, சொல்லாலும் செயலாலும் ஏராளமான சம்பவங்களில் வெளிக்காட்டியும் இருக்கிறார்கள்.

ஆர்.எஸ்.எஸ். முதலிய சங்கப் பரிவார அமைப்புகள் வகுப்புவாத - மதவெறி அமைப்புகள்தாம் என்று ஒப்புக் கொள்ளும் இந்துக்களிலேயே பலர், அவை, இசுலாமியர்கள், கிறித்தவர்கள் முதலிய சிறுபான்மை மதத்தவர்களுக்கு மட்டுமே எதிராகச் செயல்படுவதாக எண்ணுகிறார்கள். இல்லை, அவர்கள் இந்துக்கள் என்று முத்திரை குத்தப்படும் தாழ்த்தப்பட்ட மக்கள், பெண்கள் மற்றும் அனைத்து ஒடுக்கப்பட்ட சாதிகளுக்கும் எதிரான பயங்கரவாதிகள்.

இந்து மதவெறியர்களின் இத்தகைய பயங்கரவாதத்திற்குச் சான்றாக, கடந்த அக்டோபர் 16 அன்று அரியானா மாநிலம், கஜ்ஜார் மாவட்டம், துலினா கிராமத்தில் நடந்த ஒரு கொடூரக் கொலை நிகழ்ச்சி அமைந்துள்ளது.

துலினா கிராமத்தைச் சேர்ந்த ஐந்து பேர் உயிரோடுள்ள ஒரு பசுவின் தோலை உரித்துக் கொண்டிருப்பதாக அந்தப் பகுதிக் கோவில் திருவிழாவுக்குத் திரண்டிருந்த பக்தர்களிடையே விசுவ இந்து பரிசத்தினர் வதந்தி ஒன்றைப் பரப்பினர். உடனே ஒரு கும்பலைத் திரட்டிக் கொண்டு, துலினா கிராமத்துக்குள் புகுந்த அந்த இந்து மதவெறியினர், அங்கே செத்த பசுமாட்டின் தோலை உரித்துக் கொண்டிருந்த தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஐந்து பேரையும் கொலைவெறியுடன் தாக்கத் தொடங்கினர். உயிருக்குப் பயந்து கொண்டு அவர்கள் ஐந்து பேரும் அருகிலிருந்த போலீசு நிலையத்துக்குள் ஓடித் தஞ்சமடைந்தனர். போலீசு நிலையத்திற்கு முன்பு திரண்ட இந்துவெறிக் கும்பல், உள்ளே புகுந்த ஐந்து பேரையும் வெளியே இழுத்துக் கொண்டு வந்தது. அவர்களைக் கற்களால் தாக்கியும் உயிரோடு எரித்தும் கொன்றது. மாவட்ட நீதிபதி மற்றும் போலீசு துணை கண்காணிப்பாளர்ஆகியோர் கண் முன்னே பட்டப்பகலில் இக்கொடூரம் நிகழ்ந்துள்ளது.

போலீசும் இந்தக் கொலைவெறிச் சம்பவத்தில் பங்கேற்றதுடன், விசுவ இந்து பரிசத் பயங்கரவாதிகளுடன் கைகோர்த்துக் கொண்டு, கொலை செய்யப்பட்ட ஐந்து

படிப்பகம்

www.padippakam.com

பேர் மீதும் பசுவதைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கும் பதிவு செய்துள்ளது. கொலை செய்யப்பட்டவர்களுள் ஒருவன் 14 வயதுச் சிறுவன். இவர்கள் ஆடு, மாடு முதலிய பிராணிகளின் தோலை வியாபாரம் செய்பவர்கள். தங்களுக்கு இலஞ்சம் கொடுக்கவில்லையென்றால் பசுவதைத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்வதாக அவர்களை ஏற்கனவே போலீசு மிரட்டியுள்ளது.

இந்தக் கொலைச் சம்பவத்துக்கும் தமது அமைப்புக்கும் சம்பந்தமில்லை என்று விசுவ இந்து பரிசத் தட்டிக் கழித்தாலும், இந்தச் சம்பவத்தைப் போற்றும் வகையில் பகிரங்கமான ஊர்வலமும் நடத்தியிருக்கிறது. துலினா கொலைகள் குறித்து அறிக்கை விட்ட விசுவ இந்து பரிசத்தின் தலைவர் கிரிராஜ் கிஷோர், ''நமது சாஸ்திரங்களின்படி, பசுக்களின் உயிர் மிகவும் விலைமதிப்பற்றது'' என்று கூறி இருக்கிறார். இதன் மூலம் கொலை செய்யப்பட்ட ஐந்து தாழ்த்தப்பட்டவர்களின் உயிரைவிட பசுவின் உயிர் மேலானது என்று சாதித்துள்ளார்.

சமீபத்தில் பா.ஜ.க. அரசு திருத்தி எழுதி, உச்சநீதி மன்ற அனுமதியுடன் வழங்கப்படும் மத்திய அரசின் ஆறாம் வகுப்பு பாடப்புத்தகத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: ''பசுவைக் காயப்படுத்துபவர்கள் அல்லது கொல்பவர்களுக்கு நாடு கடத்துவது முதல் மரண தண்டனை வரை அளிக்கலாம் என்று வேதங்கள் போதிக்கின்றன.''

அதோடு, விசுவ இந்து பரிசத்தின் பிரதிநிதி ஒருவரை துலினா கிராமத்திற்கு அனுப்பி, உயிரோடிருந்த பசுவின் தோலை உரித்ததாகவும், அதன்மூலம் இந்துமத உணர்வு புண்படுத்தப்பட்டதாகவும், அதனால்தான் அந்த ஐந்து பேரை இந்து பக்தர்கள் கொன்றார்கள் என்றும் பொய்யான சாட்சிகளை உருவாக்க முயன்றிருக்கிறார்கள். இக்கொலைக்குக் காரணமானவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யவோ, கைது செய்து நடவடிக்கை எடுக்கவோ கூடாது என்று வி.இ.ப. மாநில நிர்வாகத்திடம் நிர்பந்தமும் கொடுத்துள்ளது.

துலினா கொலைச் சம்பவம் விசுவ இந்து பரிசத் குண்டர்களின் தலைமையின் தூண்டுதலால்தான் நடந்துள்ளது. ஆனால், சட்ட - நிர்வாகம் மற்றும் செய்தி ஊடகங்களின் பார்வையில் கும்பல் வன்முறைதான் காரணம் என்று சித்தரிக்கப்படுகிறது. இந்து மதவெறியர்களின் பயங்கரவாதச் செயல்கள் எல்லாம் கும்பல் வன்முறை வடிவத்திலேயே நடக்கின்றன. இந்துமத உணர்வு, நம்பிக்கை என்கிற பெயரில் அவை நியாயப்படுத்தப்படுகின்றன.

இந்து மத நம்பிக்கை, மத உணர்வு என்று சொல்லிக் கொண்டு என்ன வகை அடாவடிச் செயல்களையும், கொலைவெறி அக்கிரமங்களையும் மேற்கொள்ளலாம்; இயற்கை நீதியோ, சட்டபூர்வ நீதி மன்றத் தீர்ப்புகளோ தம்மைக் கட்டுப்படுத்தாது என்கிற பாசிசத் திமிரோடு இந்து மதவெறியர்கள் நடந்து கொள்கிறார்கள். இசுலாமிய நாடுகளில் முல்லாக்கள், குருமார்களை முன்னிறுத்தி அவர்களின் தீர்ப்பே இறுதியானது என்கிற முடிவில் ''ஷரியத்'' எனப்படும் காட்டுமிராண்டிச் சட்டம் அமலாக்கப்படுவதைப் போலவே, இந்து மதவெறியர்கள், இந்து சந்நியாசிகள், மடாதிபதிகள், சாமியார்கள் அடங்கிய கஞ்சா கும்பலை முன்னிறுத்தி தமது பயங்கரவாத நடவடிக்கைகளை அரங்கேற்றி வருகின்றனர். மத விவகாரங்களில் அரசோ, சட்டமோ, நீதிமன்றங்களோ தலையிட முடியாது என்று திமிரோடு நடந்து வருகின்றனர்.

இந்தத் தொழில்முறைக் காவி கும்பலையும், தொழில்முறை கிரிமினல் மாஃபியா கும்பலையும் கொண்டதுதான் ஆர்.எஸ்.எஸ். - விசுவ இந்து பரிசத், பஜ்ரங் தள், சிவசேனா முதலிய சங்கப் பரிவாரங்கள். ஏற்கனவே, இசுலாமிய எதிர்ப்பு, பாகிஸ்தான் எதிர்ப்பை பரவலாகப் பரப்பி வைத்திருக்கும் இந்தக் கூட்டம், ஏதாவது ஒரு சிறு சம்பவத்தையோ, காரணத்தையோ முன்வைத்து தனது பயங்கரவாதப் படுகொலைகளைக் கட்டவிழ்த்து விடுகிறது. இந்த நாட்டில் வாழும் இசுலாமியர்கள், கிறித்தவர்களும் - இவர்கள் அனைவருமே செல்வச் செழிப்போடும், பாதுகாப்பாகவும் வாழ்வதைப் போலவும், பார்ப்பன - பனியா உட்பட அனைத்து இந்து சாதியினரும் வஞ்சிக்கப்பட்டு, ஏமாற்றப்பட்டு, சுரண்டப்பட்டு வருவதாகவும், அவமானத்தாலும், காயம்பட்ட இதயத்தாலும் இந்துக்கள் துடித்துக் கொண்டு இருப்பதாகவும் கோயாபல்சு பாணியில் சங்கப் பரிவாரங்கள் புளுகிக் கொண்டே இருக்கின்றன.

குஜராத்தில் கோத்ரா இரயில் எரிப்பு சம்பவத்தைச் சாக்கு வைத்து ஆயிரக்கணக்கான இசுலாமியர்கள் உயிரோடு எரித்தும், வெட்டியும் கோரமான முறையில் கொல்லப்பட்டனர். அங்கு வாழ்ந்த இசுலாமிய சமுதாயம் முழுவதுமே சூறையாடப்பட்டு அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளது. இதெல்லாம், ''இந்து சமுதாயம் தொடர்ந்து ஏமாற்றப்பட்டு, சுரண்டப்படுவதே வாடிக்கை என்றாகிவிட்ட நிலையில், இன்று அதன் பதிலடியாக நடக்கிறது'' ''போலி செக்யூலர் அரசியல்வாதிகளின் நியாயமற்ற இந்துவிரோதப் போக்கின் காரணமாக இந்து சமுதாயம் இன்று குமுறும் எரிமலையாகிவிட்டது'' என்கிறார்கள். (ஆர்.எஸ்.எஸ். பத்திரிக்கை விஜய பாரதம், ஏப்ரல் 12)


ஆக, கோத்ரா ரயில் எரிப்பு போன்ற சம்புவத்திற்காக இந்து வெறியர்கள் காத்திருந்தார்கள்; அது, நடக்கவில்லை என்றாலும் வேறொரு காரணத்தைச் சாக்கு வைத்து மதவெறிப் படுகொலைகளைக் கட்டவிழ்த்துவிட அவர்கள் தயாராக இருந்தார்கள். ''கோத்ரா வன்முறைக் கும்பலின் கோரத் தாண்டவத்தை இந்திய அறிவு ஜீவிகள் நியாயப்படுத்தும் போது, கோத்ரா படுகொலை லீலைக்குத் தக்க பதி

**துலினா கிராமத்தில் இந்து வெறியர்களால் கொல்லப்பட்ட வீரேந்திராவின் மனைவி இலட்சுமி தேவி, அவரது மகன் மற்றும் உறவினர்கள்: இவர்களின் கண்ணீருக்குக் காரணமான இந்து மதவெறி, பயங்கரவாதம் இல்லையா?**



படிப்பகம்

www.padippakam.com



சோனியாவை ''இத்தாலி நாய்'' எனக் கீழ்த்தரமாகத் திட்டிய வி.இ.ப. தலைவர் பிரவீன் தொகாடியாவைக் கண்டித்து புது தில்லியில் காங்கிரசு நடத்திய ஆர்ப்பாட்டத்தின் மீது கற்களை வீசியெறிந்து தாக்கும் வி.இ.ப.வினர். இந்தக் குண்டர்கள்தாம் 'இந்து மதத் தொண்டர்கள்'!

லடியும் இயற்கையானதே'' என்கிறது ஆர்.எஸ்.எஸ்.

அகமதாபாத் நகரில் இந்து மதவெறியர்களின் பயங்கரவாதப் படுகொலைகளுக்குத் துணைநின்ற, ஆர்.எஸ்.எஸ். காரனும், நகர போலீசு ஆணையாளருமான பி.சி. பாண்டே, கோத்ராவிற்குப் பின் தொடர்ந்த கலவரம் குறித்து இவ்வாறு குறிப்பிடுகிறார்: ''சமுதாயத்தின் எல்லா மட்டத்திலுமுள்ள, கிராம - நகர, படித்த - படிக்காத, ஏழை - பணக்காரர் என்று எந்த வித்தியாசத்தையும் மறந்த, ஆண் - பெண் அனைவரது அடக்க முடியாத ஆவேசமான பதில் நடவடிக்கையே இந்தக் கலவரம். ஒவ்வொரு பகுதியிலும் 10, 15 ஆயிரம் எண்ணிக்கையில் ஊரே திரண்டெழுந்து தெருவில் இறங்கிய காட்சியை எனது 32 ஆண்டு கால காவல்துறை வரலாற்றில் பார்த்ததேயில்லை'' (மேற்படி விஜயபாரதம்)

பெரும் எண்ணிக்கையில் இருந்தது என்பதற்காக இந்துவெறியர்களின் பயங்கரவாத கும்பல் வன்முறையைக் கண்டு பிரமித்துப் புகழ்வதோடு, நியாயப்படுத்தவும் செய்கிறார்கள். இதுதான் இந்துமத வெறி பயங்கரவாதத்துக்கும், இசுலாமிய பயங்கரவாதத்துக்கும் இடையிலான வேறுபாடு. குண்டுவெடிப்பு போன்ற தனிநபர் - குழு பயங்கரவாதங்களில் இசுலாமியத் தீவிரவாதிகள் ஈடுபடுகின்றனர். இசுலாமிய தீவிரவாதத்தின் அங்கமாகவோ, துணையாகவோ, இசுலாமியச் சமூகம் இல்லை. ஆனால், ''இந்து சமுதாய''த்தின் ஒரு கணிசமான பகுதியே, இந்து மதவெறி பயங்கரவாதத்தை ஆதரிக்கிறது; குறைந்தது வடமாநிலங்களில் அவர்கள் இந்த நிலையை ஏற்படுத்தியுள்ளனர். அதோடு அரசாங்கம் மற்றும் அரசு நிர்வாகத்தின் ஆதரவையும் பெற்றுள்ளது. எனவேதான், கும்பல் வன்முறையை ஒரு பயங்கரவாத வழிமுறையாகக் கொண்டுள்ள சங்கப் பரிவார அமைப்புகள் சட்டத்துக்கு மேலானவர்களாக இருக்கின்றன.

இசுலாமிய சமுதாயத்துக்கு எதிரான பயங்கரவாதத்தை நியாயப்படுத்துவதற்காக, ''பாகிஸ்தானால் தூண்டிவிடப்படும் இசுலாமிய மதத் தீவிரவாதத்தை'' எப்போதும் எடுத்துக்காட்டுகின்றனர். கிறித்தவ பாதிரியார்களைப் படுகொலை செய்வது, கன்னித் துறவிகளைக் கற்பழிப்பது போன்ற பயங்கரவாதத்திற்கான காரணமாக, ''மேலை நாடுகளில் இருந்து நிதி உதவி பெற்று மதமாற்றச் செயல்களில் ஈடுபடுகிறார்கள்'' என்று கூறுகின்றனர்.

''பாகிஸ்தானின் தீய நோக்கங்களுக்கு பலியாகாமல் அதற்கு மாறாக, இந்து சமுதாயத்துடன் நல்லுறவு, இந்து உணர்வுகளுக்கு மதிப்பளித்தல், சர்வ தர்ம சம்பாவத்தில் நம்பிக்கை, தேச பக்தியை வெளிப்படுத்துதல் போன்ற நடத்தைதான், காயம்பட்டிருக்கும் இந்து இதயத்தை ஆற்றுவிக்கும் அருமருந்து. இந்து இதயத்தை வெல்லும் சாவி. அதில்தான் சிறுபான்மை மக்களின் பாதுகாப்பும் அடங்கியுள்ளது'' (விஜய பாரதம்) என்று ஆர்.எஸ்.எஸ். தலைமையிலான இந்துமதவெறி பயங்கரவாதிகள் பகிரங்கமாக மிரட்டுகின்றனர்.

இல்லையானால், ''குஜராத்தில் நடந்தது நாடு முழுக்கவும் நடக்கும். குஜராத் மாநிலத்தில் கோத்ரா சம்பவத்துக்குப் பிறகு நடந்தது ஒரு வெற்றிகரமான சோதனை. அதில் கிராமங்கள் முழுவதுமாக இசுலாமியர்களை அழித்து தூய்மைப்படுத்தப்பட்டது'' என்று கடந்த செப்டம்பர் 3-ந் தேதி அமிர்தசரசு நகரில் விசுவ இந்து பரிசத்தின் தலைவர் அசோக் சிங்கல் உருட்டி மிரட்டினார்.

இந்து சந்நியாசிகள், மடாதிபதிகள், சாமியார்கள் அடங்கிய கஞ்சா கும்பலை முன்னிறுத்தி இந்து மத வெறியர்கள், தமது பயங்கர வாத நடவடிக்கைகளை அரங்கேற்றி வருகின்றனர். மத விவகாரங்களில் அரசோ, சட்டமோ, நீதிமன்றங்களோ தலையிட முடியாது என்று திமிரோடு நடந்து வருகின்றனர்.

''இதன் பொருள் தெளிவாக உள்ளது. இசுலாத்தை தமது மத நம்பிக்கையாகக் கொண்டவர்கள் கொல்லப்பட்டார்கள் அல்லது விரட்டியடிக்கப்பட்டார்கள்; அவ்வாறு செய்ததை சிங்கால் வரவேற்கிறார். குஜராத் படுகொலைக்குப் பொறுப்பாளர்களான இசுலாமியர்கள் தமது 'மதப் புனிதப்போர் என்கிற எண்ணத்தை'க் கைவிடவில்லையானால், குஜராத் சோதனையை இந்தியா முழுவதும் திரும்பவும் செய்வோம் என எச்சரிக்கிறார்'' என்று இந்து நாளேடு எழுதுகிறது.

அதன்பிறகு, இவ்வளவு பகிரங்கமாக பேசுவது சரியல்ல என்று நாசுக்காக சுட்டிக் காட்டிய பா.ஜ.க. தலைவர் வெங்கையா நாயுடு, ''இப்படியெல்லாம் பேசுவது, பயங்கரவாதத்துக்குள்ளாகி விடும். மத வகுப்புவாத சக்திகளுடன் நம்மையும் சர்வதேச சமுதாயம் இணைத்துப் பார்ப்பதற்கு வாய்ப்பாகி விடும்'' என்று உபதேசித்தார். ஆனால், இதெல்லாம் இந்து மதவெறியர்களைப் பொருத்தவரை பூனை குட்டியைக் கவ்விக் கொள்வதைப் போன்றதுதான். மற்றபடி இது விமர்சனமோ, எச்சரிக்கையோ அல்ல.

எனவேதான், இந்து மதவெறியர்களின்வாய்க்கொழுப்பு பன்மடங்கு அதிகரித்திருக்கிறது. ''இந்துக்கள் தற்கொலைப் படை அமைப்போம்'' என்று கொக்கரிக்கிறார் சிவசேனா தலைவர் பால் தாக்கரே. இப்படிப் பேசுவது மதவெறியைத் தூண்டுவது என்று வழக்குப்போட்ட மராட்டிய காங்கிரசு அரசைப் பார்த்து ''கைது செய்து பார்!'' என்று மிரட்டுகிறார் தாக்கரே.

தொடர்ச்சி 21-ஆம் பக்கம்


படிப்பகம்

www.padippakam.com

# தமிழக முதல்வர் ஜெயா
# சூழ்நிலைக் கைதியா? உலக வங்கிக் கைக்கூலியா?

ரேசனில் வழங்கப்பட்டு வரும் அரிசியின் விலையை அக்டோபர் முதல் தேதி முதல் உயர்த்தியிருக்கிறது தமிழக அரசு. ரேசனில் 'மானிய' விலையில் வழங்கி வந்த இருபது கிலோ அரிசியில், முதல் பத்து கிலோ அரிசி பழைய விலையிலும் (ரூ. 3.50) அடுத்த பத்து கிலோ அரிசி ரூ. 6.00 என்ற விலையிலும் இனி விற்கப்படும்.

இந்த விலை உயர்வுக்கு இணையாக, "தமிழக அரசு நடத்தி வந்த நேரடி நெல் கொள்முதல் அக்டோபர் முதல் தேதி முதல் நிறுத்தப்படுகிறது; இனி தமிழ்நாட்டில் மைய அரசின் நெல் கொள்முதல் முறைதான் அமல்படுத்தப்படும்; நெல் கொள்முதலில் தமிழக அரசு மைய அரசின் முகவராக மட்டுமே செயல்படும்" என்றும் தமிழக முதல்வர் ஜெயா அறிவித்திருக்கிறார்.

பாசிச ஜெயாவின் இந்த இரண்டு பொருளாதாரத் தாக்குதல்களும் தமிழகத்தின் அடிமட்டத்திலுள்ள கூலித் தொழிலாளர்கள், விவசாயிகளை மட்டும் குறிவைத்துத் தொடுக்கப்பட்டுள்ளன. நெல் கொள்முதலை நிறுத்தியதன் மூலமும், ரேசன் அரிசிக்கு வழங்கப்பட்டு வந்த மானியத்தை குறைத்ததன் மூலமும் 826 கோடி ரூபாயை தனது கஜானாவில் பதுக்கி வைத்துக் கொண்டு விட்டது, தமிழக அரசு.

இதற்குப் பின்னரும்கூட, பாசிச ஜெயா கும்பலின் பணப் பசி தீரவில்லை. அதனால், டிசம்பர் முதல் தேதி முதல் மின் கட்டணங்களை உயர்த்தவும் திட்டம் போட்டுள்ளது, தமிழக அரசு. இக்கட்டண உயர்வின் மூலம் தமிழக மின்வாரியத்திற்கு இந்த ஆண்டு 624 கோடி ரூபாயும், அடுத்த ஆண்டு முதல் 3,700 கோடி ரூபாயும் கூடுதல் வருமானமாகக் கிடைக்கும். தமிழக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் இலவச மின்சாரத்தை நிறுத்துவதன் மூலம், அவர்களிடமிருந்து வருடமொன்றுக்கு 530.45 கோடி ரூபாய் கறக்கத் திட்டம் போட்டுள்ளது, தமிழக அரசு.

தமிழக மக்களின் மீது எந்த நேரத்தில் ஜெயா இந்தத் தாக்குதல்களைத் தொடுத்திருக்கிறார் என்பது கவனிக்கத்தக்கது. தமிழக நெசவுத் தொழில் நசிந்து போய், தமிழக நெசவாளர்கள் கஞ்சித் தொட்டிக்கு முன் கையேந்தி நிற்கும்பொழுது, காவேரிப் பாசனப் பகுதி விவசாயிகள் அரைகுறைப் பட்டினியோடு காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கும் பொழுது, பாசிச ஜெயா கும்பல் ரேசன் அரிசி விலையை உயர்த்தியிருக்கிறது.

தமிழகத்தில் ஏறத்தாழ 17 இலட்சம் விவசாயிகள் கிணற்றுப் பாசனத்தை நம்பித்தான் விவசாயம் செய்து வருகிறார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழகத்தில் பருவ மழை பெய்யாததால், நிலத்தடி நீர் அதல பாதாளத்திற்குச் சென்று விட்டது. தமிழகமே வறட்சியின் கோரப் பிடியில் சிக்கித் தவிக்கும் பொழுது, இந்த ஆண்டு விவசாயம் நடக்குமா என்பது கேள்விக்குறியாய் நிற்கும் பொழுது, தமிழக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் இலவச மின்சாரம் டிசம்பர் முதல் தேதி முதல் நிறுத்தப்படும் என அறிவித்திருக்கிறார், ஜெயா.

நெல் கொள்முதல் நிறுத்தம், ரேசன் அரிசி விலை உயர்வு, மின் கட்டண ஏற்றம் - இவையனைத்தையும் கனத்த இதயத்தோடு அறிவித்திருப்பதாகக் கூறுகிறார் ஜெயா. தமிழகத்திலுள்ள முதலாளிகள் அரசுக்குச் செலுத்த வேண்டிய எட்டாயிரம் கோடி ரூபாய் வரி பாக்கியை, அவர்களின் கழுத்தில் துண்டைப் போட்டு வசூலித்து இருந்தால், ஜெயாவின் இதயம் கனத்துப் போக வாய்ப்பு இருந்திருக்காது. ஆனால், என்ன செய்வது? முதலாளிகளை நினைக்கும் பொழுது, அவரின் இதயம் சர்க்கரைப் பாகாக இளகி விடுகிறது; ஏழைகளை நினைக்கும் பொழுது, கல்லைப் போல கனத்துப் போய் விடுகிறது.

கடந்த ஆண்டு நவம்பரில்தான் பேருந்து - மின் கட்டணங்கள், சர்க்கரை - பால் விலைகளை உயர்த்தியும்; சமையல் எண்ணெய் மற்றும் உள்ளாடைகளின் மீது கூடுதல் வரி விதித்தும்; அரசு மருத்துவமனைகளில் நுழைவுக் கட்டணம், சிகிச்சைக் கட்டணம் போட்டும் தமிழக மக்களிடமிருந்து 3500 கோடி ரூபாயைப் பிடுங்கிக் கொண்டார், ஜெயா,

இந்த வரி உயர்வு - கட்டண உயர்வுச் சுமையைச் சமாளிக்க முடியாமல் தமிழக மக்கள் திணறிக் கொண்டிருக்கும் பொழுதே, "பட்ஜெட்" என்ற பெயரில் அடுத்த பொருளாதாரத் தாக்குதல், கடந்த ஏப்ரல் மாதம் தொடுக்கப்பட்டது. அரிசி, கோதுமை, பருப்பு, உளுந்து ஆகிய உணவுப் பொருட்களைக் கூட விட்டு வைக்காமல் அனைத்தின் மீதும் வரிக்கு மேல் வரி போட்டு, 690 கோடி ரூபாய் மக்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்டது.

இந்த "பட்ஜெட்" தாக்குதல் நடந்து ஆறு மாதங்கள் முடிவதற்குள்ளாகவே, மீண்டும் மின் கட்டணமும், ரேசன் அரிசியின் விலையும் உயர்த்தப்பட்டுள்ளன. ஜெயா ஆட்சிக்கு வந்து ஒன்றரை ஆண்டுகள் முடிவதற்குள்ளாகவே, தமிழக மக்கள் மீது அடுத்தடுத்து மூன்று பொருளாதாரத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. கஜானா காலி, கஜானா காலி என ஒப்பாரி வைத்தே, வரிக்கு மேல் வரி போட்டு, தமிழக மக்களின் கோவணத்தைக் கூட உரிந்துவிடத் துணிந்து விட்ட இந்த ஆட்சிக்குப் பெயர் மக்களாட்சியாம்!

### சூழ்நிலைக் கைதியா? உலக வங்கியின் கைக்கூலியா?

"நிதி நெருக்கடியைச் சமாளிக்க சிறப்பு நிதி ஒதுக்கீடு 3 ஆயிரம் கோடி அளிக்குமாறு தமிழகம் விடுத்த கோரிக்கையை மத்திய அரசு ஏற்கவில்லை..."

"உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி ஆகியவற்றில் நிதி உதவி கோரிய போது, இங்கு பல திட்டங்களுக்கு வழங்கப்படும் மானியச் சுமை அதிகம் உள்ளதால் கடன் தர இயலாது எனக் கூறிவிட்டனர்."

"பொருளாதார சீர்திருத்தங்களை அமல் செய்தால் மட்டுமே இந்த வங்கிகளில் நிதி உதவி பெற முடியும்... எனவே, திவால் நிலையில் இருந்து மீண்டு, ஆரோக்கிய நிலைக்கு வரச் சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியம்" எனக் கூறி, ரேசன் அரிசி விலை உயர்வையும், நெல் கொள்முதல் நிறுத்தத்தையும் ஜெயா நியாயப்படுத்துகிறார். இதன் மூலம் தன்னைச் சூழ்நிலையின் கைதியாகக் காட்டிக் கொண்டு, மக்களின் கோபத்தில் இருந்து தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்.

ஜெயா ஆட்சிக் கட்டிலில் ஏறி உட்கார்ந்தவுடனேயே, மானியத்தை வெட்டி, ரேசன் அரிசி விலையை உயர்த்தினார். இதற்கு எதிராக, போலீசின் அடக்குமுறையையும் மீறி மக்கள் போராடத் தொடங்கியவுடன் அதைக்


படிப்பகம்

www.padippakam.com

கைவிட்டார். அதேசமயம், தமிழக மக்களை வறுமைக் கோட்டுக்கு மேலே, வறுமை கோட்டுக்குக் கீழே எனப் பிரித்து, ரேசன் அரிசி விலை உயர்வை மறைமுகமாக அமல்படுத்த முனைந்தார்.

தமிழக அரசு தமிழக விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்வதை, சென்ற ஆண்டே சதித்தனமாக நிறுத்தி விட்டது. இதைக் கண்டித்து காவிரிப் பாசன விவசாயிகள் போராடியபொழுது, போலீசை ஏவி, அவர்களின் மண்டையைப் பிளந்தார், ஜெயா.

அரசுக் கல்லூரிகளை வியாபாரமயமாக்கும் நோக்கத்தோடு, அவற்றைப் பல்கலைக்கழகங்களுடன் இணைத்து விட்டது தமிழக அரசு. இதைக் கண்டித்து கடந்த இரண்டு மாதங்களாகப் போராடிய தமிழக மாணவர்கள், தினந்தோறும் போலீசு அடக்குமுறையைச் சந்தித்தனர்.

அரசு வேலைக்கு ஆளெடுக்கத் தடை; 30 சதவீத அரசு ஊழியர்களை விருப்ப ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வீட்டுக்கு அனுப்பும் முயற்சி; அரசு ஊழியர்கள், போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய பஞ்சப்படி, போனசு போன்ற சலுகைகளை முடக்குவது; அரசு போக்குவரத்துக் கழகங்களை ஒழித்துக் கட்ட, இலாபமிக்க பேருந்துத் தடங்களைத் தனியாரிடம் விற்பது;

- இப்படி கடந்த ஒன்றரை ஆண்டுகளில் ஜெயா அரசு எடுத்து வரும் ஒவ்வொரு பொருளாதார சீர்திருத்த நடவடிக்கையும், உலக வங்கியின் கட்டளைதான். உலக வங்கியின் கட்டளைக்கு அடிபணிந்து ஜெயா எடுக்கும் சீர்திருத்த நடவடிக்கைகளை அரசு ஊழியர்களோ, போக்குவரத்துத் தொழிலாளர்களோ எதிர்க்கத் துணிந்தால், அதை ஒடுக்குவதற்காகவே வேலை நிறுத்தத் தடைச் சட்டம் ஜெயாவால் கொண்டு வரப்பட்டுள்ளது. பன்னாட்டு நிறுவனங்களுக்கு எதிராகப் போராடும் யாரையும், பயங்கரவாதி என முத்திரை குத்தி ''பொடா''வின் கீழ் கைது செய்ய முடியும்.

போலீசையும், அடக்குமுறைச் சட்டங்களையும் கையில் வைத்துக் கொண்டு, உலக வங்கியின் கட்டளைகளை தமிழகத்தில் வெறித்தனத்தோடு அமல்படுத்தி வரும் ஜெயா, தன்னைச் சூழ்நிலையின் கைதியாகக் காட்டி கொள்வது தமிழக மக்களை ஏய்க்கும் பம்மாத்துத் தவிர வேறில்லை!

இலவச மின்சாரம் ரத்து, மின் கட்டண உயர்வுப் பிரச்சினையில் அதற்கும் தனது அரசுக்கும் சம்மந்தமேயில்லை எனக் கூறி, நடுநிலைவாதியைப் போல நாடக மாடுகிறார், ஜெயா.





அரசுக் கல்லூரிகளைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்காதே எனப் போராடிய மாணவர்கள் மீது போலீசு அடக்குமுறையை ஏவிவிட்ட (மேல்படம்) ஜெயா, சென்னையில் தொழில் நகரம் அமைக்க முன் வந்துள்ள தரகு முதலாளி மஹிந்திராவுக்கு (இடது - கீழ்படம்) சலுகைக்கு மேல் சலுகைகளை வாரி வழங்கினார். இந்த வர்க்க பாசம்தான் பாசிச ஜெயா ஆட்சியின் உண்மை முகம்.

''மின் கட்டண நிர்ணயம் முழுமையாக மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் அதிகார வரம்புக்கு உட்பட்டது. ஆணையம் சுதந்திரமாக இயங்கும் ஒரு சட்டரீதியான அமைப்பு. அதனுடைய செயல்பாடுகளில் தலையிடும் அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை''

''இந்த ஆணையத்தை தி.மு.க.தான் அமைத்தது; இலவச மின்சாரம் வழங்கப்படுவதை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், கட்டண மாற்றம் தொடர்பான முன்மொழிவுகளை தமிழ்நாடு மின்சார வாரியம், மாநில மின்சார ஒழுங்கு முறை ஆணையத்திடம்தான் அளிக்க வேண்டும் எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த விசயத்தில் தமிழ்நாடு அரசு செய்யக்கூடியது ஒன்றுமில்லை'' எனக் கூறி, மின்கட்டண உயர்வுக்கு ஆணையம், தி.மு.க.மீது பழியைப் போட்டு தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார், ஜெயா.

மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையம் போலவே, தேர்தல் ஆணையமும் சுதந்திரமாக இயங்கும் அமைப்புதான். தேர்தல் ஆணையம் குஜராத் தேர்தலைத் தள்ளி வைத்த பொழுது, ஜெயா துள்ளிக் குதித்து, தேர்தல் ஆணையம் வரம்பு மீறி நடந்து கொள்வதாக அறிக்கையொன்றை வெளியிட்டு, தேர்தல் ஆணையத்தை ஒரு பிடிபிடித்தார்.

தேர்தல் ஆணையம் இந்து மதவெறியர்களுக்கு எதிராகப் போகும்பொழுது அதன் 'சுதந்திரத்தை'க் கேள்விக்குள்ளாக்கும் ஜெயா, மக்கள் மீது கட்டணச் சுமையைத் திணிக்கும் மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் 'சுதந்திரத்தின்' முன் கையைக் கட்டிக் கொண்டு நிற்கிறார்.

படிப்பகம்

www.padippakam.com

தி.மு.க. நியமித்த 13,000 சாலைப் பணியாளர்களை ஒரே நொடியில் தூக்கி யெறிந்த ஜெயா, அதே தி.மு.க. அரசு நியமித்த மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் தனது தடாலடி வீரத்தைக் காட்ட மறுக்கிறார். மாறாக, 'இந்த விசயத்தில் தமிழ்நாடு அரசு செய்யக்கூடியது ஒன்றுமில்லை'' எனக் கையைக் கழுவிவிட்டு, ஒதுங்கிக் கொண்டு போகிறார்.

ஏனென்றால், உலக வங்கியின் கட்டளைப்படி தி.மு.க. நியமித்ததுதான் இந்த மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையம். மாநில அரசிடம் உள்ள மின்சார வாரியத்தை மூன்றாகப் பிரித்து, அவற்றைத் தனியாரிடம் விட்டு, அதனை மேற்பார்வை செய்வதற்காகவே உலக வங்கியால் உருவாக்கப்பட்ட கட்ட பஞ்சாயத்து அமைப்புதான் இந்த ஒழுங்குமுறை ஆணையம்.

இந்த ஆணையத்தை அனைத்து ஓட்டுக் கட்சிகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. அதனால்தான், மின்கட்டண உயர்வை எதிர்க்கும் எதிர்க்கட்சிகள் கூட, மாநில அரசையே நிர்ப்பந்திக்கும் இந்த ஆணையத்தைக் கலைக்கக் கோரி வாயைக் கூடத் திறக்க மறுக்கின்றன.

**கைக்கூலியின் கரிசனம்**

''தமிழக அரசு நடத்தி வந்த நேரடி நெல் கொள்முதல் கைவிடப்பட்டாலும், மைய அரசு நடத்தி வரும் நெல் கொள்முதலின் முகவராக தமிழக அரசு செயல்படும். எனவே, தமிழக விவசாயிகளுக்கும், தமிழ்நாடு சிவில் சப்ளை கார்ப்பரேசனில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் எவ்விதப் பாதிப்பும் வராது'' என ஜெயா திரும்ப திரும்ப வாக்குறுதி அளிக்கிறார்.

மேலும், ''மைய அரசு நெல்லில் 18 சதம்தான் ஈரப்பதம் இருக்க வேண்டும் என நிர்ணயித்திருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரை, இந்த ஈரப்பத அளவுகோலை 22 சதவீதமாக மாற்ற வேண்டும். தமிழக விவசாயிகளுக்கு ஒரு குவிண்டால் நெல்லுக்கு 40 ரூபாய் ஊக்கத் தொகையாக உயர்த்த வேண்டும்'' என்று தமிழக விவசாயிகளின் சார்பாக மைய அரசிடம் வேண்டுகோள் வைக்கிறார்.

ஜெயாவின் இந்த வேண்டுகோளை மைய அரசு ஏற்றுக் கொள்ளுமா என்பது



**சிக்கன நடவடிக்கை என்ற பெயரில் துரத்தியடிக்கப்பட்ட சாலைப் பணியாளர்களின் போராட்டம்.**

தெரியவில்லை. இது மட்டுமல்ல, மைய அரசு நடத்தி வரும் நெல் கொள்முதலும் இன்னும் எத்தனை நாளுக்குத் தொடரும் என்றும் சொல்ல முடியாது. ஏனென்றால், உலக வங்கி இந்திய உணவுக் கழகத்தைக் கலைக்கவும், உணவு தானியக் கொள்முதலைப் பன்னாட்டு நிறுவனங்களிடம் ஒப்படைக்கவும் கட்டளையிட்டு, அதை அமல்படுத்துமாறு மைய அரசை நிர்ப்பந்தித்து வருகிறது. இன்றில்லாவிட்டாலும் நாளை, மைய அரசும், ஜெயாவைப் போல உலக வங்கியின் 'நிர்ப்பந்தத்திற்கு'ப் பணிந்து விடும்.

அப்படியொரு நிலை ஏற்படும் பொழுது, உலக வங்கிக் கைக்கூலி ஜெயா, மைய அரசை எதிர்க்கும் வீராங்கனையாக அரிதாரம் பூசிக் கொள்வார். தமிழின உரிமைக்குக் குரல் கொடுப்பவர்களை ''பொடா''வில் உள்ளே தள்ளும் ஜெயா, காவிரிப் பிரச்சினையில் தமிழின உரிமைப் போராளியாக வலம் வருவதைப் போல, நெல் கொள்முதலையும், இலவச மின்சாரத்தையும் நிறுத்தி தமிழக விவசாயிகளைப் போட்டுப் பார்க்கும் ஜெயா, தில்லியில் தமிழக விவசாயிகளின் காவலனாக வலம் வருவார். மைய அரசை முந்திக் கொண்டு நெல் கொள்முதலைக் கைவிட்டதன் மூலம் அதற்கான அடித்தளத்தை உருவாக்கிக் கொண்டு விட்டார், அவர்.

ஜெயா தமிழக சட்டமன்றத் தேர்தலின் பொழுது ஓட்டுக் கேட்டு வந்த பொழுதும், ஆண்டிப்பட்டி சட்டமன்ற இடைத்தேர்தலின் பொழுதும், ''இலவச மின்சாரத்தை நிறுத்த மாட்டோம்'' எனத் தமிழக விவசாயிகளுக்கு வாக்குறுதி கொடுத்தார். ஆனால், நெல் கொள்முதல் - இலவச மின்சாரத்தை நிறுத்தியதன் மூலமும், ரேசன் அரிசி விலையை உயர்த்தியதன் மூலமும் தமிழக மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிக்கு விசுவாசமாக இருப்பதைவிட, உலக வங்கிக்குக் கொடுத்த வாக்குறுதிக்கு விசுவாசமாக இருப்பதை ஜெயா நிரூபித்திருக்கிறார்.

நெல் கொள்முதலும், இலவச மின்சாரமும் ஜெயாவோ, கருணாநிதியோ தமிழக விவசாயிகளுக்கு விருப்பப்பட்டுப் போடும் பிச்சையல்ல. 1970 தொடங்கி 80 முடிய பத்தாண்டுகளாகப் போராடி, 43 விவசாயிகளைப் பலி கொடுத்து, பெற்ற உரிமைகள் இவை. உலக வங்கியின் கட்டளைக்கு அடிபணிந்து, இந்த உரிமைகளைத்தான் ஜெயா பறித்திருக்கிறார்.

எதிர்க்கட்சிகளுக்குப் பின்னால் போய் நின்று கொண்டு இந்த உரிமைகளை மீட்டுவிட முடியாது. ஏனென்றால், அனைத்து ஓட்டுக் கட்சிகளும் உலக வங்கியின் கைக்கூலிகள்தான். அதன் ஆணைகளை அமல்படுத்தும் வெறித்தனத்தில் ஜெயா அனைவரையும் விஞ்சி நிற்கிறார். இதுதான், ஜெயாவிற்கும், மற்ற ஓட்டுக் கட்சிகளுக்கும் உள்ள ஒரே வேறுபாடு!

உலக வங்கி, தனது கட்டளைகளை நிறைவேற்றாவிட்டால் ''கடன் தர மாட்டோம்'', ''உதவி தர மாட்டோம்'', ''கருப்புப் பட்டியலில் சேர்த்து விடுவோம்'' என ஆட்சியாளர்களை மிரட்டி, நிர்ப்பந்தித்துப் பணிய வைக்கிறது. ஓட்டுக் கட்சிகளை விட்டு விடுவோம். மக்கள் மத்தியில் கூட உலக வங்கியின் கட்டளைகளுக்கு எதிராகப் போராட்டமோ, கிளர்ச்சியோ வெடிப்பதில்லை.

இந்த நிலைமையைத்தான் மாற்ற வேண்டும். ஆட்சியாளர்கள் ரேசன் அரிசி விலையை உயர்த்தினால் மக்கள் உணவுக் கலகத்தில் இறங்க வேண்டும். நுகர்பொருள் கிட்டங்கிகளை முற்றுகையிட்டுக் கைப்பற்ற வேண்டும். மின் கட்டணங்களை உயர்த்தினால், மின் கட்டணம் கட்ட முடியாது எனப் போராட வேண்டும். இப்படி ஆட்சியாளர்களை மிரட்டுகின்ற, நிர்ப்பந்திக்கின்ற போராட்டங்களின் மூலம்தான், மக்கள், தம்மை, உலக வங்கியின் தாக்குதலில் இருந்து தற்காத்து கொள்ள முடியும். சுருக்கமாகச் சொன்னால், உலக வங்கிக்கும், அதன் கைக்கூலிகளுக்கும் எதிராகக் கலகத்தில் இறங்குவதைத் தவிர, வேறு வழியில்லை!

● செல்வம்

www.padippakam.com

## காசுமீர் சட்டமன்றத் தேர்தல்

# 'தேசிய' ஒருமைப்பாட்டின் வெற்றியா?

ஜம்மு – காசுமீர் மாநில சட்டமன்றத் தேர்தலில், பரூக் அப்துல்லாவின் தேசிய மாநாட்டுக் கட்சி 28 இடங்களையும், காங்கிரசு 20 இடங்களையும், மக்கள் ஜன நாயகக் கட்சி 16 இடங்களையும், சி.பி.எம். 2 இடங்களையும், பா.ஜ.க.வும், பகுஜன் சமாஜ் கட்சியும் தலா ஒரு இடத்தையும், பிற கட்சிகள், சுயேச்சைகள் 19 தொகுதிகளையும் கைப்பற்றி உள்ளன. எனினும், எந்தவொரு கட்சிக்கும் தனித்து ஆட்சி அமைக்கும் அளவிற்கு தனிப் பெரும்பான்மை கிடைக்காததாலும், கூட்டணி ஆட்சி அமைப்பது தொடர்பாக காங்கிரசுக்கும், மக்கள் ஜன நாயகக் கட்சிக்கும் இடையே நடந்து வந்த பேரம் உடனே முடிவடையாததாலும் அம்மாநிலத்தில் குடியரசுத் தலைவரின் ஆட்சி அமலாக்கப்பட்டுள்ளது.

காங்கிரசு கட்சிக்கும், மக்கள் ஜன நாயகக் கட்சிக்கும் இடையே இரண்டு வாரங்களாக நடந்த முதலமைச்சர் பதவி குறித்த பேரத்தில், மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் முப்தி முகம்மது சயீது முதல் மூன்று ஆண்டுகள் முதலமைச்சராகவும், அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு முதலமைச்சர் பதவி காங்கிரசுக்கு என்றும் சமரச உடன்பாடு ஏற்பட்டுள்ளது. எனினும், இந்த உடன்பாட்டை காங்கிரசு கட்சியே முழு மனதாக ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே, ஜம்மு –காசுமீர் மாநிலத்தில் அமையவுள்ள கூட்டணி ஆட்சி, நித்திய கண்டம் பூரண ஆயுசு என்றுதான் தொடரும். இச்சட்டமன்றத் தேர்தலில் 15 இடங்களில் சுயேச்சைகள் வென்றிருப்பது குதிரை பேரத்திற்கும் சட்டமன்ற அராஜகத்திற்கும் வழி வகுக்கும்.

எனினும், இந்தத் தேர்தல் முடிவுகளை பிரதமர் வாஜ்பாயி உள்ளிட்டு அனைத்துத் 'தேசிய'க் கட்சிகளும், ''ஜனநாயகத்தின் வெற்றியாக, இந்திய ஒருமைப்பாட்டிற்குக் கிடைத்த வெற்றியாக, பாக். தூண்டிவிடும் தீவிரவாதத்திற்கு எதிரான வெற்றியாக''க் கூறுகிறார்கள். இந்திய ஒருமைப்பாட்டிற்கு வால் பிடிக்கும் பத்திரிகைகள் அனைத்தும் ஜம்மு – காசுமீர் வரலாற்றிலேயே, 1977 இல் நடந்த தேர்தலையடுத்து நியாயமாகவும் சுதந்திரமாகவும் நடந்த தேர்தலாக இத்தேர்தலைக் குறிப்பிடுகின்றன. இந்தத் தேசபக்தக் கூச்சலின் மூலம், ''ஜம்மு – காசுமீர் மாநிலத்தில் தேர்தல் எப்படி நடந்தது? 44 சதவீத மக்கள் எதற்காக வாக்களித்தார்கள்?'' என்ற உண்மைகளைப் பிற மாநில மக்கள் அறிந்து விட முடியாதபடி, மூடிமறைத்துவிட முயலுகிறார்கள்.

தேர்தல் ஆணையம் ஜம்மு – காசுமீர் மாநிலத்திற்கான தேர்தல் அறிவிப்பை வெளியிடுவதற்கு முன்பே, ஜம்மு – காசுமீர் விடுதலை முன்னணியின் தலைவர் யாசின் மாலிக், பரூக் அப்துல்லா அரசால் ''பொடா''வின் கீழ் கைது செய்யப்பட்டார். அதன் பின் ஹுரியத் அமைப்பின் தலைவர்கள் சையத் அலி ஷா கிலானி, ஷேக் அஜீஸ் ஆகியோர் ''பொடா''வின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர். ''நாங்கள் ஊர்வலம் நடத்தவோ, பொதுக்கூட்டங்கள் போடவோ, மக்களுடன் பேசவோ அனுமதிக்கப்படவில்லை'' என்கிறார் ஹுரியத் அமைப்பின் மற்றொரு தலைவரான மௌலவி ஓமர் பாரூக்.

இது ஒருபுறமிருக்க, தேர்தல் சமயத்தில்கூட இராணுவத்திற்கும், துணை இராணுவப் படைகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் அரசு பயங்கரவாத சிறப்பு அதிகாரங்கள் எதுவும் திரும்பப் பெறப்படவில்லை. அதேசமயம், தேர்தல் பாதுகாப்பு என்ற பெயரில் மேலும் மேலும் படைகள் குவிக்கப்பட்டு, ஒவ்வொரு காசுமீரியும் துப்பாக்கி முனையின் கீழ் நிறுத்தப்பட்டான்.

அதனால்தான் இத்தேர்தலைக் கண்காணித்த புது தில்லியைச் சேர்ந்த சமூக விஞ்ஞானக் கழகம் எனும் அமைப்பு, ''இந்தத் தேர்தல்கள் நியாயமாக நடந்திருந்தாலும், கண்டிப்பாகச் சுதந்திரமாக நடக்கவில்லை'' என ''பயத்தின் கீழ் நடந்த நியாயமான தேர்தல்கள்'' என்ற தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.


மசூதி ஒலிபெருக்கிகள் வாயிலாக எல்லைப் பாதுகாப்புப் படை ஓட்டுப் போடப் போகுமாறு மக்களுக்குக் கட்டளையிட்டதை காசுமீர் தேர்தலைக் கண்காணித்த பல்வேறு குழுக்களும் தங்களது அறிக்கைகளில் குறிப்பிட்டுள்ளன.

ஜம்மு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அரசியல் விஞ்ஞானத் துறையும், புது தில்லியைச் சேர்ந்த வளரும் சமூகங்கள் பற்றிய ஆய்வு மையமும் இணைந்து காசுமீர் தேர்தல் பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில், ''காசுமீர் பள்ளத்தாக்கில் உள்ள 44 தொகுதிகளில் 20 தொகுதிகளில் பாதுகாப்புப் படை மக்களை ஓட்டுப் போடச் சொல்லி நிர்பந்தித்தது; வாக்குச் சாவடியில் இருந்து திரும்புவர்களின் விரலில் அடையாள மை இருக்கிறதா என்பதைப் படையினர் பரிசோதித்ததை 10 இடங்களில் நாங்களே பார்த்தோம்'' எனக் குறிப்பிட்டுள்ளது.

''அசோசியேடட் பிரஸ்'' என்ற செய்தி நிறுவனம், ''பாரமுல்லா நகரில் இராணுவம் ஒவ்வொரு வீட்டின் கதவைத் தட்டி, மக்களை ஓட்டுப் போடச்சொல்லி நிர்பந்தித்

தொடர்ச்சி 21-ஆம் பக்கம்

'தேசிய'வாதிகளின் பொய்ப் பிரச்சாரம், அடக்குமுறைகளையும் மீறி, ''தேர்தல் தேவையில்லை; சுதந்திரம் தான் வேண்டும்'' என்ற முழக்கத்துடன் சட்டமன்றத் தேர்தலைப் புறக்கணிக்கக் கோரி நடந்த பிரச்சாரம்.





படிப்பகம்

www.padippakam.com




## பொய்களே வரலாறாக... மோசடிகளே பள்ளிப்பாடமாக...

ஆப்பிரிக்கக் கண்டத்தை ஒட்டி இந்தியப் பெருங்கடலில் உள்ள மடகாஸ்கர் தீவு அரபிக்கடலில் அமைந்துள்ளது என ஒரு பள்ளி மாணவன் கூறினால், அவனை அடிமுட்டாள் என்பார் ஆசிரியர். பிரெஞ்சு காலனியவாதிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பாண்டிச்சேரிக்கு பாரதியார் சென்றார் என்பதற்குப் பதிலாக, பிரான்சுக்குச் சென்றார் என்று ஒரு மாணவன் விடைத்தாளில் எழுதினால், அவனுக்கு மதிப்பெண் கிடைக்காது. ஆனால், இப்படி பல பொய்கள், புரட்டல், குளறுபடிகளுடன் பாடப்புத்தகம் இருந்தால், அதைப்படிக்கும் மாணவர்களும், பாடம் நடத்தும் ஆசிரியர்களும் வாயால் சிரிக்க மாட்டார்கள். இருப்பினும் இதுதான் திருத்தப்பட்ட, செழுமையாக்கப்பட்ட பாடம் என்கிறது, இந்துவெறி மைய அரசின் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கழகம் (NCERT).

மதச்சார்பின்மைக்கு எதிராகவும், இந்துத்துவ அடிப்படையிலும் உருவாக்கப்பட்டுள்ள பள்ளிக் கல்விக்கான தேசிய பாடத் திட்ட வரையறையை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் பொதுநல வழக்கு தொடுக்கப்பட்டது. அதை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உச்சநீதி மன்றம், பாடநூல்களை வெளியிடுவதற்கான இடைக்காலத் தடையை அண்மையில் நீக்கியது. அதைத் தொடர்ந்து, புதிய பாடத் திட்ட அடிப்படையிலான பாடநூல்களும் வெளியிடப்பட்டுள்ளன. குறிப்பாக, 8,9–ஆம் வகுப்பு சமூக அறிவியல் பாடப்புத்தகங்களில் உள்ள பொய்யும் புரட்டும் குளறுபடிகளும் இந்துவெறி வரலாற்றாசிரியர்களின் அடிமுட்டாள்தனத்தையும் வஞ்சகத்தையும் நாட்டுக்கு வெளிச்சம் போட்டு காட்டிவிட்டன.

ரஷிய மொழியில் "ஜார்" என்ற சொல், பேரரசர் என்பதைக் குறிப்பதாகும். ஆனால் "ஜார்" என்றால் வம்ச ஆட்சி–குடும்ப ஆட்சி என்று பாடநூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. வெளிநாடுகளுக்கே சென்றிராத பாரதியார், சுதந்திரப் போராட்டத்துக்கு அதரவு திரட்ட பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் சென்றார் என்றும், சீனப் பெருஞ்சுவர் சுடு களிமண்ணால் கட்டப்பட்டது என்றும் அண்டப்புளுகை இந்துவெறி ஆசிரியர்கள் அவிழ்த்து விட்டுள்ளனர். ஏறத்தாழ ஈராண்டுகளுக்கு முன்பு ஆப்கானின் பாமியானிலுள்ள மிக உயரமான புத்தர் சிலையைத் தாலிபான் மத வெறிக்காட்டுமிராண்டிகள் சிதைத்ததை, புத்தமதம் மத்திய ஆசியாவில் பரவியபோது தாலிபான்கள் இச்சிலையைத் தகர்த்ததாகக் கூசாமல் புளுகியுள்ளனர். உலகைக் குலுக்கிய மகத்தான ரசிய சோசலிசப் புரட்சியை, அரண்மனை சதி–ஆட்சிக் கவிழ்ப்பு என்று முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைத்துள்ளனர்.




இந்தியாவில் வேதகால மக்கள் பூஜ்ஜியம் என்ற எண்ணைக் கணக்கிடப் பயன்படுத்தினர்; பூமி தன்னைத் தானே சுற்றுவதோடு சூரியனையும் சுற்றிவருவதையும் அறிந்திருந்தனர் என்று ஒரு பாடப் பகுதியில் கதை விட்டுள்ளனர். வேறொரு பாடப்பகுதியில் வேதகால விஞ்ஞானியாகிய ஆரியபட்டர் வானியல் அறிஞராகத் திகழ்ந்தார் என்கின்றனர். ஆனால், ஆரிய பட்டர் வேத காலத்துக்கு பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு–அதாவது கி.பி.5 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

கம்யூனிஸ்டுகளையும் முஸ்லிம்களையும் துரோகிகளாகச் சித்தரிக்கும் நோக்கத்தோடு, "வெள்ளையனே, வெளியேறு!" இயக்கத்தைக் கம்யூனிஸ்டுகளும் ஜின்னாவின் ஆதரவாளர்களும் மட்டுமே ஆதரிக்கவில்லை என்று பாடநூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், பாரதீய ஜனசங்கத்தை – பா.ஜ.க.வின் தாய் கட்சியை நிறுவிய சியாமா பிரசாத் முகர்ஜீயும் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தை ஆதரிக்கவில்லை. ஏனெனில், 1942–இல் அவர் வெள்ளையரின் வங்காள மாகாண நிதிய மைச்சராக– கைக்கூலியாக இருந்தார். இந்து வெறியர்களும் சுதந்திரப் போராட்டங்களில் பங்கேற்கவில்லை.

பாசிச இட்லர், முசோலினி ஆகியோரையும் பாசிச சித்தாந்தத்தையும் வெளிப்படையாக ஆதரிக்க முடியாத நிலையில், ரஷியாவில் ஸ்டாலினால் திணிக்கப்பட்ட பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கு மாற்றாக பாசிசமும் நாசிசமும் அமைந்தன என்று பாடநூலில் குறிப்பிட்டு, இந்து வெறியர்கள் மறைமுகமாக பாசிசத்தை ஆதரித்துள்ளனர். கம்யூனிச சர்வாதிகாரத்துக்கு மாற்றாக பாசிசம் இருந்தது என்று குறிப்பிட்டுள்ளனரே தவிர, பாசிச அடக்குமுறை–போர்–கொடுமைகள் பற்றி எதுவுமே குறிப்பிடவில்லை.

– இவை ஒரு சில உதாரணங்கள்தான். இன்னும் பல பொய்கள், மோசடி, புரட்டல்களை வரலாற்றாசிரியர்கள் அடுக்கடுக்காகப் பட்டியலிட்டு அம்பலப்படுத்திவருகின்றனர்.

அடிமுட்டாள்தனமாகவும் இந்துவெறி பாசிச சித்தாந்தத்தை நயவஞ்சகமாகத் திணிக்கும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ள இந்தத் 'தேசிய' பாடத்திட்டத்தை ஏற்று, நாளைய தலைமுறையைத் தற்குறிகளாகவும் பார்ப்பன அடிமைகளாகவும் மாற்றப் போகிறோமா? அல்லது இந்துவெறி பாசிஸ்டுகளுக்கு எதிரான போராட்டத்தில் இறங்கி, அவர்களுக்குப் பாடம் புகட்டப் போகிறோமா?

## "பால்கோ" தனியார்மயம்: அம்பலமானது மோசடி

அரசுத்துறை நிறுவனங்களைத் தனியார்மயமாக்கும் இரண்டாம் தலைமுறைச் சீர்திருத்தங்களை பா.ஜ.க. அரசு தீவிரமாக்கிவரும் வேளையில், பால்கோ என்ற அரசுத்துறை நிறுவனத்தைத் தனியாருக்கு விற்றதில் நடந்த மோசடிகள் பற்றி மைய அரசின் கணக்கு–தணிக்கை தலைமை அதிகாரி அலுவலகம் (CAG) அறிக்கை வெளியிட்டு, ஆட்சியாளர்களின் வயிற்றில் புளியைக் கரைத்துள்ளது.

ஒரிசா மாநிலத்திலுள்ள அரசுத்துறை நிறுவனமான பாரத அலுமினிய நிறுவனத்தின் (பால்கோ) பங்குகள், ஏறத்தாழ மூன்றாண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவின் ஸ்டெர்லைட் நிறுவனத்துக்கு அடிமாட்டு விலைக்கு விற்கப்பட்டது. இந்த

www.padippakam.com



விற்பனை குறித்து மைய அரசின் கணக்கு–தணிக்கை தலைமை அதிகாரி அலுவலகம், தனது மதிப்பீடு–தணிக்கை அறிக்கையை அண்மையில் இறுதியாக்கியுள்ளது. இந்த அறிக்கையானது, இலாபகரமாகவும் ஏராளமான சொத்துக்களும் கொண்ட பால்கோ நிறுவனத்தை என்னென்ன வகையில் குறைத்து மதிப்பீடு செய்து, அடிமாட்டு விலைக்கு விற்கப்பட்டுள்ளது என்ற மோசடியை அம்பலப்படுத்திக் காட்டிவிட்டது.



அடிமாட்டு விலைக்கு விற்கப்பட்ட பால்கோ: தனியார்மய மோசடியின் அடையாளம்.

''பால்கோவை விற்பதற்கு முன்பாக அதன் சொத்துக்களையும், உற்பத்தித்திறன், தேய்மானம், இலாபவிகிதம், சுழற்சி மூலதனம் முதலானவற்றைப் பற்றி மதிப்பீடு செய்வதற்காக, ஜோர்டைன் ப்ளெமிங் என்ற அன்னிய நாட்டு ஆலோசகரைத் தனியார்மயமாக்கல் துறை நியமித்தது. அவர் பால்கோவின் சொத்து மதிப்பை வெறும் 1080 கோடி ரூபாயாக குறைத்து மதிப்பிட்டுள்ளார். ஆனால், உண்மையான மதிப்பு ஏறத்தாழ ரூ.1700 கோடி யாகும். பால்கோவைக் குறைத்து மதிப்பிட்டு, அதன் 51% பங்குகளை ஸ்டெர்லைட் நிறுவனத்துக்கு விற்று ரூ.550 கோடியை அரசு பெற்றுக் கொண்டது, மோசடித்தனமானது. உண்மையான மதிப்பீடுகளின் படி ஸ்டெர்லைட் நிறுவனம் ரூ.850 கோடியைச் செலுத்தியிருக்க வேண்டும். இந்த மோசடியால் அரசுக்கு ரூ.302 கோடிக்கும் மேலாக இழப்பு ஏற்பட்டுள்ளது.

''இதுதவிர, பால்கோ நிறுவனம் இலாபத்தில் இயங்கிவந்த அரசுத்துறை நிறுவனமாகும். ஆனால் நிதி வரத்து குறைவாக உள்ளதாக தவறாக மதிப்பீடு செய்து, நட்டத்தில் இயங்கும் நலிவடைந்த ஆலையாகக் கருதப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் நடப்பு மூலதனம் (Working Capital) ரூ.479 கோடி மதிப்பீட்டின் போது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. நிலத்தின் மதிப்பும் அசையா சொத்துக்களின் மதிப்பும் வெறும் 19 நாட்களுக்குள் அவசரகதியில் மேலோட்டமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், பால்கோவைத் தனியார்மயமாக்க பேச்சுவார்த்தைகள் நடத்தி வந்த காலத்தில், அதன் உற்பத்தித்திறன் ஆண்டுக்கு 91,000 டன்களிலிருந்து 1,31,400 டன்களாக விரிவடைந்திருந்தது. இந்த அம்சத்தை மதிப்பீட்டாளர்கள் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை. சுங்கத்தீர்வை குறைவாக உள்ளதால், கச்சாப் பொருட்களின் விலையும் குறையும் என்றும் தவறாக மதிப்பீடு செய்து, பால்கோவின் இலாப விகிதம் குறைந்து விட்டதாகக் குருட்டுத்தனமாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அடுத்து, இந்நிறுவனத்துக்கு தில்லி மற்றும் மும்பையிலுள்ள மனைகள், அலுவலகக் கட்டிடங்கள் முதலான அசையா சொத்துக்கள் மதிப்பீட்டின்போது கணக்கில் எடுத்துக் கொள்ளப் படவில்லை.

''இவ்வாறு எந்த வகையில் பார்த்தாலும், தவறான மதிப்பீடுகளின் அடிப்படையில் பால்கோ நிறுவனம் அடிமாட்டு விலைக்கு விற்கப்பட்டுள்ள உண்மையை மறுக்க முடியாது, உண்மையான மதிப்பீடுகளின் அடிப்படையில் ஸ்டெர்லைட் நிறுவனம் அரசுக்கு ரூ 302 கோடியைச் செலுத்த வேண்டும்'' என்று அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது. பால்கோ மட்டுமின்றி, ''மாடர்ன் ஃபுட்ஸ்'' நிறுவனம் தனியாருக்கு விற்கப்பட்டதில் இதேபோல குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக அடுத்த அறிக்கையைக் கணக்கு–தணிக்கை தலைமை அதிகாரி அலுவலகம் தயாரித்து வருகிறது. இந்த அறிக்கைகள் நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடரின் போது சமர்ப்பிக்கப்பட உள்ளன. இதனால் தமது தேசத் துரோகமும் சதிகளும் அம்பலமாகி விடுமோ என்று இந்து வெறி ஆட்சியாளர்கள் கையைப் பிசைந்து கொண்டு நிற்கின்றனர்.

அரசுத்துறை என்றாலே ஊழலும் நட்டமும்தான் என்று தனியார்மய தாசர்கள் கோயபல்சு பாணியில் பிரச்சாரம் செய்ததெல்லாம், இலாபகரமான அரசுத்துறையைத் தனியார்–அன்னிய முதலாளிகள் அபகரித்துக் கொள்வதற்காகத்தான் என்பதை இந்த தணிக்கை அறிக்கை அம்பலப்படுத்திக் காட்டிவிட்டது. ஆளும் இந்து வெறிக் கூட்டணி அரசு, எத்தகைய தொரு நாட்டு விரோத–மக்கள் விரோத களவாணி கும்பல் என்பதை இது மீண்டும் நிரூபித்துக் காட்டிவிட்டது.


## ''பொடா'' பயங்கரம்: கல்லூரி ஆசிரியருக்கு நேர்ந்த கதி

உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடு இந்தியாதான் என்று ஆட்சியாளர்களும் ஓட்டுக்கட்சிகளும் பத்திரிகைகளும் மார்தட்டுகின்றன. ஆனால், இந்தியாவில் வேலைக்குச் சென்ற ஒருவர் வீடு திரும்புவாரா? அல்லது சிறையிடப்படுவாரா என்று எவருக்கும் தெரியாது. எவரையும் போலீசார் பயங்கரவாத சட்டத்தின்கீழ் கைது செய்து வதைத்து, பொய்வாக்கு மூலம் வாங்கி, ''இவர் ஒரு பயங்கரவாதி'' என்று குற்றம் சாட்டி சிறையிலடைக்க முடியும். இப்படி கட்டற்ற அரசு பயங்கரவாத வேட்டையில் சிக்கி வதைபட்டுக் கொண்டிருக்கும் அப்பாவிகள் ஏராளம். அவர்களில் ஒருவர்தான் டெல்லி ஜாகிர் உசேன் கல்லூரியின் அரபு மொழி விரிவுரையாளரான சையத் அப்துல் ரஹ்மான் கீலானி.

கடந்த ஆண்டு டிசம்பர் ஆண்டு டிசம்பர் 13–ஆம் நாளன்று டெல்லி நாடாளுமன்றக் கட்டிடத்தின் மீது தாக்குதல் நடத்திய காசுமீரைச் சேர்ந்த ஜெய்ஷ்–இ–மொகம்மது என்ற தீவிரவாத இயக்கத்தினருடன் தொடர்புடையவர் என்று குற்றம் சாட்டப்பட்டு கீலானி கைது செய்யப்பட்டார். கல்லூரியிலிருந்து பணி முடிந்து வெளியே வரும்போது அவரை இழுத்து வாகனத்தில் அடைத்து போலீசார் விரைந்தனர். அவருடன் பணியாற்றும் சக ஆசிரியர்களும் மனித உரிமை அமைப்புகளும் அவர் நிரபராதி என்று முறையிட்டும் கூட, போலீசார் கீலானியை விடுவிக்கவில்லை. கீலானி, காசுமீரைச் சேர்ந்த முசுலீம் என்ற காரணம் காட்டி போலீசார் அவரை மிருகத்தனமாக வதைத்தனர். தனக்கும் டெல்லி நாடாளுமன்றக் கட்டிடத்தின் மீது தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளுக்கும் தொடர்பு உள்ளது என்று வாக்கு மூலம் தரச்சொல்லி கீலானியைச் சித்திரவதை செய்தனர்.

www.padippakam.com





கீலானியின் மனைவியும் இரு குழந்தைகளும் போலீசாரால் இழுத்துச் செல்லப்பட்டனர். தீவிரவாதிகளுடன் தொடர்பு உள்ளதாக வாக்குமூலம் தரச்சொல்லி இருநாட்களுக்குக் கொட்டடியில் அடைத்து வதைத்தனர். பின்னர் கீலானியை நிர்வாணமாக்கி அவரது குடும்பத்தினர் முன்னிலையிலே அடித்துச் சித்திரவதை செய்தனர். நாங்கள் சொல்கிறபடி வாக்கு மூலம் தராவிட்டால் உன் குடும்பத்தையே அழித்து விடுவோம் என்று எச்சரித்து வெற்றுத்தாட்களில் கீலானியிடம் கையொப்பம் பெற்றனர். இந்த உண்மைகளை கீலானியின் மனைவி சிறப்பு நீதிமன்றத்தில் அண்மையில் வாக்குமூலமாக அளித்துள்ளார்.

டெல்லி நாடாளுமன்றத் தாக்குதலில் ஈடுபட்டுக் கொல்லப்பட்ட தீவிரவாதிகளின் சட்டைப் பையிலிருந்து எடுக்கப்பட்ட நடமாடும் தொலைபேசி எண்களை வைத்து மொகம்மது அப்சல், சௌகத் உசைன் எனுமிருவர் டெல்லியில் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் கீலானியின் தொலைபேசி எண் இருந்ததை வைத்துத்தான் அவரும் தீவிரவாதிகளின் கூட்டாளி என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளார். ஆனால் அப்சல், உசைன் ஆகியோரும் கீலானியும் காஷ்மீரின் பாரமுல்லா மாவட்டத்திலுள்ள சோபூரைச் சேர்ந்தவர்கள்; டெல்லி முகர்ஜி நகரில் குடியிருப்பவர்கள். ஒரே ஊரைச் சேர்ந்தவர் என்பதால், கீலானியின் தொலைபேசி எண்ணை அவர்கள் தமது டைரியில் குறித்து வைத்திருந்தனர். ஆனாலும் கீலானிக்கும் தமக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே தொடர்பு இருந்ததாக அவர்களை வதைத்து போலீசார் வாக்கு மூலம் பெற்றனர்.

இந்நிலையில் இந்தியத் தொலைக்காட்சியில் ''ஆஜ்தக்'' என்ற செய்திப் பகுதியில், பிரதான குற்றவாளியாகச் சித்தரிக்கப்பட்ட மொகம்மது அப்சலின் பேட்டி ஒளிபரப்பட்டது. அதில் போலீசாரின் வேண்டுகோளின்படி சில பகுதிகள் நீக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. நீக்கப்பட்ட பகுதியில், கீலானிக்கும் நாடாளுமன்றத் தாக்குதலுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்று அப்சல் வாக்குமூலம் அளித்திருந்தார். பேட்டி எடுக்கும் போது உதவி போலீசு கமிஷனர் ராஜ்பீர் உடனிருந்ததாகவும், கீலானி பற்றி அவர் குறிப்பிட்டபோது எதுவும் பேசாதே என்று தடுத்ததாகவும், தொகுத்து ஒளிபரப்பும்போது இப்பகுதியை நீக்கிவிடுமாறு கூறியதாகவும் ஆஜ்தக் செய்தியாளர் சிறப்பு நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளித்துள்ளார், பின்னர் நீதிமன்றத்தில் நீக்கப்பட்ட பகுதியின் ஒளிநாடா சமர்ப்பிக்கப்பட்டு, அதை வீடியோவில் பார்த்தபோது, கீலானிக்கு எவ்விதத் தொடர்புமில்லை என்று அப்சல் அளித்த பேட்டி உண்மை என்று நிரூபணமாகியுள்ளது. போலீசார் உண்மைகளை மறைப்பதாக நீதிமன்றமும் கண்டித்துள்ளது. இருப்பினும் விசாரணை இன்னும் முடிவடையாததால் நிரபராதியான கீலானி இன்னும் விடுவிக்கப்படவில்லை.

பயங்கரவாத பீதியூட்டி ஏவிவிடப்பட்டுள்ள ''பொடா'' சட்டமும் அரசு பயங்கரவாதமும் அவ்வளவு கொடூரமானது என்பதற்கு கல்லூரி ஆசிரியர் கீலானிக்கு நேர்ந்த கதியே சான்று கூறப் போதுமானது. கல்லூரி ஆசிரியருக்கே இந்த கதி என்றால், சாமானிய மக்களின் கதி என்னவாகும்?

## தனியார்மயமாக்கலைத் தடுத்து நிறுத்திய தொழிலாளிகளின் புதியவகை போராட்டம்

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாகத் தனியார்மயமும் தாராளமயமும் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்டதன் விளைவாக, பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்து வாழ்விழந்து நிற்கிறார்கள்.

கடந்த ஏப்ரல் மாதத்தில் ருமேனியா நாட்டில் அரசுத்துறை நிறுவனங்கள் ''எஃப் அண்டு பி ஹோல்டிங்'' என்ற அமெரிக்க முதலீட்டு நிறுவனத்துக்குத் தாரைவார்க்கப்பட்டது. இதற்கு எதிராக தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்திவந்த வேளையில், அரசுத்துறை நிறுவனங்களைக் கையளிப்பதற்கான உள்நாட்டு – வெளிநாட்டு பங்குதாரர்களின் கூட்டம் நடந்தது. தொழிலாளர்கள் இக்கூட்டத்திற்கு இடையூறு செய்யலாம் என்று அஞ்சிய பங்குதாரர்களாகிய தனியார் ஏகபோக முதலாளிகள், முதல் நாளன்று இரவே ஆலையின் விருந்தினர் மாளிகைக்கு வந்து தங்கி விட்டனர். இதன் மூலம் இடையூறின்றிக் கூட்டத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்து விடலாம் என்று கனவு கண்டனர். ஆனால், மறுநாள் அதிகாலையிலேயே, கையிலே சம்மட்டி–கட்டாரி–துடப்பக்கட்டைகளுடன் திடீரென வந்த 50–க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உள்நாட்டு–வெளிநாட்டு ஏகபோக முதலாளிகளை அடித்து விரட்டினர். பின்னர் அரசு அதிகாரிகளை இழுத்து வந்து, தனியார்மயமாக்கும் முடிவை ரத்து செய்வதாகத் தீர்மானம் நிறைவேற்றச் செய்தனர். இப்போர்க்குணமிக்க நடவடிக்கையின் மூலம் அரசுத் துறை நிறுவனங்களைத் தனியார்மயமாக்கும் சதியைத் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

ருமேனியா மட்டுமின்றி, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் எங்கும் இத்தகைய திடீர்க் கலகங்களும் தொழிலாளர் போராட்டங்களும் பற்றிப் படர்ந்து வருகின்றன. அரசுத்துறையைத் தனியார்மயமாக்கும் முயற்சிகளைத் தொழிலாளர்கள் திரண்டு வந்து தடுப்பதும், அந்நிய முதலீட்டாளர்களை விரட்டியடிப்பதும் பல நாடுகளில் தொடர்ந்து முன்னேறி வருகிறது. கடந்த ஆண்டில் ஸ்லோவாகியா நாட்டில் 50,000 தொழிலாளர்கள் தலைநகரை முற்றுகையிட்டு, அந்நிய முதலீட்டாளர்களை விரட்டியடித்து ரயில்வே துறை தனியார்மயமாக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தியுள்ளனர். ருமேனியாவில், அரசுத் துறை எஃகு நிறுவனத்தைக் கைப்பற்றிய அமெரிக்க முதலாளிகள் தொழிலாளர்கள் பலரை ஆட்குறைப்பு நடவடிக்கை மூலம் வேலையிலிருந்து விரட்டியடிக்கத் தொடங்கியதும், தொழிலாளர்கள் திரண்டெழுந்து அமெரிக்கமேலாளர் மற்றும் தலைமை நிர்வாகிகளை அறையில் வைத்துப் பூட்டிப் பட்டினி போட்டு கெரோ செய்தனர். பின்னர் வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் பணியில் அமர்த்தும் புதிய உத்தரவில் கையெழுத்திட வைத்து வெற்றியைச் சாதித்தனர். செக் நாட்டில் மின்துறையைத் தனியார்மயமாக்கும் அரசின் நடவடிக்கையை எதிர்த்து தொழிலாளர்கள் முற்றுகை போராட்டம் நடத்தி அண்மையில் அதை முறியடித்துள்ளனர். அந்நிய முதலீட்டாளர்களை விரட்டியடித்ததோடு, எந்தவொரு தொழிலாளியாவது வேலையிலிருந்து நீக்கப்பட்டால் பல லட்சம் டாலர் நட்ட ஈடு தரவேண்டுமென நிபந்தனை விதித்து புதிய ஒப்பந்தத்தில் அரசு அதிகாரிகளைக் கையெழுத்திட வைத்துள்ளனர்.

கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் தொழிலாளர்களைச் சுரண்டிக் கொழுத்த மேற்கத்திய


படிப்பகம்

www.padippakam.com



ஏகாதிபத்திய நிறுவனங்கள், உலகமயமாக்கலினால் ஏற்பட்ட பொருளாதாரச் சரிவின் காரணமாக அண்மைக் காலமாக ஆட்குறைப்பையும் ஆலை மூடலையும் தீவிரமாக்கி வருகின்றன. நடப்பு ஆண்டில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் மொத்தத்தில் 20% தொழிலாளர்கள் வேலையிலிருந்து விரட்டப்படும் அபாயம் நிலவுகிறது. இதுதவிர, வங்கி, காப்பீடு துறை ஊழியர்களில் 10 முதல் 25% பேர் வரை வீட்டுக்கு அனுப்பப்படும் அறிவிப்பு மக்களை அச்சுறுத்துகிறது. வேலையின்மையும் நிச்சயமற்ற எதிர்காலமும் கிழக்கு ஐரோப்பிய மக்களைப் போராட்டத்திற்குத் தள்ளுகிறது. தனியார்மயம் – தாராளமயத்துக்கு எதிராக பழைய வடிவிலான போராட்டங்களைக் கைவிட்டு, எதிரிகளை நிர்பந்திக்கும் புதிய போர்க்குணமிக்க போராட்டங்களை அவர்கள் மேற்கொள்ளத் தொடங்கி விட்டார்கள். கிழக்கு ஐரோப்பிய நாடுகளைவிட ஒப்பீட்டு ரீதியில் தொழிற்சங்க இயக்கத்தில் அனுபவமிக்க இந்தியத் தொழிலாளி வர்க்கம், இன்னமும் பழைய செக்கு மாட்டுப் பாதையிலான போராட்டங்களை நடத்திக் கொண்டிருப்பதில் ஏதாவது பொருள் இருக்கிறதா?

## பாபர் மசூதி இடிப்பு வழக்கு: மாயாவதியின் துரோகம்

**உ.**பி. மாநிலத்தில் சட்டமன்றத் தேர்தலின்போது இந்துவெறி பா.ஜ.க.வை "மனுவாதிகளின் கட்சி" என்று சாடி ஓட்டுப் பொறுக்கி விட்டு, தேர்தலுக்குப் பிறகு அதே பா.ஜ.க.வுடன் கூட்டணி கட்டிக் கொண்டு முதல்வராகியுள்ள மாயாவதி, தன்னை இந்துவெறி பாசிச பயங்கரவாதிகளின் விசுவாச சேவகி என்பதை நிரூபித்துக் காட்டிவிட்டார்.

பாபர் மசூதி இடிப்பு தொடர்பாக துணைப் பிரதமர் அத்வானி, மத்திய அமைச்சர்கள் முரளிமனோகர் ஜோஷி, உமா பாரதி உள்ளிட்ட 20–க்கும் மேற்பட்டோர் மீது மையப் புலனாய்வுத்துறை தொடுத்த வழக்கு லக்னோவில் ஒரு சிறப்பு நீதிமன்றத்தில் கடந்த பத்தாண்டுகளாக நடந்து வந்தது. "1993–இல் உ.பி. மாநில அரசு இச்சிறப்பு நீதிமன்றம் அமைப்பது தொடர்பாக வெளியிட்ட அறிவிக்கையானது, உச்சநீதி மன்றத்திடம் ஆலோசித்து செய்யப்பட வேண்டும் என்ற நடைமுறை விதியைக் கடைப்பிடிக்காமல் வெளியிடப்பட்டதால் அது செல்லாது; எனவே புதிய அறிவிக்கையை விதிமுறைப்படி மாநில அரசு வெளியிட வேண்டும்; அதன் பிறகே அத்வானி மற்றும் பிறர் மீதான வழக்கை விசாரிக்க முடியும்; புதிய அறிவிக்கையை வெளியிடுவது பற்றிய மாநில அரசுதான் முடிவு செய்ய வேண்டும்" என்று கடந்த பிப்ரவரியில் அலகாபாத் நீதிமன்றம் ஒரு உத்தரவை வழங்கியது. உ.பி. அரசு மீண்டும் உச்சநீதி மன்ற ஒப்புதலோடு உரிய விதிமுறைகளைப் பின்பற்றிப் புதிதாகச் சிறப்பு நீதிமன்றத்தை அமைத்து இந்த வழக்கை மீண்டும் விசாரணை செய்யலாம் என்றும் கூறியது.

ஆனால், உ.பி.யின் முந்தைய ராஜ்நாத் சிங் தலைமையிலான அரசு இது தொடர்பாக எந்த முடிவும் எடுக்காமல் இழுத்தடித்து வந்தது. எனவே முடிவு எடுக்கச் சொல்லி நீதிமன்றம் மாநில அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரி சிலர் உச்ச நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தனர். அதைத் தொடர்ந்து, மாநில அரசு இரு மாதங்களுக்குள் சிறப்பு நீதி மன்றம் அமைப்பது பற்றி முடிவு செய்து அறிவிக்க வேண்டும் என்று உச்சநீதி மன்றம் உத்தரவிட்டது. அந்தக் கெடு செப்.23–ஆம் தேதியாகும். அதற்கு ஒருவாரம் முன்னரே, பாபர் மசூதி இடிப்பு வழக்கை மீண்டும் விசாரிக்க சிறப்பு நீதிமன்றம் அமைப்பதற்கு உத்தரவிட மாட்டோம்; அதற்கான அரசு அறிவிக்கையும் வெளியிட மாட்டோம் என்று மாயாவதி அரசு திட்டவட்டமாக அறிவித்துவிட்டது.

நடைமுறை விதிகளைப் பின்பற்றாததைக் காரணம் காட்டி சிறப்பு நீதிமன்ற விசாரணை செல்லாது என்று உயர்நீதி மன்றம் அறிவித்து விட்ட நிலையில், புதிதாக மீண்டும் சிறப்பு நீதிமன்றத்தை நிறுவி மீண்டும் விசாரணையைத் தொடர மாயாவதி முன்வரவில்லை. மாறாக, வழக்கை எந்த நீதிமன்றத்தில் நடத்த வேண்டும் என்பதை மையப் புலனாய்வுத் துறைதான் முடிவு செய்ய வேண்டும்; இது மாநில அரசின் விவகாரமல்ல என்று நியாயவாதம் பேசிக் கொண்டு திரிகிறார். சிறப்பு நீதிமன்ற விசாரணைத் தொல்லையிலிருந்து விடுவிக்கப்பட்டதற்காக இந்துவெறியர்கள் மாயாவதியை வானளாவப் புகழ்ந்து தள்ளுகின்றனர். தனது விசுவாசத்தை மேலும் நிரூபித்துக் காட்டும் வகையில், லக்னோவில் மிகப்பெரிய பேரணி நடத்தி அத்வானியை அழைத்து கௌரவித்த மாயாவதி, தனது கூட்டணி அமைச்சரவையை மேலும் விரிவுபடுத்தி பா.ஜ.க.வினருக்கு அமைச்சர் பதவிகளை வாரிக்கொடுத்துள்ளார்.

தலித் விடுதலை என்றும் பார்ப்பன–ஆதிக்க சாதி எதிர்ப்பு என்றும் சவடால் அடித்து வந்த பகுஜன் சமாஜ் கட்சியும் அதன் தலைவி மாயாவதியும் கொள்கை, சித்தாந்தம் எதுவுமின்றி யாருக்கும் சோரம்போகும் பிழைப்புவாதிகளாகவும், இந்துவெறியர்களின் கடைந்தெடுத்த விசுவாசிகளாகவும் இன்று சீரழிந்து கிடக்கின்றனர். ஆனாலும் எந்தவொரு தலித்திய கட்சியோ, அமைப்போ, 'அறிஞர்'களோ மாயாவதியின் துரோகத்தை எதிர்த்து முணுமுணுக்கக் கூடத் தயாராக இல்லை. அந்த அளவுக்கு பிழைப்புவாதம் தலித்தியவாதிகளிடம் புரையோடிக்கிடப்பதையே இது மீண்டும் மெய்ப்பித்துக் காட்டுகிறது. ●

**தலித் வீராங்கனையா? இந்துவெறி பாசிசத்தின் சேவகியா? அத்வானியுடன் மாயாவதி.**



www.padippakam.com


ஈரோட்டில்

# "உலக வங்கிக் கைக்கூலி பாசிச ஜெயா அரசின் மறுகாலனியாதிக்க பயங்கரவாதத்தை முறியடிப்போம்!"

## தமிழகம் தழுவிய கண்டன ஆர்ப்பாட்டம்

நாட்டை மீண்டும் காலனியாக்கி வரும் பயங்கரவாத நடவடிக்கையைத் தீவிரமாக அமல்படுத்தி வருகிறார் பாசிச ஜெயலலிதா. "உலக வங்கியிடம் கடன் வாங்கினால் அவன் போடும் உத்தரவை மீறமுடியுமா?" என்று தன் அடிவருடித் தனத்தைப் பகிரங்கமாக நியாயப்படுத்து கிறார். இதன் விளைவாக விவசாயம், நெசவு, சிறுதொழில்கள் அனைத்தும் திவாலாகி, தமிழகமே மயானமாக மாறி வருகிறது. விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள், பேராசிரியர்கள், சாலைப் பணியாளர்கள், அரசு ஊழியர்கள், ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள், வழக்குரைஞர்கள் முதலான எல்லா தரப்பு மக்களும் பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

ஆளும் பாசிச ஜெயா அரசோ போராடும் மக்களைப் பல்வேறு அடக்கு முறைச் சட்டங்களைக் காட்டி வெளிப்படையாகவே மிரட்டி வருகிறது. முன்னணியாளர்களைப் பொய் வழக்குகள் போட்டு சிறையிலடைக்கிறது.

இந்நிலையில் மக்கள் கலை இலக்கியக் கழகம், புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து ஜெயாவின் பொருளாதார பயங்கரவாதத் தாக்குதல்களை எதிர்த்து, கடந்த அக்டோபர் பதினாறாம் தேதி மாநிலந்தழுவிய கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தின.

"உலக வங்கிக் கைக்கூலி பாசிச ஜெயா அரசின் மறுகாலனியாதிக்க பயங்கரவாதத்தை முறியடிப்போம்!" என்ற மைய முழக்கத்தின் கீழ் நடைபெற்ற கண்டன ஆர்பாட்டத்தையொட்டி இரு மாதங்களாக தொடர் பிரச்சார இயக்கம் மேற்கொள்ளப்பட்டது. "விவசாயிக்கு எலிக்கறி! தொழிலாளிக்குக் கஞ்சித் தொட்டி! மாணவருக்குக் கல்வி மறுப்பு! இளைஞருக்கு வேலை பறிப்பு! போலீசுக்குச் சுயாட்சி! போராடினால் 'பொடா' ஆட்சி!" என்று பாசிச ஜெயாவின் ஆட்சியில் தமிழகத்தின் நிலையைப் பறைசாற்றும் முழக்கங்கள் சுவரெழுத்துகளாய் எழுதப்பட்டன. சுவரொட்டிகள், துண்டறிக்கைகள், தட்டிகள், வீடுவீடாகப் பிரச்சாரம் செய்வது, தெருமுனைக் கூட்டங்கள், மிதிவண்டிப் பேரணிகள் உள்ளிட்டு, பல வடிவங்களில் இப்பிரச்சாரம் மக்களிடையே கொண்டு செல்லப் பட்டது.

இன்று தனித்தனியே துறைவாரியாகப் போராடும் பல்வேறு பிரிவினரை ஒருங்கிணைக்கும் முகமாகவும், ஓட்டுக் கட்சிகளைப் புறக்கணித்து புரட்சிகர அமைப்புகளில் அணிதிரள வேண்டிய அவசியத்தை வலியுறுத்தும் விதமாகவும் இக்கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### விழுப்புரத்தில்

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் காலை 12 மணிக்கு தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தி, தொடர் முழக்க ஆர்பாட்டம் தொடங்கப்பட்டது. திருவெண்ணெய் நல்லூர் விவசாயிகள் விடுதலை முன்னணி தோழர் ஜோதி இந்த ஆர்ப்பாட்ட நிகழ்ச்சிக்குத் தலைமையேற்றார். பல்வேறு தொழிற்சங்கப் பிரதிநிதிகள், ஜனநாயக உணர்வுடையோர் நிதியளித்தும் பல வழிகளில் உதவிகள் செய்தும் ஆதரவளித்தனர். இடையிடையே பாடப்பட்ட வி.வி.மு. கலைக் குழுவினரின் பாடல்கள் மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றன. முழக்கங்கள் எழுதப்பட்ட பெரிய அட்டைப் பெட்டிகளை இரு தோழர்கள் தலையில் மாட்டிக் கொண்டு ஆர்ப்பாட்டம் நடந்த இடத்தைச் சுற்றி பிரச்சாரம் செய்தது, கூட்டத்தை ஈர்த்தது.

### தேனியில்

அக்டோபர் 16 ஆம் தேதி காலை 11 மணியிலிருந்து மாலை ஆறு மணி வரை பாளையம், போடி, ஆண்டிப்பட்டி வட்டார வி.வி.மு. அமைப்புகள் இணைந்து தேனி நகரில் தொடர் முழக்க ஆர்ப்பாட்டம் நடத்தின. எழுச்சியான முழக்கங்களுக்கும், உரைகளுக்கும் இடையே, "இன்று தமிழகத்தில் போராடும் எல்லாப் பிரிவினரும் காட் ஒப்பந்தத்துக்கு எதிராக அணிதிரள வேண்டும்" என்பதை மையப்படுத்தி சிறு நாடகம் நடத்தப்பட்டது. நாடகம் ஆர்ப்பாட்டத்தின் உணர்வைச் சரியாக பிரதிபலித்தது. ஆர்ப்பாட்டத்தில் மதுரை அமெரிக்கன் கல்லூரி மாணவி, "மதுரை கல்லூரி மாணவர்கள் போராட்டமும் போலீசின் அடக்குமுறையும்" பற்றிப் பேசியது பொதுமக்கள் கவனத்தை ஈர்த்து நிறுத்தியது.

### திருச்சியில்

ம.க.இ.க., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. மற்றும் வி.வி.மு ஆகிய அமைப்புகள் இணைந்து காலை ஒன்பது மணி முதல் மதியம் ஒன்றரை மணி வரை திருச்சி ஜங்சன் காதிகிராப்ட் அருகில் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தின. ஆர்ப்பாட்டத்துக்கு பு.மா.இ.மு. மாவட்ட செயலர் தோழர். ராஜா தலைமை தாங்கினார். ஆட்டோ ஓட்டுனர் பாதுகாப்பு சங்கம், அனைத்துத் தரைக்கடை வியாபாரிகள் பாதுகாப்பு சங்கம், தமிழ்நாடு அரசுக் கல்லூரி ஆசிரியர் மன்றம், அனைத்திந்திய மாணவர் பெருமன்றம், தொலைதொடர்பு மற்றும் "பெல்" ஊழியர் சங்கங்கள் மற்றும் கல்லூரி மாணவர்கள் கலந்துகொண்டு ஆர்ப்பாட்டத்தை வீச்சாக நடத்த பங்களித்தனர்.

ம.க.இ.க. மையக் கலைக் குழுவினரின் பாடல்களும் முழக்கங்களும் எழுச்சியூட்டுவதாக அமைந்தன. ஆர்ப்பாட்டத்தின் போதும், பிரச்சாரத்தின் போதும் சந்தித்த பெரும்பான்மையானோர் 'சரியான தருணத்தில் எடுக்கப்


படிப்பகம்

www.padippakam.com

படும் போராட்டம் இது' என்று ஆதரித்து வரவேற்றனர்.

### கடலூரில்

தலைமை அஞ்சல் நிலையம் எதிரில் மாலை 3 மணி முதல் இரவு 7 மணிவரை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்துக்கு நெய்வேலி பகத்சிங் இன்கோ செர்வ் தொழிற்சங்க தோழர் ஷாஜிகுமார் தலைமையேற்றார். நெய்வேலி, விருத்தாச்சலம், சீர்காழி பகுதிகளிலிருந்து தோழர்கள் கலந்து கொண்டனர்.

### மானாமதுரையில்

அக்டோபர் 16 ஆம் தேதி மாவட்டத் தலைநகரங்களில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தை விளக்கி பத்தாம் தேதி மானாமதுரையில் தெருமுனைப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. காலை ஒன்பது மணியளவில் ரயில் நிலையத்தில் தொடங்கிய பிரச்சாரம் ஸ்டேட் பாங்க், உச்சமாகாளியம்மன் கோயில், அண்ணா சிலை, உடைகுளம், பேரூராட்சி அலுவலகம் முதலான இடங்களின் வழியே பழைய பேருந்து நிலையத்தில் மாலை நிறைவு பெற்றது.

### பெரம்பலூரில்

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே மாலை 4 மணி முதல் 6 மணிவரை கண்டன ஆர்ப்பாட்டம் தோழர் கதிரவன் தலைமையில் நடைபெற்றது. பு.மா.இ.மு., வி.வி.மு. தோழர்களின் முழக்கங்கள் மக்களிடையே வரவேற்பைப் பெற்றன.

### கோவையில்

கோவை நகரில் அறிவிக்கப்படாத போலீசு காட்டாட்சிதான் நடந்து வருகிறது. கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு ஒரு மாதம் முன்பே விண்ணப்பித்தும் முறையான அனுமதி உத்தரவை அளிக்காமல் வேண்டுமென்றே போலீசார் இழுத்தடித்தனர். உச்சநீதி மன்ற தீர்ப்பைக் காட்டி சட்டம் - ஒழுங்கு நாடகமாடியது போலீசு. நகரில் சுவரெழுத்து எழுதவும், தட்டி வைக்கவும் கூட அனுமதியில்லை. கடைசியில் அக்டோபர் பதினாறாம் தேதி காலை ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதிப்பதாக கூறினர். பதினைந்தாம் தேதி இரவு திடீரென ''காலையில் வேண்டாம்! மாலையில் நடத்துங்கள்!'' என்று கூறியது போலீசு.

ஆனால், இந்து மதவெறிக் கும்பலுக்கோ சுவரெழுத்து எழுதவும், மாநாடு நடத்தவும் தாராளமாய் அனுமதித்துள்ளது. போலீசின் இந்து மதவெறிக்கு ஆதரவான நடவடிக்கைகளையும் அம்பலப்படுத்தி பதினாறாம் தேதி மாலை ஆர்ப்பாட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது.

### ஈரோட்டில்

மாலை 4 மணியளவில் ஈரோடு பன்னீர்செல்வம் பூங்கா அருகில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் பெரிய அளவில் ''ஜெயா'' உருவ கார்டூன் பொம்மை அவரது பாசிசத் தன்மையைக் காட்டும் வண்ணம் வைக்கப்பட்டது. முழு ஆர்ப்பாட்டத்தையும் உள்ளூர் கேபிள் தொலைக்காட்சி ஒளிபரப்பியது. ஆர்ப்பாட்டத்திற்கு 2 மணி நேரம் மட்டுமே அனுமதித்திருந்தது போலீசு. பாசிச ஜெயாவையும், போலீசின் அடக்குமுறைகளையும் அம்பலப்படுத்தும் முழக்கங்களால் சீண்டப்பட்ட போலீசு, ஒரு மணி நேரத்தில் முடித்துக் கொள்ளும்படி நெருக்கி தனது எஜமான விசுவாசத்தைக் காட்டிக் கொண்டது.

### தருமபுரியில்

மாவட்டம் முழுவதும் உள்ள பல கிராமங்களில் முப்பதுக்கும் மேற்பட்ட தோழர்கள் தொடர் பிரச்சார இயக்கம் மேற்கொண்டனர். இரவு நேரங்களில் விவசாயிகளோடு அமர்ந்து அரசியலைப் பேசியும் கலை நிகழ்ச்சிகள் நடத்தியும் ஆர்ப்பாட்டத்தின் மையக் கருத்தை விளக்கினர். பிரச்சாரத்துக்குப் பின் தோழர்களை வீடு வீடாக அழைத்துச் சென்று உணவு கொடுத்தும் நிதி கொடுத்தும் விவசாயிகள் ஆதரித்தனர். ஒருநாள், இருநாள் இல்லை; நாற்பது நாட்கள் தோழர்களை மக்களே பராமரித்தார்கள்.

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு முழுநாள் தொடர் முழக்க ஆர்ப்பாட்டம் நடத்த போலீசு அனுமதி தர மறுத்து விட்டதால், பென்னாகரத்தில் முழு நாள் தொடர்முழக்க ஆர்ப்பாட்டமும், கந்திலி, கண்ணடள்ளி, போச்சம்பள்ளி, மத்தூர், ஆகிய நான்கு இடங்களில் கண்டன ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது.

பென்னாகரத்தில் ஆர்ப்பாட்டம் நடந்த இடத்தை நோக்கி தோழர்கள் திரண்டு வந்ததே பேரணி போல் காட்சியளித்தது. ஜெயலலிதா, சசிகலா, உலக வங்கி, உலக வர்த்தகக் கழகம் போன்று தோழர்கள் வேடமிட்டு வந்தனர். இவர்களை இனியும் அனுமதித்தால் விவசாயிக்கு தற்கொலைதான் ஒரே வழி என்பதை அறிவிக்கும் வண்ணம் விவசாயத்தோழர் ஒருவரை பாடையில் கிடத்திக் காட்சியாகக் கொண்டு வந்தனர். இந்தப் பிரச்சாரம் திரண்டிருந்த மக்களிடையே போராட்ட உணர்வையும், வர்க்கக் கோபத்தையும் மூட்டுவதாக அமைந்தது.

### சென்னையில்

முழுநாள் தொடர்முழக்க ஆர்ப்பாட்டம் நடத்த போலீசு அனுமதி தரவில்லை. எனவே, இரண்டு பகுதிகளில் தனித்தனியாக கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த தீர்மானிக்கப்பட்டது. காலையில் சென்னை மெமோரியல் ஹால் அருகேயும், மாலையில் அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்து நிலையம் எதிரேயும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்ட செய்தி சென்னையில் ஓடும் எல்லா பேருந்துகளிலும் இருக்கும் வண்ணம் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற தோழர்களின் உணர்வுபூர்வமான முழக்கங்கள் கூடி நின்ற மக்களுக்கு நம்பிக்கையூட்டும் விதமாக இருந்தன. ●

**உலக வங்கி, சசிகலா, ஜெயலலிதா, உலக வர்த்தகக் கழகம் போன்று வேடமிட்டு மக்கள் விரோதிகளை அடையாளம் காட்டி பென்னாகரத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்.**





படிப்பகம்

## குஜராத் தேர்தல்:

# முசுலீம் வேட்டையோடு ஓட்டு வேட்டை

"இரண்டு சட்டசபை கூட்டங்களுக்கு இடையே ஆறு மாதங்களுக்கு மேல் இடைவெளி இருக்கக் கூடாது'' என்பது இந்திய அரசியல் சாசனச் சட்ட விதி. இந்த விதியின் படி, கடந்த ஏப்ரல் மாதம் கடைசியாகக் கூடிய குஜராத் சட்டமன்றம், அக்டோபர் 6ஆம் தேதிக்குள் கூடியிருக்க வேண்டும். ஆனால், தற்பொழுது அம்மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை இல்லை என்பது தான் விநோதமான சிக்கல்.

குஜராத் மாநில முதல்வர் நரேந்திர மோடி அம்மாநில சட்டசபையை ஜூலை மாதம் 19 ஆம் தேதி வலுக்கட்டாயமாகக் கலைத்தார். ''ஏப்ரல் மாதம் கூடிய சட்டசபை, அரசியல் சாசன விதிப்படி அக்டோபர் 6-ஆம் தேதிக்குள் கூடியாக வேண்டும். எனவே, தேர்தல் ஆணையம் செப்டம்பர் மாதத்திற்குள் குஜராத் மாநில சட்டசபைக்குத் தேர்தல் நடத்திவிடும். அம்மாநிலத்தில் பரவியுள்ள இந்து மதவெறியைப் பயன்படுத்திக் கொண்டு, எளிதாக மீண்டும் ஆட்சியைப் பிடித்து விடலாம்'' என இந்து மதவெறிக் கும்பல் திட்டம் போட்டிருந்தது.

ஆனால், தேர்தல் ஆணையர்களோ, குஜராத் மாநிலத்திற்கு நேரடியாக வந்து, அம்மாநில நிலைமையைப் பற்றி விசாரித்து அறிந்து, அம்மாநில சட்டசபைத் தேர்தலை நவம்பர் அல்லது டிசம்பர் மாதம் தான் நடத்த முடியும் என அறிவித்து, இந்து மதவெறியர்களின் ஆசையில் மண்ணை அள்ளிப் போட்டார்கள்.

தேர்தல் ஆணையத்தின் இந்த உத்தரவு பற்றிக் கருத்துக் கூறக் கேட்டு, குடியரசுத் தலைவர் மூலமாக உச்சநீதி மன்றத்தை நாடியது மைய அரசு. ''குஜராத் தேர்தல் தொடர்பான தேர்தல் ஆணையத்தின் முடிவில் உச்சநீதி மன்றம் தலையிடாது'' என உச்சநீதி மன்ற அரசியல் சாசன அமர்வு நீதிமன்றம் கூறிவிட்டது. அதே சமயம், ''சட்டசபை கலைக்கப்பட்ட பின்பு, மோடி குஜராத் மாநில காபந்து முதல்வராகத் தொடருவதற்கு அரசியல் சாசனத்தில் இடமே இல்லை'' எனக் கூறித் தொடுக்கப்பட்ட வழக்கில் தீர்ப்பு வழங்குவதையும், தேர்தல் நடத்துவது குறித்து தேர்தல் ஆணையத்திற்குள்ள அதிகாரம், குஜராத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்த வேண்டும் ஆகியவை பற்றி கருத்துக் கூறுவதையும் உச்சநீதி மன்றம் தள்ளிப்போட்டு விட்டது. சுருக்கமாகச் சொன்னால், குஜராத் சட்டசபை கலைக்கப்பட்ட பிறகு, அம்மாநிலத்தில் நடந்து வரும் இந்து மதவெறியர்களின் ஆட்சி சட்டபூர்வமானதா, அரசியல் சாசனத்திற்கு உட்பட்டதா என்பதே சர்ச்சைக்குரியதாகிவிட்டது.

ஆர்.எஸ்.எஸ். தலைவர் சுதர்சன் தொடங்கி இந்து முன்னணி இராம கோபாலன் வரை, ஆர்.எஸ்.எஸ். விசுவாசி ''சோ'' தொடங்கி அ.தி.மு.க. தலைவி ஜெயா வரையிலும் அனைத்து இந்து மதவெறியர்களும், ''தினம் தினம் படுகொலைகள் நடக்கும் காசுமீரில் தேர்தல் நடத்தும் பொழுது, குஜராத்தில் ஏன் நடத்தக் கூடாது? பாபர் மசூதி இடிக்கப்பட்ட பின் நாடெங்கும் மதக் கலவரம் நடந்தது. அதைக்காட்டி மூன்று மாநில பா.ஜ.க. அரசுகள் கலைக்கப்பட்டு, அடுத்த ஆறு மாதத்திற்குள் அம்மாநிலங்களில் தேர்தல்கள் நடத்தப்பட்டன.'' – இப்படி பல உதாரணங்களைக் காட்டி, தேர்தல் ஆணையம் குஜராத் விவகாரத்தில் வரம்பு மீறி நடத்து கொள்வதாகக் குற்றம் சாட்டுகிறார்கள். இந்து மதவெறியர்களின் இக்குற்றச் சாட்டைக் கொஞ்சம் பச்சையாகச் சொன்னால், ''இந்திய ஜனநாயகமே அப்பாவி மக்களின் பிணங்களின் மீதுதான் ராஜநடை போடுகிறது. அப்படியிருக்கும் பொழுது, குஜராத்தில் மட்டும் ஏன் தடை விதிக்கிறீர்கள்?'' என்பதுதான்!

இந்து மதவெறியர்களின் விருப்பப் படி பார்த்தால், தேர்தல் ஆணையம் அக்டோபர் மாதத்திற்கு முன் தேர்தலை நடத்தி முடித்திருக்க வேண்டும். ஆனால், தேர்தல் ஆணையமோ, நவம்பர் அல்லது டிசம்பரில்தான் குஜராத்தில் தேர்தலைச் சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடத்த முடியும் எனக் கூறிவருகிறது.




இதன்படி பார்த்தால், குஜராத்தில் அமைதியான முறையிலும், நியாயமாகவும், சுதந்திரமாகவும் தேர்தல் நடத்துவதற்கு இந்து மதவெறியர்களுக்கும், தேர்தல் ஆணையத்திற்கும் இடையே உள்ள ஒரே வேறுபாடு, ஒன்றிரண்டு மாத இடைவெளியைத் தவிர வேறெதுவும் கிடையாது. தேர்தல் ஆணையமும், உச்சநீதிமன்றமும், காங்கிரசும், சி.பி.எம். கட்சிகளும் சொல்கிறபடி இன்னும் ஒன்றிரண்டு மாதங்களில் சகஜ நிலைக்குத் திரும்பிவிடும் நிலையிலா குஜராத் இருக்கிறது?

சபர்கந்தா மாவட்டத்திலுள்ள கரியத்ரா கிராமத்தில் 40 முசுலீம் குடும்பங்கள் உள்ளன. இவர்களுக்கு அக்கிராமத்தைச் சேர்ந்த 'இந்துக்கள்' யாரும் பச்சத் தண்ணீர்கூடத் தரக்கூடாது எனக் கட்டளையிடப்பட்டுள்ளது. இந்த முசுலீம்களோடு, எந்த இந்துவாவது பேசினால், அவர்க

ளுக்கு ஐநூறு ரூபாய் அபராதம் விதிக்கப் படுமாம். அக்கிராமத்தைச் சேர்ந்த முசு லீம்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களை 14 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள ஊரில் இருந்து வாங்கி வர வேண்டிய நெருக்கடிக்குள் 'தள்ளப் பட்டுள்ளனர்.

கடந்த ஜூலை 30 ஆம் தேதி இரவு மின்தடையேற்பட்டு, குஜராத் மாநிலமே இருண்டு போனது. அப்பொழுது அகம தாபாத், பரோடா நகர முசுலீம் பகுதி களில் பெரும் பீதி பரவி, குழந்தைகள் வீறிட்டு அழத் தொடங்கின. குழந்தை களின் அழுகை அடுத்த நாள் காலை வரையில் தொடர்ந்திருக்கிறது. அகம தாபாத் நகரில் மீண்டும் கலவரம் தொடங் கிவிட்டதாக வதந்தி பரவ, அந்நகரின் சில பகுதிகளில் இந்து – முசுலீம்களி டையே கைகலப்பும், கல்வீச்சும் நடந்தன.

ராஜ்கோட் மாவட்டத்திலுள்ள தொராஜி நகரில் இரண்டு ரிக்ஷா ஓட்டும் தொழிலாளர்களிடையே நடந்த வாய்ச்சண்டை, இந்து – முசுலீம் கலவர மாக மாறியது. அக்கலவரத்தில் 10 பேர் படுகாயடைந்தனர். கலவரத்தைக் கட்டுப் படுத்த தொராஜி நகரில் ஊரடங்கு உத்த ரவு அமல்படுத்தப்பட்டது.

– இப்படி உரசினால் பற்றிக் கொள்ளும் நிலையில்தான் குஜராத் மாநிலம் உள்ளது. இந்தச் சமயத்தில், ''கௌரவ் யாத்திரை'' என்ற பெயரில் முசுலீம்களைத் தூண்டிவிடும் வேலையில் இறங்கியிருக்கிறார், குஜராத் மாநில முதல்வர் நரேந்திர மோடி.

''நாம் என்ன செய்ய வேண்டும்? அவர்களுக்காக நிவாரண மையங்களை நடத்துவோமா? குழந்தைகளை உற்பத்தி செய்து தள்ளும் மையங்களைத் திறக்க நாம் விரும்புகிறோமா? ஆனால், சிலருக்கு இந்த மையங்கள், நாம் ஐவர், நமக்கு இருபத்தைந்து என்பதாகத் தெரிகி றது. இப்படி வதவதவென்று பெருகிக் கொண்டு போகிறவர்களுக்கு நாம் ஒரு பாடம் புகட்ட வேண்டும்'' – முசுலீம் களைக் கிண்டலடித்து. அவமானப் படுத்தும் இந்த வார்த்தைகள் ஆர்.எஸ்.எஸ்.-இன் அடிமட்டத் தொண்டனின் வாயில் இருந்து வந்தவை யல்ல. கௌரவ் யாத்திரையின் பொழுது குஜராத் முதல்வர் மோடி அவிழ்த்து விட்ட பழைய புளுகு மூட்டை இது.

முசுலீம்களை அவமானப்படுத்தும் இந்த இந்து மதவெறிப் பேச்சை குஜ ராத்தின் அதிகார வர்க்கத்தால் கூடச் சகித்துக் கொள்ள முடியவில்லை. குஜராத் மாநில உளவுத்துறை, கலவரத்தைத் தூண்டிவிடும் இந்தப் பேச்சுக்காக

**குஜராத்தில் நியாயமாகவும், சுதந்திரமாகவும் தேர்தல் நடத்துவதற்கு இந்து மத வெறியர்களுக்கும் தேர்தல் ஆணையத்திற்கும் இடையே உள்ள ஒரே வேறுபாடு, ஒன்றிரண்டு மாத இடைவெளி தவிர, வேறு எதுவும் இல்லை.**

மோடிக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என போலீசு துறையின் இயக் குனருக்கும், உள்துறை கூடுதல் செயலா ளருக்கும் கடிதம் எழுதியது. இதனால் ஆத்திரமடைந்த மோடி உளவுத் துறையைச் சேர்ந்த மூன்று உயர் அதிகா ரிகளை உப்பு சப்பில்லாத பதவிகளுக்குத் தூக்கியடித்தார்.

ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள் கிருஷ்ண ஜெயந்தியையும், விநாயகர் சதுர்த்தி யையும் முசுலீம்களைத் திட்டுவதற்கும், இந்து மதவெறியை மேலும் மேலும் தூண்டுவதற்கும் பயன்படுத்திக் கொண்டனர். பரோடா நகரில் விநாயகர் ஊர்வலத்தின் பொழுது நடந்த கலவ ரத்தில் நான்கு பேர் கொல்லப்பட்டனர்; 20 பேர் படுகாயமடைந்தனர்.

அகமதாபாத் நகரிலுள்ள சுவாமி நாராயணன் கோவிலில் நடந்த தாக்கு தலை, இந்து மதவெறியோடு, பாகிஸ்தான் எதிர்ப்பு தேசிய வெறியைத் தூண்டிவிடுவதற்கு, இந்து மதவெறிக் கும்பல் பயன்படுத்திக் கொண்டது. அக்கோவிலின் மீது தாக்குதல் நடத்திய இரண்டு தீவிரவாதிகளும் பாகிஸ் தானைச் சேர்ந்தவர்கள் என நரேந்திர மோடியும், அத்வானியும் அவிழ்த்து விட்டு வரும் அண்டைப்புளுகை, குஜராத் மாநில போலீசு அதிகாரிகள்கூட நம்ப மறுக்கிறார்கள். ஆனாலும், மோடியோ, ''இந்தத் தேர்தலில் எனக்கும் முஷாரப்புக்கும் இடையேதான் உண்மை யான போட்டி'' என இந்திய தேசிய வெறியைக் கக்கிக் கொண்டு வலம் வரு கிறார். இந்து மதவெறி - இந்திய தேசிய வெறி – படேல் சாதி ஓட்டு மூன்றையும் சரிவிகிதத்தில் கலந்து, தேர்தலில் வெற்றி பெறத் துடிக்கிறது, இந்து மதவெறிக் கும்பல்.

மதவெறி பா.ஜ.க.வுக்கு எதிராக 'மதச் சார்பற்ற' காங்கிரசு என்ன செய்கிறது? பா.ஜ.க. படேல் சாதியினரின் ஓட்டுக் களுக்குக் குறிவைத்துக் காய்களை நகர்த் தினால், காங்கிரசோ குஜராத் மக்கள் தொகையில் 20 சதவீதத்தினராக இருக்கும் சத்திரிய சாதி ஓட்டுக்களைக் குறி வைக்கிறது. இதற்காகவே, சத்திரிய சாதியைச் சேர்ந்த முன்னாள் ஆர்.எஸ்.எஸ்.காரனான சங்கர் சிங் வகே லாவை மாநில காங்கிரசு தலைவராக்கி இருக்கிறது.

''இந்துக்களைத் தாக்கத் தூண்டிவிடும் விதத்தில், முசுலீம்களை இழிவுபடுத்தி பேசி வரும் நரேந்திர மோடிக்கு எதிராக காங்கிரசு ஒரு துரும்பைக்கூட எடுத்துப் போடவில்லை. மாறாக, அக்கட்சி மோடியின் பேச்சை மறைமுகமாக ரசிக்கி றது. ஏனென்றால், மோடியின் இந்தப் பேச்சு முசுலீம் ஓட்டுக்களைச் சிதறாமல் தன் பக்கம் கொண்டு வந்து விடும் எனத் தர்க்கக் கணக்குப் போடுகிறது, காங்கிரசு.

இதுஒருபுறமிருக்க, காங்கிரசு தன்னை மிதவாத இந்து மத சக்தியாகக் காட்டிக் கொள்ளவும் தயங்கவில்லை. சுவாமி நாராயணன் கோவிலில் நடந்த தாக்குதலைக் கண்டித்து உடனடியாகவே காங்கிரசு கட்சி கடையடைப்புப் போராட்டம் நடத்தியது. விசுவ இந்து பரி சத் கூட, காங்கிரசுக்குப் பிறகுதான் ''பந்த்'' நடத்தியது.

மேலும், தாராளமயத் தாக்குதலினால் குஜராத் மாநிலப் பொருளாதாரம் பெரும் நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டு விட்டது. அகமதாபாத் மாவட்டத்தில் மட்டும் சமீபத்தில் 25 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போயினர். அம்மாநிலத்தில் 60 சதவீத சிறு – நடுத்தர தொழில்கள் மூடிக்கிடக் கின்றன. வேலை தேடி அலையும் படித்த இளைஞர்களின் எண்ணிக்கை 15 இலட் சத்தைத் தொட்டுவிட்டது. மக்களின் இந்த அதிருப்தியையும் ஓட்டுக்களாக அறு வடை செய்து கொள்ளக் காத்துக் கிடக்கி றது, காங்கிரசு.

பீதியடைந்த முசுலீம் ஓட்டுக்கள், சத்திரிய சாதி ஓட்டுக்கள், தாராளமயத் திற்கு எதிரான உழைக்கும் மக்களின் அதி ருப்தி இவற்றை அறுவடை செய்து, குஜராத் தேர்தலில் காங்கிரசு வென்று விட்டால் என்ன நடக்கும்? இந்து மத வெறியர்கள் நடத்திய இனப்படு கொலையை விசாரிக்க விசாரணை கமிசன் கிடைக்கலாம். காங்கிரசு தோற்று, பா.ஜ.க. மீண்டும் வென்று விட்டால்... ''குஜராத் பரிசோதனையை'' அவர்கள் நாடெங்கும் நடத்தத் துணிவு கொள்வார்கள். இவை இரண்டில் ஒன்றைத் தவிர, வேறெதையும் குஜராத் தேர்தல் சாதிக்கப் போவதில்லை!

● ரஹீம்

# கள்ளச் சாராய மாஃபியாக்களோடு சி.பி.எம். கூட்டு:

# சீரழிவில் புதிய பரிமாணம்

நாயோடு படுத்தவன் உண்ணியோடுதான் எழுந்திருப்பான் என்பது பழமொழி. நாடாளுமன்றப் பாதையைக் கட்டிக்கொண்டு ஓட்டுப் பொறுக்கிகளாகச் சீரழிந்த சி.பி.எம். கட்சியினர், இப்போது சமூகவிரோத சாராய மாஃபியாக்களின் கூட்டாளிகளாக புதிய பரிணாம வளர்ச்சியை எட்டியிருக்கிறார்கள்.

சமுதாய மாற்றத்துக்காக நிற்கும் கட்சி; லஞ்ச – ஊழலில் ஈடுபடாத கட்சி; சமூக விரோதிகளைத் துணிந்து எதிர்த்து நிற்கும் கட்சி; எளிய வாழ்வும் அர்ப்பணிப்பும் கொண்ட தலைவர்கள் நிறைந்த கட்சி என்றெல்லாம் சி.பி.எம். கட்சியைப் பற்றி பரப்பப்பட்டு வந்த மாயத்தோற்றம் அனைத்தும் இன்று கிழிந்து கந்தலாகி விட்டது.

சி.பி.எம். தலைவர்கள், சாராய மாஃபியாக்களின் நெருங்கிய கூட்டாளிகளாக மாறி, கட்சிக்கு முறையாக மாதாந்திர ''லெவி'' வசூலித்துள்ளனர். பல தலைவர்கள் சாராயக் கும்பலின் இலஞ்சப் பணத்தில் உல்லாச வாழ்க்கையை நடத்தி வந்துள்ளனர். சி.பி.எம். தலைவர்களுக்கிடையே புழுத்து நாறும் குழுச் சண்டையில் இந்த விவகாரம் மெதுவாகக் கசிந்து இப்போது கேரள மாநிலமெங்கும் சந்தி சிரிக்கிறது. முற்றாக அம்பலப்பட்டுப் போன நிலையில், வேறுவழியின்றி ஒரு சிலரைக் கட்சியிலிருந்து நீக்குவதாக அறிவித்து, சி.பி.எம். கட்சித் தலைமை யோக்கியவானாக நாடகமாடி வருகிறது.

கேரளாவில் மணியச்சன் என்பவன் கிரிமினல். கள்ளச்சாராயப் பேர்வழி. இவன் சர்வகட்சிக்கும் புரவலன். தமிழகத்தின் ஆட்டோ சங்கருக்கு உடன் பிறவா சகோதரன். 1996–இல் கேரளாவில் சி.பி.எம். தலைமையிலான இடதுசாரி ஜனநாயக முன்னணி ஆட்சிக்கு வந்ததும், அவன் சி.பி.எம். இன் நெருங்கிய கூட்டாளியானான். சி.பி.எம். கட்சியின் ஆசியுடன் அவனது கள்ளச்சாராய சாம்ராஜ்ஜியம் கொடி கட்டிப் பறந்தது. கலால் துறை அதிகாரிகளை மாற்றவும், தொல்லை தரும் போலீசு அதிகாரிகளை மாற்றவும் இவன் சி.பி.எம். தலைவர்களுக்கு இலட்சக்கணக்கில் வாரியிறைத்துள்ளான்.

மணியச்சனின் இலஞ்சப் பணத்தில் மஞ்சள் குளித்து வந்த சி.பி.எம். தலைவர்கள், கேரளாவில் இடதுசாரிகளின் பொற்கால ஆட்சி நடப்பதாக போதையில் மிதந்தனர். ஆனால், அடுத்த மூன்றாண்டுகளிலேயே இந்தச் சாராயக் கூட்டணியின் கோரமுகம் அம்பலமானது. மணியச்சன் விற்ற கள்ளச்சாராயத்தைக் குடித்த 23 பேர் இரத்த வாந்தி எடுத்து, கல்லுவாதுக்கல் எனும் ஊரில் மாண்டு போனார்கள்; 20–க்கும் மேற்பட்டோர் கண்பார்வை இழந்தார்கள்.

இக்கோரமான சாவுகளைத் தொடர்ந்து கேரள நாளேடுகள் மணியச்சனுக்கும் சி.பி.எம். தலைவர்களுக்குமான கள்ளக்கூட்டை அம்பலப்படுத்தியதோடு, குறிப்பாக சி.பி.எம். கட்சியின் கேரள மாநிலக் கமிட்டி உறுப்பினரும், திருவனந்தபுரம் மாவட்டச் செயலாளருமான சத்தியநேசன், மணியச்சனிடம் இலட்சக்கணக்கில் ''மாமூல்'' வாங்கியுள்ளதாகவும் குற்றம் சாட்டின.

கல்லுவாதுக்கல் சாராயச் சாவுகள் பற்றி விசாரிக்க, நீதிபதி மோகன் குமார் தலைமையில் விசாரணைக் கமிசனை அமைத்த அன்றைய சி.பி.எம். முதல்வர் நாயனார், முதலாளித்துவ பத்திரிகைகள் இடதுசாரி ஆட்சியின் மீது வீண்பழி சுமத்தி அவதூறு செய்வதாகச் சாடினார். ''சத்தியநேசனுக்கும் சாராய மாஃபியா மணியச்சனுக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது; அவர் 45 ஆண்டுகாலமாக கட்சிக்கும் மக்களுக்கும் உழைத்துவருபவர்; பஞ்சாயத்துத் தலைவர், சட்டமன்ற உறுப்பினர், மாவட்டச் செயலாளர், மாநிலக்கமிட்டி உறுப்பினர் – எனப் பல பதவிகளிலும் பொறுப்புகளிலும் இருந்தவர், இத்தனை காலத்தில் அவர் மீது எந்தக் குற்றச்சாட்டும் வந்ததில்லை'' என்று சத்தியம் செய்தார். ''நாங்கள் உழைக்கும் மக்களிடம்தான் கட்சிக்கு நிதி திரட்டுகிறோம். நாங்கள் சாராய மாஃபியாவிடம் காசு வாங்கியதாக முதலாளித்துவ பத்திரிகைகள் அவதூறு செய்வதைக்கண்டு, கேரள மக்கள் இப்பத்திரிகைகள் மீது காறி உமிழ்கிறார்கள்'' என்று பத்திரிகைகளைச் சாடினார்.

சாராயச் சாவுகள் பற்றிய விசாரணை ஆமை வேகத்தில் நகர்ந்து கொண்டிருந்தது. சாராய மாஃபியா மணியச்சன் கைது செய்யப்பட்டு அவனது ''டைரி'' மற்றும் பிற கணக்கு வழக்கு ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. அவற்றில் மணியச்சனுக்கும் சி.பி.எம். தலைவர்களுக்குமிடையிலான கள்ள உறவும் பணப்பட்டுவாடா விவகாரமும் அம்பலமாகியது. ஆயினும் தமது ஆட்சியதிகாரத்தைக் கொண்டு இவற்றை சி.பி.எம். தலைவர்கள் மூடி மறைத்தனர்.

இதுவொருபுறமிருக்க, சி.பி.எம். கட்சிக்குள் பதவி சுகத்துக்காக நடந்து வந்த குழுச்சண்டைகள், இவ்வாண்டு தொடக்கத்தில் திருவனந்தபுரத்தில் நடந்த அகில இந்திய கட்சி மாநாட்டின்போது பகிரங்க நாய் சண்டையாக முற்றியது. உட்கட்சித் தேர்தல்களில் மோசடி தில்லுமுல்லுகள் செய்து தமது விசுவாசிகளைப் பதவியில் அமர்த்தியுள்ளதாக கேரள மாநிலச் செயலாளர் பினாரயி விஜயன் தலைமையிலான குழுவினரும், அச்சுதானந்தன் தலைமையிலான போட்டிக் குழுவினரும் பரஸ்பரம் குற்றம் சாட்டிக் கொண்டு கழுத்தறுப்பு வேலைகளில் ஈடுபட்டனர். புழுத்து நாறும் இக்குழுச் சண்டைகளால் கட்சியே கலகலத்துப் போன நிலையில், சி.பி.எம். மத்தியக் கமிட்டி கட்சி ரீதியாக இதுபற்றி விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு மாநிலக் கமிட்டிக்கு உத்தரவிட்டது. அதன்படி கேரள மாநிலக் கமிட்டி 3 பேரைக் கொண்ட ஒரு விசாரணைக் குழுவை அமைத்து, குழுச் சண்டைகளைப் பற்றி விசாரித்தது. இதேநேரத்தில், கேரள சட்டமன்றத் தேர்தலில் 'இடதுசாரி'க் கூட்டணி தோல்விய

**சாராய மாஃபியாவிடம் இலஞ்சம் வாங்கிய கேரள சி.பி.எம். காம்ரேடுகள் சத்தியநேசன் மற்றும் கௌதமன்.**





டைந்து, காங்கிரசு தலைமையிலான கூட்டணி ஆட்சிக்கு வந்தது. அதைத் தொடர்ந்து சி.பி.எம். கூட்டணி ஆட்சியில் நடந்த சாராயச் சாவுகள் பற்றிய விசாரணையும் சூடுபிடிக்கத் தொடங்கியது.

விசாரணையில், சி.பி.எம். தலைவர்களுக்கும் சாராய மாஃபியா மணியச்சனுக்குமிடையிலான கள்ளக் கூட்டும் பணப்பட்டுவாடா விவகாரங்களும் ஆதாரங்களுடன் வெளிவரத் தொடங்கின.



**கள்ளச் சாராய மாஃபியா; சி.பி.எம். புரவலர் மணியச்சன்.**

திருவனந்தபுரம் மாவட்ட சி.பி.எம். செயலாளரும் மாநிலக் கமிட்டி உறுப்பினருமான சத்தியநேசன், மணியச்சனிடமிருந்து 1998-ம் ஆண்டில் ரூ. 4.02 இலட்சம் இலஞ்சமாகப் பெற்றுள்ளார். இந்தப் பணப்பட்டுவாடா பற்றி மணியச்சன் தனது டைரியில் குறித்து வைத்துள்ளான்.

இது தவிர, கேரள மாநிலக் கமிட்டி உறுப்பினர்களான பேரூர்கடா சதாசிவன், ஆர். பரமேஸ்வரன் பிள்ளை, கொனியக்கோடு கிருஷ்ணன் நாயர், கடகம்பள்ளி சுரேந்திரன், சுசீலன் ஆகியோருக்கும் மணியச்சன் பல்லாயிரக்கணக்கில் இலஞ்சம் கொடுத்துள்ளான். பணப் பட்டுவாடா பட்டியலும், இதர ஆதாரங்களும் விசாரணையில் சிக்கியுள்ளன.

மணியச்சனிடம் சத்தியநேசன் தவிர, சி.பி.எம்.கட்சியின் 22 பேர் பல்லாயிரக் கணக்கில் கட்சிக்கு நன்கொடை வாங்கியுள்ளனர். அவர்களில் பலர் சி.பி.எம். மாநிலக் கமிட்டி, மாவட்டக் கமிட்டி உறுப்பினர்களாவர். சி.பி.எம். தலைவர்கள் மட்டுமின்றி, காங்கிரசு, வலது கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரமுகர்களும் நன்கொடை பெற்றுள்ளனர்.


மணியச்சனின் மருமகன் இரகசிய உலக ஹவாலா பேர்வழி. இவன் பணக் கடத்தல் குற்றத்துக்காக துபாயில் சிறையிடப்பட்டுள்ளான். இவனை விடுவிக்க, தனது அரசியல் செல்வாக்கைக் கொண்டு ஹவாலா புள்ளிகள் மூலம் உரிய நடவடிக்கை எடுப்பதாகக் கூறி சி.பி.எம். தலைவர் சத்தியநேசன் 45 இலட்சம் ரூபாயை மணியச்சனிடம் வாங்கியுள்ளார். இதற்காக, சத்தியநேசனின் விசுவாசியும் சி.பி.எம்–இன் திருவனந்தபுரம் பாரசாலா பகுதிக் கமிட்டி செயலாளருமான கௌதமன் என்பவர், ஹவாலா பணத்துடன் துபாய்க்குச் சென்று சம்பந்தப்பட்ட இரகசிய உலகப் பேர்வழிகளைச் சந்தித்துவிட்டுத் திரும்பியுள்ளார்.

–இப்படி அடுக்கடுக்காக ஆதாரங்கள் வெளிவந்து, மணியச்சன் கேரள சி.பி.எம். கட்சியையே விலைபேசிவிட்ட உண்மையும் அம்பலமானது. இதைக் கண்டு பீதியடைந்த சி.பி.எம். தலைவர்கள், கட்சி ரீதியாக அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவின் முடிவுகளின் படி, சத்தியநேசனைக் கட்சியிலிருந்து நீக்கிவிட்டதாகவும், அவரது விசுவாசியான கௌதமனை ஓராண்டு காலத்துக்குத் தற்காலிக நீக்கம் செய்வதாகவும் கடந்த மாதத்தில் அறிவித்துள்ளனர். கட்சியின் விசாரணைக் குழு நடத்திய ஆய்வுகளின் அடிப்படையில் இம்முடிவுகளை எடுத்துள்ளதாகவும், கட்சியில் தீய சக்திகள் ஊடுருவி விட்டதால் அவற்றைக் களையெடுத்து கட்சியைத் தூய்மைப்படுத்தி விட்டதாகவும் சி.பி.எம். தலைவர்கள் விளக்கமளித்துள்ளனர்.

மீன் குழம்பிலிருந்து மீனை எடுத்துவிடுவதால், அது சைவ சாம்பாராகிவிடுவதில்லை. சி.பி.எம். தலைவர்களின் இந்தப் பித்தலாட்டத்தை மக்கள் நம்பவும் தயாராக இல்லை. சாராய மாஃபியா மணியச்சனிடம் பணம் வாங்கிய சி.பி.எம். தலைவர்கள் 23பேர். இவர்களில் சத்தியநேசன், கௌதமன் மற்றும் இருவர் மீது மட்டுமே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மற்ற 19 பேர் மீது எந்த நடவடிக்கையும் இல்லை. ஏனெனில், இவர்கள் மணியச்சனிடம் வாங்கிய பணத்தைக் கட்சியிடம் ஒப்படைத்து கணக்குகாட்டிவிட்டார்களாம்! சி.பி.எம்.-இன் கொள்கைப்படி சமூக விரோதிகளிடம் கூட கட்சிக்கு நன்கொடை வாங்கலாம்; ஆனால், கணக்கு காட்டிவிடவேண்டும்!

மூன்றாண்டுகளுக்கு முன்பே சத்தியநேசன் சாராய மாஃபியா மணியச்சனிடம் இலஞ்சப் பணம் வாங்கியுள்ளதைப் பற்றி கேரள நாளேடுகள் அம்பலப்படுத்திய போது, அவையெல்லாம் முதலாளித்துவ அவதூறு என்று சாடியதோடு, சத்தியநேசனை உத்தமபுத்திரனாகச் சித்தரித்த அன்றைய கேரள சி.பி.எம். முதல்வர் நாயனார் இப்போது வாய்மூடிக் கிடக்கிறார். சத்தியநேசனை நியாயப்படுத்திய குற்றத்திற்காக, அவர் மக்களிடம் பகிரங்க மன்னிப்பும் கேட்கவில்லை. ஏனெனில் அவரும் மணியச்சன் – சத்தியநேசனின் கூட்டாளிதான், நாயனாரின் அரசியல் செயலாளரான சசிதரன் என்பவருக்கு, ரூ. 50 லட்சம் கொடுத்துள்ளதாக மணியச்சனின் தம்பி விசாரணைக் கமிசனில் வாக்குமூலம் அளித்துள்ளான். மேலும், நாயனார் முதல்வராகப் பதவியில் இருந்தபோது, அவரது மனைவி குருவாயூர் கோயிலுக்கு அடிக்கடி மணியச்சனின் காரில்தான் போய்வந்துள்ளார். ஆனாலும் நாயனார் மீது விசாரணையுமில்லை; நடவடிக்கையுமில்லை.

சி.பி.எம். தலைமையிலான கூட்டணி ஆட்சி நிலவிய கடந்த ஐந்தாண்டு காலத்தில் எல்லா மாவட்டங்களிலும். சில பகுதிகளில் வட்டார அளவிலும் கட்சி மற்றும் மக்கள்திரள் அமைப்புகளுக்கு பளபளப்பான அடுக்குமாடி அலுவலங்கள் கட்டப்பட்டுள்ளன. கட்சித்



www.padippakam.com

தலைவர்கள் கார், பங்களா, செல்போன்களுடன் உலாவருகின்றனர். இவ்வளவு பணமும் வசதிகளும் யார் கொடுத்த 'நன்கொடை' என்பது பற்றி சி.பி.எம். தலைவர்கள் இதுவரை விசாரணை நடத்தவில்லை. சமூக விரோதிகளிடம் 'நன்கொடை' வாங்கி கட்சி நடத்துகிறோமே என்ற குற்ற உணர்வோ, வெட்கம் – மானமோ அவர்களிடம் இல்லை.

"நீ மட்டும் சம்பாதித்து விட்டாய்; நான் என்ன இளிச்சவாயனா? எனக்கும் உரிய பங்கு கொடுத்துவிடு! இல்லாவிட்டால் உனக்குக் குழிபறித்து விடுவேன்!" என்ற அடிப்படையில்தான் கேரள சி.பி.எம். கட்சியில் குழு சண்டைகள் புழுத்து நாறுகிறது. கேரள சி.பி.எம் கட்சியின் அச்சுதானந்தன் தலைமையிலான குழு, விஜயன் தலைமையிலான குழு – இருதரப்புமே சமூக விரோதிகளின் கூட்டாளிகளாகச் சீரழிந்து மோதிக் கொள்வதால், என்ன செய்வது என்று புரியாமல் கட்சித் தலைமை தடுமாறி நிற்கிறது. அம்பலப்பட்டுப் போன தலைவர்களை மாநிலக் கமிட்டியிலிருந்து தற்காலிக நீக்கம் செய்தும், ஆலப்புழா மற்றும் திருச்சூர் மாவட்டக் கமிட்டிகளைக் கலைத்தும், இருதரப்புக்கும் பொதுவான நபர்களைப் பொறுப்பில் அமர்த்திக் கட்சியை முட்டுக்கொடுத்து தூக்கி நிறுத்த முயன்று வருகிறது. ஆனால், எவ்வளவுதான் முயன்றாலும் சமூக விரோதிகளிடம் நன்கொடை வாங்கிப் பிழைக்கும் சீரழிந்த தலைவர்களைக் கொண்ட சி.பி.எம் கட்சி, மணற்கோட்டையாகச் சரிவது நிச்சயமாகிவிட்டது.

சி.பி.எம். கட்சியிலுள்ள புரட்சிகர அணிகளே, உங்களுக்கு நினைவிருக்கிறதா? கையூர் தியாகிகளில் ஒருவரான அப்பு என்ற தோழர், தூக்குமேடையில் ஏற்றப்படும்போது, அக்கால வழக்கப்படி தனது காதிலே அணிந்திருந்த சிறிய கடுக்கனைக் கழற்றிக் கொடுத்துக் கட்சிக்குத் தனது மாதாந்திர லெவியைச் செலுத்திவிடுமாறு கூறிவிட்டுத் தியாகியானார். அந்தக் கடுக்கனைப் பொது மக்களிடம் ஏலம் விட்டுக் கட்சிக்கு நிதிதிரட்டினார், அன்றைய கேரள கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளரான கிருஷ்ணப்பிள்ளை. ஆனால், இன்று சி.பி.எம். தலைவர்களோ சாராய மாஃபியாக்களிடம் போய் கட்சிக்கு மாதாந்திர லெவி வசூலிக்குமளவுக்குச் சீரழிந்து விட்டனர்.

சி.பி.எம். கட்சியின் தலைமையிலுள்ள மக்கள் திரள் அமைப்புகளில் செயல்படும் புரட்சிகர இளைஞர்களே, உங்களுக்கு நினைவிருக்கிறதா? கடலூரில் கள்ளச்சாராயக் கும்பலுக்கு எதிராக உறுதியாக நின்று போராடிய இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தைச் (DYFI) சேர்ந்த இளம் தோழர், அச்சாராய கும்பலால் வெட்டிக் கொல்லப்பட்டுத் தியாகியானார். சமூக விரோதிகளுக்கு எதிரான அவரது உறுதியையும் தியாகத்தையும் நீங்கள் ஏற்றிப் போற்றுகிறீர்கள். எந்த சாராயக் கும்பலுக்கு எதிராக அந்த இளம் தோழர் போராடித் தியாகியானாரோ, அந்தச் சமூக விரோதிகளுடன்தான் உங்கள் கட்சித் தலைவர்கள் கூட்டணி கட்டிக் கொண்டுள்ளார்கள்.

இந்தத் துரோகத் தலைமையை இன்னமும் ஏற்று அங்கீகரிக்கப் போகிறீர்களா? பா.ஜ.க.வின் பங்காருலட்சுமணன் போல, "கட்சிக்குத்தான் லஞ்சம் வாங்கினேன்; எனக்காக அல்ல" என்று நியாயவாதம் பேசும் சி.பி.எம். துரோகத் தலைவர்களை இன்னமும் நம்பப்போகிறீர்களா? அல்லது, சீரழிந்த சி.பி.எம். கட்சியை விட்டு வெளியேறி நக்சல்பாரி புரட்சியாளர்களுடன் இணைந்து புரட்சிப் பாதையில் அணிவகுக்கப் போகிறீர்களா?

● பாலன்

அன்பார்ந்த வாசகத் தோழர்களே,

உங்கள் அனைவருக்கும் எமது 86-வது நவம்பர் புரட்சி தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். பு.ஜ. பதினெட்டாம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதையொட்டி நேரிலும், அஞ்சலிலும் வாழ்த்துக்களைத் தெரிவித்த வாசகர்கள், முகவர்களுக்கு எமது நன்றிகள்.

— ஆசிரியர் குழு

## மனித உரிமை பாதுகாப்பு கவுன்சில் நடத்திய கண்டன ஆர்ப்பாட்டம்

கடலூர் மாவட்டம் விருத்தாச்சலத்தில் கடந்த செப்டம்பர் பதினேழாம் தேதி மாலை தமிழகத்துக்குத் துரோகம் இழைக்கும் மைய அரசு மற்றும் கர்நாடக அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மனித உரிமை பாதுகாப்பு கவுன்சில் (HRPC) நடத்திய இந்தக் கண்டன ஆர்பாட்டத்தில் வழக்கறிஞர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், பல்வேறு தொழிற் சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.



காவிரி நீரில் தமிழகத்தின் பாரம்பரிய உரிமை, சட்டரீதியான உரிமை பற்றியும், இன்றைய உலகமயச் சூழலில், உலகமயத்தால் ஏற்பட்டிருக்கும் பட்டினிச் சாவினையும், அரசின் பொருளாதாரக் கொள்கையையும் தவிர்த்து காவிரிப் பிரச்சனையை மட்டுமே தனித்துப் பார்க்க முடியாது என்றும் விளக்கினார் கடலூர் மாவட்டச் செயலர் வழக்கறிஞர் இராசு.

மத்திய அரசானது சட்டப்படியான தீர்ப்பை அமுல்படுத்தத் தவறியதன் மூலம் தமிழக விவசாயிகளின் உயிர்வாழும் உரிமையைப் பறித்துள்ளது. மனித உரிமை என்பது எந்தெந்த உரிமைகள் இல்லாமல் மனிதன் நாகரிகமாக உயிர்வாழ முடியாதோ அந்த உரிமைகள் எல்லாம் மனித உரிமைகள்தான். தமிழக விவசாயிகளின் உயிர்வாழும் உரிமையை மீட்டெடுக்கும் விதமாகவே மனித உரிமை பாதுகாப்பு கவுன்சில் இந்தக் கண்டன ஆர்பாட்டத்தை நடத்துவதாக விளக்கியதோடு, "கர்நாடக அரசானது சர்வதேச நதிநீர் ஆணைய விதிகளையும், நடுவர் மன்றம், நதிநீர் ஆணையம், உச்ச நீதி மன்றம் வழங்கிய தீர்ப்புகளையும் மீறியதன் மூலம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைக் கேலிக்குள்ளாக்குகிறது" என்றும் உரையாற்றிய அனைவரும் அம்பலப்படுத்தினர்.

தகவல்:
பு.ஜ. செய்தியாளர்,
கடலூர்.


படிப்பகம்

www.padippakam.com

**தலையங்கம் தொடர்ச்சி....**

''குஜராத்தில் உடனடியாக சட்டப் பேரவைத் தேர்தலை நடத்த (தேர்தல் ஆணையரும் சோனியாவும் கிறித்தவ மதத்தினர் என்பதால்தான்) மறுக்கிறார்'' என்று ஏசுகிறார் குஜராத்தை ஆளும் இந்துமத பயங்கரவாதி நரேந்திரமோடி. சோனியா, ''ஒரு இத்தாலிய நாய்'' என்று கீழ்த்தரமாகத் திட்டுகிறார் விசுவ இந்து பரிசத்தின் துணைத் தலைவர் பிரவீன் தொகாடியா. இப்படியே மேல் மட்டம் தொடங்கி இந்து முன்னணி இராம கோபாலன், சங்கராச்சாரி வரை இந்துவெறியர்களின் வாய்க்கொழுப்பு பொங்கி வழிகிறது.

பல்வேறு பொய்யான காரணங்களைக் கூறி இசுலாமியர்கள், கிறித்தவர்கள் என்று மாற்று மதத்தினருக்கு எதிராக மட்டும்தான் இந்து மதவெறியர்கள் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்றில்லை. அரியானா - துலினாகிராமச் சம்பவம், இதோ இந்துக்களின் ஒரு பிரிவினர்தான் என்று கூறப்படும் தாழ்த்தப்பட்டவர்களைக் கூட இந்து வெறியர்களின் பயங்கரவாதம் விட்டுவிடாது என்பதற்குச் சாட்சியமாக வந்திருக்கிறது.

நாடாளுமன்ற வளாகத்துக்குள் புகுந்து துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களை ''இசுலாமிய பயங்கரவாதிகள்'' என்று சர்வ கட்சியினரும் கண்டித்தனர். ஆனால், ஒரிசா சட்டப்பேரவைக்குள் புகுந்து எதிர்க்கட்சியினரைத் தாக்கி, சூறையாடிய இந்துவெறியர்களை அப்படிக் கருதவில்லை. குஜராத் சுவாமி நாராயணன் கோவிலுக்குள் புகுந்து இந்து பக்தர்களைக் கொலை செய்தவர்களை பாகிஸ்தானிலிருந்து வந்த பயங்கரவாதிகள் என்று கண்டித்தனர். ஆனால், குஜராத்தில் பல பள்ளிவாசல்களுக்குள் புகுந்து இசுலாமியர்களை உயிரோடு கொளுத்தியவர்களை இந்து பயங்கரவாதிகள் என்று அடையாளங் காட்டப்படவில்லை.

இவர்கள்தாம் - இந்துவெறியர்கள்தாம் மிகக் கொடூரமான மிகவும் ஆபத்தான பாசிச பயங்கரவாதிகள். சர்வதேச அரங்கில் பயங்கரவாதத்தை எதிர்த்துச் சவடால் அடித்துக் கொண்டே, உள்நாட்டில் மதச் சிறுபான்மையினர் மட்டுமல்ல, தாழ்த்தப்பட்டவர்கள், மதச் சார்பற்றவர்கள் மீது கொலைவெறி பாசிச - பயங்கரவாத கும்பலை ஏவிவிடும் இந்துவெறியர்கள் அரசு அதிகாரத்திலும் இருக்கிறார்கள். இதனால் பன்மடங்கு பலம் பெற்றவர்களாகவும் இருக்கிறார்கள்.

---

**9-ஆம் பக்கத் தொடர்ச்சி....**

தை'' அம்பலப்படுத்தியிருக்கிறது. 1996 தேர்தலில் நடந்தளவிற்கு இராணுவத்தின் நிர்பந்தம், மிரட்டல் இல்லையென்றாலும், காசுமீர் சட்டமன்றத் தேர்தல் சுதந்திரமாக நடைபெற்றதாகச் சொல்ல முடியாது என்பதுதான் அரசு சாராத கண்காணிப்புக் குழுக்களின் முடிவு.

இராணுவத்தின் நிர்பந்தம் இல்லாமல் தாமாகவே முன் வந்து வாக்களித்தவர்களிடம், பரூக் அப்துல்லாவின் தேசிய மாநாட்டுக் கட்சியைத் தோற்கடிக்க வேண்டும் அல்லது தங்களது தொகுதிப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பார் என்று தாம் நம்பக்கூடிய வேட்பாளருக்கு வாக்களிப்பது என்ற நோக்கம் இருந்ததாகத் தேர்தலைக் கண்காணித்த குழுக்கள் குறிப்பிடுகின்றன.

தாமாகவே முன்வந்து வாக்களித்த பெண்கள் பலரிடம் பேசிய பொழுது, ''உள்ளூர் அரசாங்கத்தில் தங்களுக்கு ஒரு பங்கு இருக்க வேண்டும் என அவர்கள் விரும்புவதையும், அதே சமயம் தேர்தலில் ஓட்டுப் போடுவதற்கும், சுதந்திரம் கேட்பதற்கும் இடையில் எந்தவித முரண்பாடும் கிடையாது என அவர்கள் பார்ப்பதையும் புரிந்து கொள்ள முடிந்தது'' என கல்பனா சர்மா என்ற நிருபர் அக்.6 இந்து நாளிதழில் குறிப்பிட்டுள்ளார்.

40 சதவீதம் ஓட்டுப் பதிவான இடங்களில், வாக்களித்துவிட்டுத் திரும்பியவர்கள், ''உண்மையைச் சொல்லுங்கள்... நாங்கள் ஓட்டுப் போடுகிறோம்... ஆனால், எங்களுக்குச் சுதந்திரம் வேண்டும் எனப் பத்திரிகையாளர்களைப் பார்த்துச் சொன்னார்கள்'' என அஞ்சலி மோடி என்ற நிருபர் செப்.29 இந்து நாளிதழில் குறிப்பிட்டுள்ளார்.

1996–இல் நடந்த காசுமீர் சட்டமன்றத் தேர்தலில் 58 இடங்களை வென்ற தேசிய மாநாட்டுக் கட்சி, இந்த முறை 28 இடங்களில் மட்டுமே வென்று, மண்ணைக் கவ்வியிருக்கிறது. அப்துல்லா குடும்பத்தின் பரம்பரைத் தொகுதியான கந்தர்பாலில் போட்டியிட்ட தேசிய மாநாட்டுக்கட்சியின் தலைவரும், பரூக் அப்துல்லாவின் மகனுமான ஓமர் அப்துல்லா 2808 வாக்கு வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டார்.

1996 தேர்தலில் ஜம்மு பகுதியில் எட்டு இடங்களை வென்ற பா.ஜ.க.விற்கு, இந்த முறை ஒரே ஒரு இடம்தான் கிடைத்திருக்கிறது. ஜம்முவில் வாழும் இந்து–சீக்கிய மக்களிடையே, முசுலீம் எதிர்ப்புணர்வைத் தூண்டி விட்டு, ஜம்மு–காசுமீர் மாநிலத்தை மூன்று துண்டாகப் பிளந்து விடச் சதித் திட்டம் போட்டுக் கொண்டிருக்கும் ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்குக் கிடைத்த மரண அடிதான் இந்தத் தோல்வி.

காங்கிரசு 20 இடங்களில் வென்றிருந்தாலும், பள்ளத்தாக்குப் பகுதியில் அதற்குக் கிடைத்த இடங்கள் வெறும் ஐந்து தான். காசுமீர் பள்ளத்தாக்குப் பகுதி மக்கள் காங்கிரசின் துரோகத்தை இன்னமும் மறந்துவிடவில்லை என்பதைதான் இது காட்டுகிறது.

''பொடா சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும்; சிறப்பு அதிரடிப்படையைக் கலைக்க வேண்டும்; போராளிகளோடு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்'' என்ற முழக்கங்களை தேர்தல் பிரச்சாரமாகச் செய்ததால்தான் புதிய கட்சியான மக்கள் ஜனநாயகக் கட்சி பள்ளத்தாக்குப் பகுதியில் 16 இடங்களைக் கைப்பற்றியிருக்கிறது.

அரசு பயங்கரவாத எதிர்ப்பு, ஊதாரி பரூக் அப்துல்லாவின் பரம்பரை ஆட்சி எதிர்ப்பு, இந்து மதவெறியர்களுக்கு எதிர்ப்பு – என ஜம்மு–காசுமீர் மாநிலத் தேர்தலில் வீசிய எதிர்ப்பலையில், குப்பைக் கூடையில் கிடந்த காங்கிரசு மீண்டும் கோபுரத்துக்கு வந்திருப்பதுதான் இந்தத் தேர்தலின் அபாயகரமான விளைவு. இந்த அபாயத்தை அம்பலப்படுத்தாத 'மார்க்சிஸ்டு'கள், காங்கிரசு அரியணை ஏறப் பல்லக்குத் தூக்கிக் கொண்டு திரிந்தார்கள். மேலும், ''பரூக் அப்துல்லா - பா.ஜ.க.விற்கு மாற்றாக வந்துள்ள இந்தக் கூட்டணி நல்லதொரு வாய்ப்பு. இதைப் பயன்படுத்தி, தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, காசுமீர் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம்'' என்ற மாயையும் திட்டமிட்டுப் பரப்பப்படுகிறது.

தேர்தல் முடிந்த பிறகு காங்கிரசுக்கும், மக்கள் ஜனநாயகக் கூட்டணிக்கும் இடையே இரண்டு வாரங்களாக நடந்த 'பேச்சு வார்த்தை', காசுமீர் பிரச்சினையை எப்படி தீர்ப்பது என்பது பற்றியதல்ல; முதலமைச்சர் பதவி யாருக்கு என்பது பற்றி நடந்த இழுபறி பேரம் அது. இந்தத் தேர்தல், இந்தப் பதவிவெறிக் கூட்டணி ஆட்சி காசுமீர் பிரச்சினையைத் தீர்த்து விடும் என்ற நம்பிக்கை காசுமீர் மக்களிடமே கிடையாது. அப்படிபட்ட நிலையில் பா.ஜ.க. எதிர்ப்பு மதச்சார்பற்ற கூட்டணி இந்த மாயைக்கு உரு ஏற்றுவது நகைப்புக்குரியதாகி விடுகிறது!

● அழகு



படிப்பகம்

www.padippakam.com

## புதிய ஜனநாயகத்தின் மீது தமிழினவாதிகளின் அவதூறு:

# பொய் நெல்லைக் குத்தி பொங்க முடியுமா?

''புதிய ஜனநாயகம்'' ஏடு மற்றும் இதன் தோழமை அமைப்புகள் மீது தமிழினவாதிகளின் ஆத்திரம் பொங்கி வழிகிறது. தமது தலைமையிலான தேசிய இன எழுச்சி வெறும் கனவாய் கலைந்து போனது என்ற விரக்தியின் வெளிப்பாடுதான் இப்படி ஆத்திரமாக வெடிக்கிறது. தமது சொந்த நிலைப்பாடுகளை முன்வைத்து அணிகளைத் திரட்ட முடியும் என்ற நம்பிக்கையையும் அவர்கள் இழந்து விட்டார்கள்.

தமது சொந்த இருப்புக்கே முட்டுக் கொடுக்க வேண்டியவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். அதனால்தான், ஒரு பக்கம் விடுதலைப் புலிகள், வைகோ அல்லது வீரப்பன் போன்றவர்களுக்கு ஆதரவு தெரிவிப்பதே தமது கடமையாகக் கருதுகிறார்கள். மறுபக்கம் ''புதிய ஜனநாயகம்'' மற்றும் இதன் தோழமை அமைப்புகளுடைய நிலைப்பாடுகளைத் திரித்து எழுதி, அதன் மீதான விமர்சனங்களையும் அவதூறுகளையும் பொழிகிறார்கள்.

சிறியதும் பெரியதுமாக நூற்றுக்கணக்கான குழுக்களாக இந்தத் தமிழினவாதிகள் பிரிந்திருக்கிறார்கள். அற்பத்தனமான வேறுபாடுகளும் குழுவாதமும் தான் இதற்குக் காரணம் என்ற போதிலும் இந்தக் குழுக்கள் அனைத்துமே ஒரு விடயத்தில் ஒன்றுபட்டு நிற்கிறார்கள். அதுதான் ''தேசிய இனப் பிரச்சினை குறித்த புதிய ஜனநாயகம் மற்றும் இதன் தோழமை அமைப்புகளின் நிலைப்பாட்டை''த் திரித்துச் சொல்வது.

''இல்லாத இந்திய தேசியத்தைப் பாதுகாக்கிறார்கள்; இனத் துரோகம் செய்கிறார்கள்''

''இந்தியப் பண்பாடு, இந்தியக் கலை, இந்திய இலக்கியம் என்பதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்''

- என்பது அந்தத் தமிழினவாதிகள் திரித்துக் கூறும் நிலைப்பாடு. நமது நிலைப்பாட்டை இவ்வாறு திரித்துக் கூறி அதனடிப்படையில் பின்வரும் முடிவுக்கும் வந்திருக்கிறார்கள்.

''இந்திய தேசியம், இந்திய தேசியப் புரட்சி என்று யார் பேசினாலும் எழுதினாலும் அவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ விரும்பியோ, விரும்பாமலோ எதிர்ப்புரட்சி சக்திகள்தாம்'' என்றும் புதிய ஜனநாயகம் மற்றும் இதன் தோழமை அமைப்புகளும் இப்படிப்பட்ட சக்திகள் என்றும் மதிப்பீட்டிற்குத் தமிழினவாதிகள் வந்திருக்கிறார்கள்.

இந்தத் திரிபு மற்றும் மதிப்பீட்டின் அடிப்படையில் ''தமிழின மொழிப் பிரச்சினைகளைக் கையிலெடுத்து சந்தர்ப்பவாதமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்; இதற்காகவே தமிழ் மக்கள் இசை விழா போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்'' என்று நம்மீது அவதூறான குற்றச்சாட்டையும் பரப்புகின்றனர்.

இந்தக் குற்றச்சாட்டு, அவதூறு, மதிப்பீடு எல்லாவற்றுக்கும் தமிழினவாதிகள் முன்வைக்கும் ஒரே ஆதாரம், நாம் ''அகில இந்தியப் புரட்சிக்குத் திட்டம் தீட்டிக்கொண்டிருக்கிறோம்'' என்பதுதான்.

### எதிர்ப்புரட்சி சக்திகளை என்ன செய்யப் போகிறீர்கள்?

அகில இந்தியப் புரட்சிக்குத் திட்டம் தீட்டிக் கொண்டிருப்பதாலேயே இந்திய தேசியத்தையும், இந்திய தேசியப் புரட்சியையும் ஏற்கிறோம் என்பது ஒரு அண்டப் புளுகு. இது பற்றிப் பிறகு பார்ப்போம். புதிய ஜனநாயகம் மற்றும் இதன் தோழமை அமைப்புகள் எதிர்ப்புரட்சி சக்திகள் என்பதுதான் தமிழினவாதிகளின் முடிவு என்றால், அவர்கள் என்ன செய்ய வேண்டும்? நம்முடன் எத்தகைய உறவு வைத்துக் கொள்ள வேண்டும்? தமிழினவாதிகள் தங்களைப் புரட்சிகர சக்திகள் என்றும், அகில இந்தியப் புரட்சிக்குத் திட்டம் தீட்டிக் கொண்டுள்ளவர்கள் எல்லாம் இந்திய தேசியப் புரட்சி பேசும் எதிர்ப்புரட்சி சக்திகள் என்றும் கருதுவது உண்மைதான் என்றால், இரண்டு சக்திகளும் பகை முரண்பாடு கொண்டிருக்க வேண்டும். இதுவரை இல்லை என்றாலும், இனிமேலாவது அகில இந்தியப் புரட்சிக்குத் திட்டம் தீட்டிக் கொண்டுள்ளவர்களை - குறிப்பாக புதிய ஜனநாயகம் மற்றும் இதன் தோழமை அமைப்புகளுடன் இத்தகைய பகை முரண்பாட்டை வெளிப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் என்று எதிர்பார்க்கலாமா? இல்லையென்றால், புரட்சிகர சக்திகள் - எதிர்ப்புரட்சிகர சக்திகள் என்றெல்லாம் பேசுவது அவர்களுக்கே உரிய வழமையான சவடால்களில் ஒன்று என்று எடுத்துக் கொள்ளலாமா?

நம்மைப் போலவே அகில இந்தியத் திட்டம் தீட்டிக் கொண்டிருக்கும் பிற மார்க்சிய - லெனினிய அமைப்புகளையும் எதிர்ப்புரட்சி சக்திகள் என்றுதான் கருதுகிறார்களா என்று தெரியவில்லை. அதைவிட முக்கியமாக, ஆர்.எஸ்.எஸ்.இன் இந்திய தேசிய (இந்து ராஷ்டிரா) புரட்சிக்குத் துணை நிற்கும் ஜார்ஜ் பெர்னாண்டசு, வைகோ, ராமதாசு ஆகியோரை தோழமையோடு அணுகுகிறார்களே, அவர்கள் புரட்சிகர சக்திகள் என்பதாலா?

### இந்திய தேசியம், இந்திய தேசியப் புரட்சி பேசுவதாகப் புளுகுவது குறித்து:

''இந்திய தேசியம்'' என்கிற கண்ணோட்டத்தை பலமுறை, பல்வேறு வழிகளிலும் எதிர்த்துப் போராடி வருவனதான், ''புதிய ஜனநாயகமும்'' அதன் தோழமை அமைப்புகளும். இந்தியா ஒரு தேசமே கிடையாது; பல தேசிய இனங்களின் சிறைக்கூடம் - பல தேசிய இனங்களை உள்ளடக்கிய நாடு என்பதுதான் நமது இயக்கம் உருவான நாளில் இருந்து நமது நிலைப்பாடு. இதற்கு ஏராளமான சான்றுகள் எடுத்துக் காட்ட முடியும்.

''உ.பி., ம.பி., ராஜஸ்தான், பீகார், அரியானா போன்ற வட மாநிலங்களில் வாழும் மக்கள் அனைவரும் பேசுவது ஒரே இந்தி மொழி என்பது தவறு. பல்வேறு மொழிப் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் வாழும் இம்மாநிலங்களின் மக்களின் மொழிகளோடு சமசுகிருதம் கலந்து ஒரு பொது மொழியை உருவாக்க பார்ப்பன - பனியா கும்பல் முயலுகிறது. அப்படி உருவாக்கப்படும் மொழிதான் இந்தி. அந்த இந்தியையும் பார்ப்பனிய சனாதன - வருணாசிரம - சாதியப் பண்பாட்டையும் இணைத்து இவற்றின் அடிப்படையிலான இந்திய தேசியம் அல்லது இந்துராஷ்டிரம் கற்பிதத்தை இந்த நாட்டின் மீதும், அதன் தேசங்கள், மக்கள் மீதும் திணித்து தமது சுயநலனுக்காக இந்திய ஆளும் வர்க்கங்கள், ஆளும் சாதிகள் பயன்படுத்திக் கொள்கின்றன'' என்பதுதான் நமது நிலைப்பாடு.

www.padippakam.com




**இந்து மதவெறியர்களுடன் கூட்டுச் சேர்ந்துள்ள வைகோ-வின் துரோகத்தை, அவர் புலிகளின் ஆதரவாளர் என்ற ஒரே காரணத்திற்காகவே தமிழினக் குழுக்கள் பூசி மெழுகுகின்றன.**

''இந்து, இந்தி, இந்தியா'' ஆகியவற்றுக்கிடையிலான உறவு, பிணைப்பு பற்றிய கோட்பாட்டை முதன்முதலில் முன்வைத்து இந்திய தேசியத்தை எதிர்த்ததும் புதிய ஜனநாயகம் மற்றும் இதன் தோழமை அமைப்புகள்தான்.

சமசுக்கிருதமயமாக்கப்பட்ட மொழிகளைப் பேசும் தென்னாட்டு மக்கள் கூட இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பதில்லை; செயற்கையாக திணிக்கப்பட்ட இந்தி மொழி பேசும் வடநாட்டு மக்கள், அரசு அமைப்பில் கூடுதலான ஆதாயம் அடைகிறார்கள் என்றபோதும் இவர்கள் அனைவரும் ஒரே தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. இந்திய தேசியம் என்கிற கற்பிதம், எந்த ஒரு தேசிய இன சமூக அடிப்படையைக் கொண்டிருக்கவில்லை; எனவே, இந்த நாட்டில் ஒடுக்கும் தேசிய இனம் ஒன்றிருப்பதாகவும், அது இந்திய தேசியம் என்பதும் கூட கற்பிதமே. ஆளும் வர்க்கங்கள் - ஆளும் சாதிகள் தமது அடக்குமுறை, சுரண்டலுக்கு வசதியாக பயன்படுத்தும் இந்திய தேசியத்தை எதிர்த்து இந்திய நாட்டிலுள்ள அனைத்து தேசிய இனங்களும் இணைந்து நடத்தும் அகில இந்தியப் புரட்சித் திட்டம் என்பது எந்த ஒரு தேசிய இன விடுதலைக்கும் எதிரானதும் இல்லை; மாற்றானதும் இல்லை. இந்த நாட்டின் அனைத்து தேசிய இன விடுதலையையும் உள்ளடக்கியதுதான்.

அப்படியே ஒடுக்கும் ஒரு தேசிய இனம் இருந்தால் கூட, அந்த ஒடுக்கும் தேசிய இனத்தின் பாட்டாளி வர்க்கம் அந்த நாட்டில் உள்ள வேறு தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்கும் பட்சத்தில், அதனுடன் இணைந்து ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் புரட்சி செய்வது தவறில்லை; அவசியமானதும் கூட. நமது நாட்டில் கூட ஒடுக்கும் தேசிய இனம் ஒன்றில்லை என்ற போதும், ஒரு பிரிவு தமிழினவாதிகள் கூறிக் கொள்ளும் ஒடுக்கும் ''இந்தி தேசிய இனத்தை''ச் சேர்ந்த மார்க்சிய - லெனினிய அமைப்புகளும் அவற்றின் மக்கள் திரள் இயக்கங்களும் இந்திய நாட்டிலுள்ள அனைத்து தேசிய இனங்களுக்கும் சுயநிர்ணய உரிமையை ஆதரித்து ஏற்கின்றன. இந்த முகாமைச் சேர்ந்தவர்கள் மட்டுமே காசுமீர், அசாம், வடகிழக்கு இந்திய தேசிய இனங்கள் உட்பட அவற்றின் பிரிந்து போகும் உரிமையை பகிரங்கமாக அங்கீகரித்து, ஆதரித்து நிற்கிறார்கள். அதேசமயம், நெடுமாறன் உட்பட ஒரு பிரிவு தமிழினவாதிகள், பிற தேசிய இன மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்பதோ ஆதரிப்பதோ இல்லை. அதுமட்டுமல்ல; எதிர்த்தும் கூட துரோகத்தனமாக பேசுவதை நாம் ஆதாரத்துடன் நிரூபிக்க முடியும்.

### தமிழினப் பிரச்சினைகளைச் சந்தர்ப்பவாதமாகப் பயன்படுத்துபவர்கள் யார்?

தேசிய இன சுயநிர்ணய உரிமைப் பிரச்சினையில் மார்க்சிய - லெனினிய நிலைப்பாட்டைப் போலி கம்யூனிஸ்டுகள் கைவிட்ட பிறகு, பெரியார் ஈ.வெ.ரா. கூட தமிழ் தேசிய இன விடுதலை முழக்கத்தைத் தனது ''விடுதலை'' ஏட்டின் முகப்பில் இருந்து நீக்கிவிட்ட நிலையில், மார்க்சிய - லெனினிய அமைப்பு மட்டும்தான் இப்பிரச்சினையைத் தனது திட்டத்தில் இணைத்து, அதற்காகக் குரல் கொடுத்தது. இன்று நம்மீது அவதூறு தொடுக்கும் அமைப்புகள் மட்டுமல்ல, வேறு எந்த தமிழினவாத அமைப்பும் இல்லாத நிலையில் இதை நாம் செய்திருக்கிறோம். 1968-இல் அண்ணாமலை பல்கலைக் கழகம் மற்றும் கோவையில் 1965 - இந்தி ஆதிக்க எதிர்ப்பு போராட்டத் தியாகிகளுக்கு நினைவஞ்சலி செலுத்தி, தமிழ்த் தேசியக் கொடியேற்றிய மாணவர்கள்தாம் பிறகு தமிழக மார்க்சிய - லெனினிய அமைப்பின் முதுகெலும்பாக அமைந்தார்கள்.

அப்போதும், அதன் பிறகும் இன்றைய தமிழினவாதிகளில் ஒரு பிரிவு காங்கிரசிலும், இன்னொரு பிரிவு போலி கம்யூனிஸ்டு கட்சியிலும், மற்றொரு பிரிவின் முன்னோடிகள் ''வெறும் தமிழ்'' பாவாணரின் சீடர்களாகவும் இருந்தனர். தமிழ் தேசிய இனப் பிரச்சினையைத் தனது திட்டத்தின் ஓர் அங்கமாகக் கொண்டுள்ள மார்க்சிய - லெனினிய அமைப்பினரைத் தீவிரவாதிகள், சமூக விரோதிகள், ''சி.ஐ.ஏ''க்கள் என்று அவதூறு பேசிக் கொண்டிருந்தார்கள், மேற்கண்ட தமிழினவாதிகள்.

அப்போது எந்தத் தமிழின எழுச்சி இருந்தது, அதைப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடனா நாம் கையிலெடுத்தோம்? அதற்கு மாறாக, தேசிய இனப் பிரச்சினை ஒரு ஜனநாயகப் பிரச்சினை; மக்கள் ஜனநாயகப் புரட்சியைத் திட்டமாக வைத்திருக்கும் நாம், அதை ஓர் அங்கமாகக் கொள்ள வேண்டும் என்கிற நோக்கிலேயே கையிலெடுக்கிறோம்.

ஆனால், இன்றைய தமிழினவாதிகள், ''தன்னுரிமைக்கு முன்னுரிமை'' தருவதற்காக இன்று பற்பல காரணங்கள் கூறினாலும், திராவிடக் கட்சிகளின் தேர்தல் வெற்றிகள், ஈழத் தமிழர் போராட்டம் போன்றவற்றின் தூண்டுதலால் விரைவான செல்வாக்குப் பெறக் கூடிய பிரச்சினை என்று தமிழ் தேசிய இனப் பிரச்சினையைத் தெரிவு செய்து கொண்டவர்கள்தாம்! குறிப்பாக பழ. நெடுமாறன் போன்றவர்கள், இந்திரா காங்கிரசு தேசியம், காமராசர் தேசியம் என்றிருந்தவர்கள், அதற்காக இன்னமும் பெருமைப் பாராட்டுபவர்கள், திடீரென்று தமிழ்த் தேசியம் பேசுகிறார்களே - இது பயன்படுத்துவது இல்லையா?

தமிழ் தேசிய இனம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை நாம் ஒன்றும் கேடாகப் பயன்படுத்தவில்லை. அவை தங்களுக்கே உரியனவென்று தமிழினவாதிகள் ஏகபோக உரிமை கொண்டாடவும் முடியாது. புதிய ஜனநாயகப் புரட்சித் திட்டத்தின் ஒரு அங்கம் என்கிற முறையில்தான் அவற்றை நாம் கையாளுகிறோம். எனவே அப்படிச் செய்வது சந்தர்ப்பவாதமும் அல்ல. சரியான, நேர்மையான முறையிலேயே இதைச் செய்கிறோம்.

அடுத்து, ''தமிழ்த் தேசிய தன்னுரிமைக்கு முன்னுரிமை தரும்'' திட்டத்தை வைத்துக் கொண்டிருப்பவர்கள் மட்டுமேதான் தமிழின, மொழிப் பிரச்சினைகளைக் கையிலெடுக்க வேண்டுமா? வேறு திட்டங்களைக் கொண்டவர்கள் அப்படிச் செய்யக்கூடாதா? தமிழ் வழிக்



**தமிழ் மொழி உரிமை காக்க ம.க.இ.க. தோழர்கள், 97-ஆம் ஆண்டில் திருவையாறு தியாகய்யர் ஆராதனையில் புகுந்து நடத்திய கலகம் (கோப்பு படம்).**

கல்வியை ஆதரிப்பதாகக் கூறிய பாரதீய ஜனதா இல.கணேசனைக் கூட அழைத்த இவர்கள், அகில இந்தியப் புரட்சித் திட்டம் வைத்திருக்கிறோம் என்பதற்காக தமிழின, மொழிப் பிரச்சினைகளைக் கையிலெடுக்கும் உரிமையை நமக்கு மறுக்கிறார்கள். யார் சந்தர்ப்பவாதிகள், யார் துரோகிகள் என்பதையே இது காட்டுகிறது. உண்மை என்னவென்றால் தமிழின, மொழிப் பிரச்சினைகளில் நமது உறுதி, சுயபலம், முன்முயற்சி, அக்கறை போன்றவை இந்தத் தமிழினவாதிகளின் சந்தர்ப்பவாதத்திற்கு இடையூறாக இருப்பதால் அவர்கள் ஆத்திரப்படுகிறார்கள்; அவதூறு செய்கிறார்கள். வேறு வகையில் சொல்வதானால், நாயிடம் சிக்கிய தேங்காய்ப் பழம் போல தமிழினப் பிரச்சினையை வைத்துக் கொள்ள ஆசைப்படுகிறார்கள்.

**காவிரி, பொடா விவகாரங்கள்: தமிழினவாதிகளின் அவதூறுகள்**

காவிரி, பொடா, ஈழம் என்று எந்தப் பிரச்சினையானாலும், புதிய ஜனநாயகம் மற்றும் இதன் தோழமை அமைப்புகள் மீது அவதூறு பொழிவதற்கு தமிழினவாதிகள் கைக்கொள்ளும் மற்றொரு குறுக்கு வழியும் உள்ளது. இந்தப் பிரச்சினைகளில் நமது நிலைப்பாடுகள் பிற்போக்கு சக்திகளின் நிலைப்பாடுகளை ஒத்திருப்பதாக திரித்துக் கூறுகிறார்கள். அதன்மூலம் நம்மை, சோ, காங்கிரசு, போலி கம்யூனிஸ்டுகள் போன்றவர்களுடன் இணை வைத்து அவதூறு செய்கிறார்கள்.

காவிரிப் பிரச்சினையில் தொடர்ந்து பல ஆண்டுகளாக தமிழகத்தின் நியாய உரிமைக்காக பல வகைகளிலும் போராடி வந்திருக்கிறோம். தஞ்சையில் ஒரு மாநாடு நடத்தி நமது நிலைப்பாட்டை தனிப் பிரசுரமாகவும் வெளியிட்டிருக்கிறோம். இருந்தபோதும் நாம் அகில இந்திய புரட்சித் திட்டம் தீட்டிக் கொண்டிருப்பதால், அனைத்திந்திய ஓட்டுக் கட்சிகளைப் போல தமிழினத்துக்குத் துரோகம் செய்து வருவதாகவும், தற்போது தீர்வு எதையும் முன்வைக்காமல் கர்நாடகத்துக்கு வக்காலத்து வாங்குவதற்காக வேண்டி ஜெயலலிதா அரசையும் குற்றஞ் சாட்டுவதாகவும் தமிழினவாதிகள் புளுகுகிறார்கள். இதற்கு ஆதாரமாக ''புதிய ஜனநாயகம்'' தலையங்கம் ஒன்றை வழக்கம்போல திரித்துக் கூறுகிறார்கள். ''கர்நாடகத்திற்குக் கவசமாக புதிய ஜனநாயகம்'' இருப்பதாகப் புளுகுகிறார்கள்.

தமிழக மக்களுக்கு, குறிப்பாக விவசாயிகளுக்கு எதிரான பல்வேறு தாக்குதல் நடவடிக்கைகள் எடுத்துவரும் ஜெயலலிதா அரசு, காவிரிப் பிரச்சினையை மட்டுமே முன்னிறுத்தி திசைதிருப்ப எத்தணிக்கிறது. இப்போது சினிமாக்காரர்களையும் இதற்குப் பயன்படுத்துகிறது. கர்நாடக அரசு காவிரி நீர் வரத்தைத் தடுப்பதால் தமிழகம் பாதிக்கப்படுவதைப் போலவே, ஜெயா அரசின் நடவடிக்கைகளால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் காவிரி நீர் பிரச்சினை தீர்ந்தால் விவசாயிகளின் எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்து போகும் என்பதான தோற்றத்தை உருவாக்க ஜெயலலிதா எத்தணிப்பதை அம்பலப்படுத்துவதுதான் புதிய ஜனநாயகத் தலையங்கத்தின் நோக்கம். இதைச் சொல்லுவதாலேயே கர்நாடக அரசிற்கு ஆதரவாக எழுதுவதாகத் தமிழினவாதிகள் திரித்துக் கூறுகிறார்கள்.

''பொடா'' சட்டம் — ஒரு பாசிச பயங்கரவாதச் சட்டம் என்று வரையறுத்து, அதைக் கடுமையாக எதிர்த்துப் போராடுபவர்கள் நமது அமைப்பினர். ''பொடா''வின் கீழ் நெடுமாறன் உட்பட தமிழினவாதிகள் கைது செய்யப்படுவதை எதிர்த்து இயக்கம் எடுக்கிறோம். ஆனால், ''பொடா''வை ஆதரிக்கும் வைகோ முதலிய ம.தி.மு.க.வினருக்கு எதிராக ''பொடா'' சட்டம் பாய்வதை எவ்வித நிபந்தனையும் இல்லாமல் எதிர்க்க முடியாது என்று கருதுகிறோம். ''பொடா''வை ஆதரிக்க மாட்டோம் என்கிற நிலையெடுத்தால், ம.தி.மு.க.வினரின் விடுதலைக்குக் குரல் கொடுப்போம்; ''பொடா''வை ஆதரிப்போம் என்றால் ம.தி.மு.க.வினரின் விடுதலையை ஆதரிக்க மாட்டோம் என்பதுதான் நமது நிலைப்பாடு. புலிகளின் ஆதரவாளர்கள் தவிர வேறு எவருக்கும் எதிராக ''பொடா'' பாய்வதை ம.தி.மு.க. ஆதரிக்கிறது. புலிகளை ஆதரிப்பவர்கள் என்கிற ஒரே காரணத்துக்காக ம.தி.மு.க.வினரின் துரோகத்தனத்தைச் சகித்துக் கொண்டு, அவர்களின் விடுதலைக்குக் குரல் கொடுக்க வேண்டும்; இல்லையானால் காங்கிரசு — போலி கம்யூனிஸ்டுகளின் நிலைப்பாடும், புதிய ஜனநாயகத்தின் நிலைப்பாடும் ஒன்றுதான் என்று அவதூறு செய்கிறார்கள், தமிழினவாதிகள்.

''பொடா''வை ஆதரிக்கும் ம.தி.மு.க. வினரின் துரோகத்தனத்தைச் சகித்துக் கொள்வதற்குள்ள அந்தப் புலி ஆதரவு என்கிற ஒரே காரணத்தை மூடி மறைத்து பொதுவில் ''பொடா''வின் கீழ் யாரையும் கைது செய்யக்கூடாது, பொதுவில் மனித உரிமை பாதிப்பு என்று பசப்புகிறார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக, கருங்காலித் தொழிலாளியையும் நாம்தான் விடுதலை செய்ய வேண்டும் என்கின்றனர். தமிழினவாதிகள் தமது சந்தர்ப்பவாத நிலையை நியாயப்படுத்த எவ்வளவு கடைகோடிக்கும் போகிறார்கள் பாருங்கள். ஒரு போராட்டத்தில் இருக்கும்போது கருங்காலியின் விடுதலை பற்றிப் பேசுபவன் துரோகியாக மட்டுமே இருக்க முடியும். கருங்காலியின் விடுதலை என்பது, அவன் தவறை ஒப்புக் கொண்டு திருந்தும் நிபந்தனை அடிப்படையில் தான் இருக்க முடியும். இல்லையானால் அவன் எதிரியின் பக்கம் ஊன்றி நிற்கும் பட்சத்தில், அவனும் எதிரியாகக் கருதித் தண்டிக்கப்பட வேண்டும். தனக்கு இன்னல் நேரும்போது கூட எதிரியுடன் உறுதியாக, விசுவாசமாக நிற்கும் கருங்காலியை வேறு எப்படி அணுக முடியும்?

**அகில இந்தியப் புரட்சித் திட்டம் துரோகமானதா?**

கம்யூனிஸ்டுகளைப் பொருத்தவரை தேசியமும் சர்வதேசியமும் முரண்பாடானவை அல்ல. இரண்டையும் ஏககாலத்தில் ஏற்றுச் செயல்படமுடியும். நேர்மையான ஒருவன் பெற்றோருக்கு

www.padippakam.com

நல்ல மகனாகவும், மனைவிக்கு நல்ல கணவனாகவும், பிள்ளைகளுக்கு நல்ல தந்தையாகவும் இருக்க முடியும். ஆனால், ''ஏதாவது ஒருவனாகத் தான் இருக்க முடியும்; நீ மகனா, கணவனா, தந்தையா சொல்!'' என்று கேட்கிறார்கள் தமிழினவாதிகள்.

அனைத்து தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீரிக்கும் ஒரு தலைமை, அவற்றை இணைத்து பொது எதிரிக்கு எதிராகப் புரட்சியும் நடத்தவும் முடியும். அந்த இணைப்பில் பிற தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்கும் பட்சத்தில் ஒடுக்கும் தேசிய இனம் கூட பங்கேற்க முடியும். அவ்வாறுதான் ரசியப் புரட்சி லெனின் தலைமையிலும், சீனப் புரட்சி மாவோ தலைமையிலும் நடந்தேறியது. ஆனால், நமது தமிழினவாதிகளைப் பொறுத்தவரை ஒவ்வொரு தேசிய இனமும் தனித்தனியேதான் போராட முடியும்; ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் சமஉரிமையுடன் இணைந்து போராடவும் முடியாது. அதாவது ''பல தேசிய இனங்கள் கொண்ட நாடோ, நாட்டுப்பற்றோ, அரசியல் - பண்பாடோ சாத்தியமே இல்லை. இரண்டு தேசிய இனங்களுக்கு இடையில் எல்லைப் பிரச்சினை, ஆற்று நீர்ப் பிரச்சினை அல்லது மொழிப் பிரச்சினை என்று எழுந்தாலே அது இனவெறியாகத்தான் வெளிப்படும்'' என்கிற கண்ணோட்டத்திலேயே அணுகுகிறார்கள்.

இத்தகைய கண்ணோட்டத்திலிருந்துதான் ஒன்று தேசிய இனப் புரட்சித் திட்டத்தை மட்டுமே கொண்டிருக்க வேண்டும்; ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் இணைந்து புரட்சி செய்யும் திட்டம் வைத்திருந்தாலே, அது துரோகமாகும் என்கிறார்கள். இதன் மூலம் இந்தத் தமிழினவாதிகள் தமது தேசிய இன முதலாளிய அல்லது குட்டி முதலாளிய குறுகிய பார்வையைத்தான் வெளிப்படுத்துகிறார்கள்.

— ஆசிரியர் குழு

# கருங்காலியை விடுதலை செய்ய வேண்டுவதுதான் தமிழர் கண்ணோட்டமா?

**''புதிய ஜனநாயகம்'' மீது அடுத்தடுத்த இரண்டு இதழ்களில் தமிழினவாத, ''தமிழர் கண்ணோட்டம்'' என்கிற மாத இதழ் விமர்சனங்கள் எழுதியிருந்தது. அவை குறித்து அந்த பத்திரிக்கைக்கு ஒரு வாசகர் எழுதிய கடிதத்தின் பிரதியை நமக்கும் அனுப்பியிருந்தார். அதை இங்கே பிரசுரிக்கிறோம்.**

'தடையுடைக்கும் தமிழ்த் தேசியம்' ஆரூடம் படித்தேன். தமிழ்த் தேசியத்துக்கு வரலாறு (ஜெ. வடிவில்) சோதனை வைத்திருப்பதையும்; இதற்கு தமிழ்த்தேசிய ஆர்வலர்கள் தங்கள் தமிழ்த்தேசிய இலட்சியத்தைக் கைவிட வேண்டாம் என்ற வேண்டுதல் தவிர, வேறு எந்த முக்கியத்துவத்தையும் தலையங்கம் மூலம் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதாவது, ''தமிழ்த் தேசியத்துக்குச் சோதனை (நோய்) வந்திருக்கிறது. இந்த நோய் தீர காலத்திடம் வரம் கேட்போம்; அதுவரையிலும் தமிழ்த்தேசியம் பட்டுப் போய்விடாமல், 'ஆக்சிஜன்' கொடுத்துக் கொண்டிருப்பது தான் (ஓடிப் போய்விடாமல்) தமிழ்த் தேசிய ஆர்வலர்கள் தமிழ்த்தேசியத்துக்கு செய்ய வேண்டிய கடமை'' என்று நான்கு பக்கங்களில் மாய்ந்தும், மறைத்தும் எழுதியிருக்கிறீர்கள்.

'என்னடா இது? மதுரைக்கு வந்த சோதனை?' என்பது போல 'தமிழ்த் தேசியத்துக்கு வந்த சோதனை' என்று திருவிளையாடல் வசனம் பேசிக் கொண்டு, போராட நிர்ப்பந்திக்கின்ற புறச் சுழலைக் காண மறுக்கும் தங்களை நினைக்கும் போது மாவோவின் இந்த கூற்று தான் நினைவுக்கு வருகிறது. ''எல்லா காலச் சூழ்நிலைகளிலும் போராடாமல் இருப்பதற்குக் கோழைகளுக்குக் காரணம் இருந்து கொண்டேயிருக்கும்'' என்பது தான்.

புலிகளின் வீரத்தைச் சொல்லும் போது, வலது கையை முட்டி மடித்து விறைத்துக் காட்டுபவர்கள், அதே போன்ற அடக்குமுறையின் இம்மியளவு தம்மீது வந்தால், அரண்டு போய் மந்திரம் ஓதி பேயை விரட்டும் நிலைக்குச் சென்று – களத்தில் நின்று கொண்டிருக்கும் மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்களை விமர்சனம் செய்து, எதையோ சாதிப்பதாக நினைத்து, தம் கோழைத் தனத்தை மறைத்து விட முயல்கிறார்கள். அதே இதழின் உள்ளே, புதிய ஜனநாயகம் பத்திரிக்கைக்குக் கண்டனம் எழுதியிருப்பதை இணைத்துதான் சொல்கிறேன்.

'பொடாவைக் கொண்டுவந்தவர்களில் வைகோவும் ஒருவர். அடக்குமுறை நோக்கத்தில் பொதுவில் ஒன்றுபடும் வைகோவும், ஜெ.வும், அதை உழைக்கும் மக்கள் மற்றும் ஜனநாயக சக்திகள் மீது ஏவப்படுவதை ஆதரிப்பவர்கள். ஜெ.வைப் பொருத்தவரை வைகோவையும் இதில் உள்ளடக்குவதின் மூலம், இதர ஜனநாயக, புரட்சிகர சக்திகளையும் ஒடுக்குவதற்கு தயவு தாட்சணியம் பார்க்காதவர் என்பதைத் தன் நடவடிக்கையின் மூலம் வெளிப்படுத்துகிறார்.

ஜெ.வின் இத்தகைய பாசிச நடவடிக்கைகளை வலுவான மக்கள்திரளோடு எதிர்க்க இயலாமல் நிற்கும் ஓட்டுக்கட்சிகளின் நிலையையும், குறைந்த பட்சம், இந்த ஓட்டுக்கட்சிகளிடமிருந்தும் கூட வைகோவின் கைதுக்கு வலுவான எதிர்ப்பு இல்லாதது என்பது, 'வைகோ தன்னுடைய பிழைப்புவாதத்தையும், சந்தர்ப்பவாதத்தையும் அவ்வளவு நிதர்சனப்படுத்தியவர்' என்ற வகையில் புதிய ஜனநாயகம் தலையங்கத்தை எம்மைப் போன்றோர்கள் புரிந்து கொண்டோம்.

கட்டுரையின் (பு.ஜ தலையங்கம்) இந்த சாரத்தைப் புரிந்து கொள்ளும் யாருக்கும் 'வைகோ உள்ளேயே கிடக்க வேண்டிய அத்வானியின் ஏஜன்ட்' என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஒவ்வொருமுறையும் ரிமாண்டிற்காக கோர்ட்டுக்கு அழைத்து வரும்போது, 'ஜெ.வின் போலீசு கையை, காலைப் பிடித்து வைத்துள்ள நிலையில்' 'நரம்புகள் புடைக்க, நாவடைக்க' பொடாவை ஆதரிப்பேன் என்று கர்ஜிக்கும் வைகோவை என்ன செய்ய வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ள 'மார்க்சியம், கருங்காலி தொழிலாளி' என்ற வரையறைக்கெல்லாம் கூடப் போக வேண்டாம். ஒரு தாடி வைத்த முசுலீமை, பா.ஜ.கவையும், பொடாவையும் புரிந்து கொண்ட ஒரு இந்துவை, காசுமீரில் உரிமைக்குப் போராடும் சராசரி மனிதன் ஒருவனை கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

ஆனால், வைகோவின் அரசியல் சந்தர்ப்பவாதத்தை, தொழிலாளர் வர்க்கப் போராட்டத்துடன் இணைத்துப் பார்க்கும் குரூரம் மணியரசன், தியாகு போன்றவர்களுக்கே மட்டுமே உரியது என்று நினைக்கிறேன். முதலாளியை எதிர்க்கும் போராட்டத்தில், கருங்காலித் தொழிலாளி வெளிப்படுகிறான் என்றால் வைகோவுக்கும், இந்துத்துவ பாசிச சக்திகளுக்கும் உள்ள உறவை அப்படி புரிந்து கொள்ள முடியுமா?

பா.ஜ.கவுடன் கூட்டுச் சேர்ந்ததை திராவிட இயக்க வரலாற்று வழிநின்று விளக்குவதிலும், பா.ஜ.க – ஆர்.எஸ்.எஸ் கும்பலின்

www.padippakam.com

பாசிச நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதிலும் மற்ற எவருக்கும் முன்நிற்கும் வைகோ; மற்றும் அவரது கட்சியும் அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள நிலையில், 'பொடாவைக் கொண்டு வந்த பொறுப்பை' எப்படி வைகோவிடமிருந்து விலக்கிப் பார்க்க முடியும்?




இந்த அளவுகோலில் தான் பு.ஜ. தலையங்கம், ம.க.இ.க. சுவரொட்டிகள், ''பொடாவை ஆதரித்த குற்றத்திற்கு வைகோ மன்னிப்பு கேட்டால் விடுதலைக்குக் குரல் கொடுப்போம்'' என்ற கருத்தை மக்களிடம் பிரச்சாரமயப்படுத்தியது. இதற்கு நேரடியாக முகம் கொடுக்காத ''தமிழர் கண்ணோட்டம் ''வைகோ உள்ளே கிடக்கட்டும்'' என்ற வாசகத்தை மட்டும் உருவிப் போட்டு, வழக்கம் போலவே சாரமான அரசியல் விமர்சனத்திலிருந்து திசைதிருப்புகிறது.

'தமிழன்' 'தமிழுணர்வு' என்று பேசுவது, வெற்று முழக்கமாகவே இருப்பதை தங்கள் அரசியல் செயல்பாட்டிலிருந்து புரிந்து கொள்ள முடியும். 'தன்மானத் தமிழர்' என்று பு.ஜ கொள்வதில் தங்கள் கட்டுரையாளர் உள்நோக்கம் கற்பிக்கிறார். சுரண்டப்படும் உழைக்கும் மக்களை, ஒடுக்குமுறை அல்லது அடக்குமுறைக்கு எதிராக உணர்வு பெறக் குரல் கொடுப்பதில் உள்ள அரசியல் முக்கியத்துவத்தைப் பார்க்காமல் 'வார்த்தைகளில் தொங்கி நின்று பேசும் அரசியல் பிரசண்டத்தை, ரசியாவில் சமூக ஜனநாயக வெறியர்களிடம் இருப்பதை லெனின் சுட்டிக் காட்டுவார். 'சிந்தனைக்கு வழியில்லாத போதும்', 'போராட வக்கில்லாத போதும்' சொற்கள் நேசிக்கத்தக்க அரசியல் ஆகிப் போனது ஆச்சரியத்துக்கு உரியது அல்ல.

இந்து என்ற பெயரைப் பயன்படுத்தி, பெரும்பான்மை மக்களின் பொதுவான மதம் சார்ந்த பண்பாட்டு அடையாளங்கள் மீது தன் வகுப்புவாத பாசிசத்தைப் புகுத்தும் பா.ஜ.க.வின் செயலை எதிர்த்து, 'இந்து மக்களே எச்சரிக்கை' என்று விநாயகர் ஊர்வலத்தில் புகுந்து பிரசுரம் விநியோகிக்கும் ம.க.இ.கவினர் இந்துமத ஆதரவாளர்களா?

பா.ஜ.க கும்பலின் மறுகாலனியாதிக்கச் சேவை; அதைத் தீவிரமாக அமல் செய்யும் ஜெ.வின் நடவடிக்கையால் இன்று எல்லா பிரிவு மக்களும், தறிநெசவாளர்கள், கூலிவிவசாயிகள் முதற்கொண்டு ஆசிரியர்கள், வங்கி ஊழியர்கள் வரை போராடிக் கொண்டிருக்கும் போது, இந்தப் பிரச்சினைகளுக்கு குறைந்தபட்சம், தம் தமிழ்த்தேச நிலைப்பாட்டிலிருந்து ஒரு தீர்வு சொல்வதை விட்டு, 'தமிழில் கலைச் சொல்லாக்கம்' என்று அரட்டை மடக்கச்சேரிக்கு ஆள் சேர்த்துக் கொண்டிருப்பது தான் தடையுடைக்கும் தமிழ்த் தேசியச் செயற்பாடா?

நெடுமாறன் கட்சி தடை செய்யப்பட்டபோது கருணாநிதி குரல் கொடுக்கவில்லை, ராமதாஸ் வாய்திறக்கவில்லை என்று அங்கலாய்க்கும் தமிழர் கண்ணோட்டம், ஏன் நெடுமாறன் கட்சியில் இருந்து போராட ஒரு ஆள் இல்லை என்பதைப் பரிசீலிக்கும் நேர்மையுண்டா? அதுபோன்ற நிலையில் தான் தன்னுடைய கட்சியையும் வைத்துக் கொண்டு, போலி வீராப்பு மட்டும் பேசுவதேன்? தேர்தலில் போட்டியிடுவதில்லை என்ற 'ஒழுக்க வாதம்' தவிர, தங்களை எந்த வகையில் ஓட்டுக் கட்சிகளிடமிருந்து வேறுபடுத்துகிறது?

உண்மை இப்படியிருக்க, 'ஜெ.வின் அரசியலை எதிர் கொள்ளும் ஆற்றல் தி.மு.க, ம.தி.மு.க தலைமைக்கு இல்லை; இனவுணர்வுடன் இருக்கும் வட்டாரத்தலைவர்கள், தொண்டர்களுக்கு இருக்கிறது' என்று பசப்புகிறீர்கள். சாராயக் கடையை ஏலம் எடுத்து வைத்திருப்பவன், கந்துவட்டிக்காரன், கட்டப்பஞ்சாயத்து தாதா, பிள்ளைகளை ஆங்கிலத்தில் படிக்க வைத்து மருத்துவம், இஞ்சினியரிங் சீட்டுக்கு ஆளும்கட்சியோடு கள்ள உறவு வைத்துக் கொள்பவன் — இவர்களைத் தாண்டி 'இனவுணர்வாளன். யோக்கியனை'க் காட்ட முடியுமா? 'பான்பராக் போட்டு, சினிமாக் கொட்டைகைகளில் விழிபிதுங்கிக் கிடப்பவர்களைத் தவிர, தொண்டர்கள் என்று சொல்லிக் கொள்ள எவரேனும் உண்டா? திரைப்பட நடிகனின் ரசிகர்களைப் போலத்தான் இந்தக் கட்சிகளின் அணிகளும் இருக்கிறார்கள். இதைப் புரிந்து கொள்ள பூதக்கண்ணாடி எதுவும் வேண்டாம். சரத்குமார், ராஜேந்தர் ரசிகர்கள் 'இயற்கையாகவே' தி.மு.க உறுப்பினர்கள் தான்!

நீங்கள் குறிப்பிடுகின்ற 'இந்திய தேசியம்' பேசுகின்ற கட்சிகள், வாஜ்பாய் மந்திரிசபையில் அங்கம் வகிக்கும் கட்சிகளிலிருந்தெல்லாம் பா.ஜ.க வின் வகுப்புவாத வெறியாட்டத்துக்கும், அடக்குமுறைக்கும் இரண்டாம் மட்டத் தலைவர்களிடமிருந்து எதிர்ப்புகள் வந்தன. குஜராத் சிறுபான்மை மக்கள் படுகொலையின் போது பஸ்வான் வெளியேறினார், நாயுடு கட்சியில் இருந்து எதிர்ப்பு; பகுஜன் சமாஜ் கட்சியில் இருந்து ஒருவர் வெளியேறினார் என்றெல்லாம் பத்திரிகைகளில் 'சலசலப்பு' என்ற பெயரில் செய்தி வந்த போது, தி.மு.க, ம.தி.மு.க கட்சி அணிகளிடம் இருந்து எதிர்ப்பு, பொதுக்குழுவில் கூட வராது போனதேன்?

''திராவிட இயக்கக் கொள்கைகள் என்றால் என்ன? பேசுபவனுக்கும் தெரியாது; கேட்பவனுக்கும் தெரியாது'' என்று ஏளனம் செய்து, பெரியாரையும், திராவிட இயக்கத்தையும் ஊர்கள் தோறும் பேசித்திரியும் இராம.கோபாலனுக்கு ஒரு 'மொட்டைக் கடிதம்' போடும் ஆற்றலாவது, 'இனவுணர்வுள்ள' தொண்டனுக்கு இருக்கிறதா? நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள்.

தாங்கள் உண்ணாவிரதம் இருந்தால் மேடை, மைக்செட்டும், ஊர்வலம் போனால் டீ, வடையும் ஏற்பாடு செய்தால் அவர்கள் இன உணர்வாளர்களா? தங்கள் வாதப்படியே இனவுணர்வாளர்கள் என்று வைத்துக் கொண்டாலும் வைகோ, ராமதாஸ், கருணாநிதி போன்றோரின் துரோகத்தை அம்பலப்படுத்துவதன் மூலம் தானே அவர்களை அந்த மாயையிலிருந்து மீட்க முடியும். தங்கள் நலம் விரும்பியே சொல்கிறேன்; தமிழ்த் தேசிய இலட்சியத்திற்கு வேறெப்படி ஆள் சேர்க்க முடியும்?

**— உண்மையுடன்**
**சுகதேவ்**


படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## பஞ்சாயத்து இராஜ்ஜியமா? ஆணாதிக்க வக்கிரமா?

மத்தியப் பிரதேச மாநிலத்திலுள்ள சங்கரிகலா கிராமத்தைச் சேர்ந்தவர் புவனேசுவரி தேவி. பள்ளி ஆசிரியையான இவர் மீது, கள்ள உறவு வைத்திருப்பதாக அக்கிராம பஞ்சாயத்துக் குற்றம் சுமத்தியது. பஞ்சாயத்துத் தலைவரும், உறுப்பினர்களும் இக்குற்றச்சாட்டை நிரூபிக்கும் விதமாக எந்த ஆதாரத்தையும் முன் வைக்கவில்லை. அதே சமயம், கிராம பஞ்சாயத்து சபை, புவனேசுவரியைக் கும்பலாகப் பாலியல் பலாத்காரம் செய்ய வேண்டும் எனத் தீர்ப்பளித்தது. அச்சட்ட விரோத, காட்டுமிராண்டித்தனமான தீர்ப்பை எதிர்த்து பல்வேறு பெண்ணுரிமை அமைப்புகளும் போராட்டத்தில் குதித்தன. இதன் பிறகு முழித்துக் கொண்ட மாவட்ட நிர்வாகம், கிராம பஞ்சாயத்து புவனேசுவரியைத் தகாத வார்த்தைகளால் திட்டியதாக, உப்புக்குச் சப்பாணி வழக்கைப் போட்டு, பஞ்சாயத்துத் தலைவரையும், உறுப்பினர்களையும் கைது செய்வதாக பாவ்லா காட்டி விட்டு, உடனே அவர்களைப் பிணையில் விட்டு விட்டது.

## வரதட்சணை பேய்க்கு போலீசின் பாதுகாப்பு

அனைத்திந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் பஞ்சாப் மாநிலக் கிளை, அம்மாநிலத்தின் சங்க்ரூர் மாவட்டத்திலுள்ள தனவ்லா என்ற நகரில், பல்வேறு மக்கள் திரள் அமைப்புகளுடன் இணைந்து, வரதட்சணைப் படுகொலைகளைக் கண்டித்து பேரணியொன்றை நடத்தியது. இப்பேரணியை எப்படியாவது தடுத்துவிட வேண்டும் எனத் திட்டம் போட்ட சங்க்ரூர் மாவட்ட போலீசார், ஊர்வலத்தினுள் புகுந்து கலாட்டா செய்வதற்காக, ஒரு துணைக் கண்காணிப்பாளரை சிவிலியன் உடையில் அனுப்பி வைத்தனர். போலீசின் இச்சதித் திட்டம் தோல்வியடையவே, அமைதியான முறையில் நடந்த ஊர்வலத்தின் மீது வேண்டுமென்றே தாக்குதல் நடத்தினர். போலீசார் நடத்திய இக்காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் 10 பேர் படுகாயமடைந்து, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஊர்வலத்தைத் தலைமை தாங்கி நடத்தியவர்கள் மீது, கொலை முயற்சி உள்ளிட்ட எட்டு வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன.

## தீண்டாமையே இந்து மதத்தின் வேர்

இராசஸ்தான் மாநிலத்திலுள்ள சக்வாடா கிராமத்தைச் சேர்ந்த ''ஜாட்'' சாதி வெறியர்கள், அக்கிராமத்திலுள்ள பொதுக் குளத்தைத் தாழ்த்தப்பட்டோர் பயன்படுத்துவதற்கும், அக்கிராமக் கோவிலினுள் தாழ்த்தப்பட்டோர் நுழைவதற்கும் தடை விதித்துள்ளனர். இத்தீண்டாமையை எதிர்த்து, தாழ்த்தப்பட்டோர் தலித் மனித உரிமை மையம் எனும் அமைப்பின் கீழ் திரண்டு, சாக்சு என்ற ஊரில் இருந்து சக்வாடா வரை பாதயாத்திரை நடத்த முற்பட்டனர். இப்பாதயாத்திரையைத் தோற்கடிக்கும் முகமாக ஜாட் சாதி வெறியர்கள் ஒன்று திரண்டு, சக்வாடா கிராமக் குளத்தைச் சுற்றி வளையம் அமைத்துக் கொண்டு, இராம நாமத்தை ஜெபிக்கத் தொடங்கினர்; மேலும், பாதயாத்திரையை வழி மறித்து, தாழ்த்தப்பட்டோரின் மீது கற்களை வீசியெறிந்து தாக்கவும் செய்தனர். போலீசார் இப்பாதயாத்திரைக்குப் பெயரளவுக்கே பாதுகாப்பு கொடுத்ததால், தாழ்த்தப்பட்டோர் பாதயாத்திரையைப் பாதியிலேயே கைவிட நேர்ந்தது.

மாடு குளிக்கும் சக்வாடா கிராமக் குளத்தில் தாழ்த்தப்பட்டோர் இறங்கத் தடை.



## மக்களுக்கு நாமம் முதலாளிகளுக்கு இலாபம்

இந்திய மக்கள் வங்கிகளில் போட்டு வைக்கும் சேமிப்பிற்கான வட்டியும், தொழில் தொடங்கக் கொடுக்கப்படும் மூலதனக் கடனுக்கான வட்டியும் கடந்த சில ஆண்டுகளாகவே மைய அரசினால் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த வட்டிக் குறைப்பு நடுத்தர மக்களின் தலையில் இடியாக இறங்கினால், தரகு முதலாளிகளுக்கோ கொழுத்த இலாபத்தை அள்ளிக் கொடுக்கிறது. இந்த வட்டிக் குறைப்பால், கடந்த நிதி ஆண்டில் மட்டும் 2,270 நிறுவனங்கள் 4,100 கோடி ரூபாய் கூடுதல் இலாபமடைந்துள்ளன. ஏப்பரல் 2002 தொடங்கி ஜூன் 2002க்குள், மூன்றே மாதங்களில் 802 நிறுவனங்கள் 1,138 கோடி ரூபாய் இலாபமடைந்துள்ளன. வங்கி வட்டி வீதம் குறைக்கப்பட்டிருக்காவிடில், இந்த நிறுவனங்களின் இலாபம் 46 சதவீதத்துக்குப் பதில் 14 சதவீதம்தான் இருந்திருக்கும் என்றும், 77 நிறுவனங்கள் நட்டமடைந்திருக்கும் என்றும் கூறப்படுகிறது.

## பங்குச் சந்தை மோசடிக்கு ஆயிரம் வழிகள்

இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேசன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேசன் ஆகிய இரு பொதுத்துறை நிறுவனங்களைத் தனியாருக்கு விற்பதை மைய அரசு தள்ளிப் போட்டிருப்பது, தரகு முதலாளிகளுக்கு வருத்தம் அளித்தாலும், அவர்கள் வேறொரு குறுக்கு வழியில், இந்த இரு நிறுவனங்களின் மூலம் 500 கோடி ரூபாய் இலாபமடைந்துள்ளனர். இந்த இரு நிறுவனங்களை விற்க மைய அரசு முடிவு செய்தவுடனேயே, இந்துஸ்தான் பெட்ரோலியத்தின் பங்கு மதிப்பு 187 ரூபாயில் இருந்து 300 ரூபாயாகவும், பாரத் பெட்ரோலியத்தின் பங்கு மதிப்பு 220 ரூபாயில் இருந்து 290 ரூபாயாகவும் உயர்ந்தது. மைய அரசு இந்த நிறுவனங்களை விற்கும் முடிவைத் தள்ளிப் போடுவதற்குள்ளாகவே, பல இலட்சம் பங்குகள் விற்கப்பட்டுள்ளன. இவ்விற்பனை மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பங்குச் சந்தை நிறுவனங்கள் அடித்திருக்கும் கொள்ளை 500 கோடி ரூபாய் இருக்குமென்றும், இது இன்னுமொரு பங்குச் சந்தை ஊழல் என்றும் கூறப்படுகிறது. ●

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER NO.42848/85
www.padippakam.com
Regn.No.TN/Chief.PMG-544/2002

# இதுதான் இன்றைய இந்தியா



சென்னையில் உள்ள அமெரிக்கன் சர்வதேசப் பள்ளி வசதிகளற்ற வாடகைக் கட்டிடத்தில் நடைபெற்று வருவதைக் கேள்விப்பட்டுப் பதைபதைத்துப் போன ஜெயா, அப்பள்ளிக்கு தரமணியில் 10 ஏக்கர் நிலத்தை ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார். அங்கு 1.76 இலட்சம் சதுர அடியில் உருவாக இருக்கும் அப்பள்ளியின் மாதிரியைதான் ஜெயா இந்தப் படத்தில் பார்வையிடுகிறார்.

குளுகுளு வசதி செய்யப்பட்ட வகுப்பறைகள், நூலகம், பரிசோதனைச் சாலைகள்... என இப்பள்ளியில் அமையவுள்ள வசதிகளை அடுக்கிக் கொண்டே போகிறார்கள். சென்னையைச் சேர்ந்த பணக்கார வீட்டுப் பிள்ளைகள் கூட இந்தப் பள்ளியில் அடியெடுத்து வைக்க முடியாது. பன்னாட்டு நிறுவனங்களிலும், வெளிநாட்டுத் தூதரகங்களிலும் வேலை பார்க்கும் வெள்ளைக்காரர்களின் குழந்தைகளுக்காகவே இந்தப் பள்ளி உருவாக்கப்படுகிறது. காலனி ஆட்சிக் காலத்தில் இருந்ததைப் போல, இந்தப் பள்ளியின் வாசலில், "இந்தியர்களும், நாய்களும் நுழையக்கூடாது" என போர்டு வைக்காததுதான் பாக்கி.

"இந்தப் பள்ளி தமிழ்நாட்டிற்கே பெருமை; இப்படிபட்ட பள்ளிகள் இருந்தால்தான் அந்நிய முதலீட்டைக் கவர முடியும். இந்தப் பள்ளியைத் தமிழ்நாட்டில் அமைத்ததன் மூலம், அந்நிய முதலீட்டாளர்கள் மத்தியில் சென்னைக்கு முக்கியத்துவம் கூடிவிட்டது" எனத் தம்பட்டம் அடித்துக் கொள்கிறார், ஜெயா.

அமெரிக்க டாலரோடு வரும் வெள்ளைக்காரனின் குழந்தைகளின் படிப்பு பற்றி இத்துணை கரிசனப்படும் ஜெயா, அதில் ஒரு சிறு துளியாவது, தமிழகக் குழந்தைகளின் படிப்பு பற்றிக் காட்டுகிறாரா?

இதோ இந்தப் படத்தில் நாம் காண்பது காஞ்சிபுரம் மாவட்டம் ஆண்டார் குப்பம் கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி. "ஆயிரம் கண்ணுடையாளாக" இருக்கும் கூரையைப் பார்த்தே, இந்தப் பள்ளியில் எந்த அளவிற்கு அடிப்படை வசதிகள் இருக்கும் என்பதைப் புரிந்து கொண்டு விடலாம்.

சத்தியமங்கலம் ஆர்.எம்.பி. நகர் ஆரம்பப்பள்ளி மாணவர்கள் ஆண்டார் குப்பம் பள்ளியைப் பார்த்தால் பொறாமைப்படுவார்கள். ஏனென்றால், ஆர்.எம்.பி. நகர் ஆரம்பப்பள்ளியில் கரும்பலகை கூடக் கிடையாது.

ஆண்டார்குப்பம் பள்ளியில் 239 மாணவர்கள் படிக்கிறார்கள். பெரும்பாலான மாணவர்கள் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்கள். ஆறு ஆசிரியர்கள் பணிபுரிய வேண்டிய இப்பள்ளியில், இரண்டு ஆசிரியர்கள் தான் இந்த 239 மாணவர்களையும் கட்டி மேய்க்கிறார்கள்.



ஆண்டார்குப்பம் பள்ளியிலாவது இரண்டு ஆசிரியர்கள் இருக்கிறார்கள். தமிழகத்திலுள்ள 1500 ஆரம்பப் பள்ளிகளில் ஒரே ஒரு ஆசிரியர்தான் இருக்கிறார். ஒரே ஒரு ஆசிரியர் மட்டும் இருந்த 43 ஆரம்பப் பள்ளிகளை, சமீபத்தில் ஒரேயடியாக இழுத்து மூடிவிட்டது தமிழக அரசு. ஐந்து ஆசிரியர்களைக் கொண்டு இயங்கி வந்த 18,000 கிராமப்புற ஆரம்பப் பள்ளிகள் சமீபத்தில் ஈராசிரியர் பள்ளிகளாக மாற்றப்பட்டு விட்டன.

ஆரம்பப் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து தர மறுப்பது; ஆரம்பப் பள்ளிகளில் ஆசிரியர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது — என அடிமேல் அடி கொடுத்து இப்படி அரசு ஆரம்பப் பள்ளிகளைப் படிப்படியாக மூடிவிடும் சதியைப் பிண்ணுகிறார், ஜெயா. அதன் மூலம் அரசு ஆரம்பப் பள்ளிகளை மட்டுமே நம்பியிருக்கும் 55 இலட்சம் ஏழை மாணவர்களை மெட்ரிகுலேஷன் பள்ளிகளை நோக்கித் தள்ளுகிறார். காசுக்காரன் பிள்ளை மட்டும்தான் இனி "அ.ஆ" கூடக் கற்க முடியும் என்ற நிலையை உருவாக்கத் தீவிரமாக முயலுகிறது பார்ப்பன ஜெயா கும்பல்.

அன்று குருகுலம்; இன்று தனியார் மெட்ரிகுலேசன் பள்ளி; சர்வதேசப் பள்ளி. அன்று மேல்சாதிகாரனுக்கு மட்டும் தான் கல்வி; இன்று காசிருப்பவனுக்கு மட்டும்தான் கல்வி. "தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஏழை மக்களின் உழைப்பு மட்டும் வேண்டும்; ஆனால், அவர்களுக்குக் கல்வியறிவு தேவையில்லை" என்று பார்ப்பன ஜெயா கும்பல் சொல்லாமல் சொல்லுகிறது. தனியார்மயம் என்ற போர்வைக்குள் புகுந்துவரும் இந்த நவீன மனுதர்மம், ஏழைக் குழந்தைகளைத் தற்குறிகளாக்கி வருவதை இனியும் அனுமதிக்கலாமா?